# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 131 பங்குனி 23ஆம் நாள் வெள்ளிக்கிழமை 06 ஏப்ரல் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## 'மெடிக்ஸ் 2018' 'செயலி' அறிமுகம்

*மருத்துவம் சார் கற்கைகளை அறிய*

யாழ்ப்பாணம், ஏப். 6
'மெடிக்ஸ் 2018' என்ற 'செயலி' ஒன்று >> 24

## தவறவிடப்பட்ட பட்டதாரிகளும் உள்வாங்கப்படுவர்

யாழ்ப்பாணம், ஏப். 6
பட்டதாரி பயிலுநர் நியமனத்துக்கான நேர்முகத் தேர்வில், தவறவிடப்பட்ட பட்ட >> 06

## வீதி விதி மீறினால் சம்பவஇட தண்டம்

*ரூ.500 – ரூ. 3,000 வரை*

கொழும்பு, ஏப். 6
வீதி விதிமுறைகளை மீறும் சாரதிகளுக்கு சம்பவ >> 24

புதிய அரசமைப்பு ஊடாக விரைவான தீர்வு கிட்டாவிட்டால்

## கடும் நிலைப்பாட்டை எடுக்கவேண்டியிருக்கும்

ஐரோப்பிய ஒன்றியக் குழுவிடம் இரா.சம்பந்தன் வலியுறுத்து



கொழும்பு, ஏப். 6
புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு விரைவாக ஒரு தீர்வை எட்ட >> 06

மாணவியான சிறுமியை

## வன்புணர்ந்த ஆசிரியருக்கு 20 வருடங்கள் கடூழியச் சிறை

வவுனியா மேல்நீதிமன்று நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 6
16 வயதுச் சிறுமியை வன்புணர்ந்த ஆசிரியருக்கு வவுனியா மேல்நீதிமன்று 20 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது நேற்று. மாணவிக்கு இழப்பீடாக 5 லட்சம் ரூபா வழங்க வேண்டும் என்றும் நீதிமன்று உத்தரவிட்டது.
வவுனியா நெடுங்கேணிப் பொலிஸ் பிரிவில் 2014ஆம் ஆண்டு ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக் >> 06

முல்லைத்தீவு மாவட்டத்தில்

# சிங்களக் குடியேற்றங்களை எதிர்த்துப் பெரும் போராட்டம்

*எதிர்வரும் 10 ஆம் திகதி நடத்த மாகாண சபையில் முடிவு*

. யாழ்ப்பாணம், ஏப்ரல்6
வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்க வலியுறுத்தி வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் தலைமையில் எதிர்வரும் 10ஆம் திகதி முல்லை மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறும் என வடக்கு மாகாண அவைத் தலைவர் தெரிவித்தார். >> 06

## தீவகத்திலிருந்து படகு மூலம் யாழ். நகருக்கு மாடு கடத்தல்

புத்தளத்தைச் சேர்ந்தவர்களும் கைது

யாழ்ப்பாணம், ஏப். 6
தீவகத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வீதி ஊடாக மாடு கடத்தப்படுவதைக் கட்டுப்படுத்த தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிலையில், படகுமூலம் மாடுகளை கடத்தும் புதிய யுக்தியை கடத்தல்காரர்கள் பின்பற்றத் >> 25

## 220 கிலோ கஞ்சாவுடன் சிலாபத்தில் இருவர் கைது



யாழ்ப்பாணம், ஏப். 6
யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு செல்லப்பட்ட 220 கிலோகிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. இரண்ட >> 24

## சிங்களக் குடியேற்றங்களை தடுக்க எம்.பிக்களுடன் பேச்சு

*விரைவில் ஏற்பாடு செய்யப்படும் என வடக்கு அவைத் தலைவர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஏப்.6
வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்க வடக்கில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மாகாண சபை உறுப்பினர்களுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்படும் என்று சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்டு மேற் >> 24

## போராட்ட களம் செல்வதற்கு சிறந்தது பிக்கப்பா, காரா?

*நேற்றைய அமர்வில் அதுதொடர்பிலும் ஆராய்வு*

யாழ்ப்பாணம், ஏப்.6
முல்லைத்தீவு மாவட்டத்தில் நடக்கும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்கக் கோரி இடம்பெறவுள்ள போராட்டத்துக்கு பிக்கப்பில் போகலாமா? அல்லது காரில் போக >> 25

உரிய தகைமை இருப்பின்

## மறுவாழ்வு அளிக்கப்பட்டோர் இ.போ.சவில் வேலை பெறலாம்

*பிரதி அமைச்சர் நேற்றுஅறிவிப்பு*

கொழும்பு, ஏப். 6
மறுவாழ்வு வழங்கப்பட்ட போராளிகளில் உரிய தகுதி உள்ளவர்களுக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை மூலமாக வடக்கில் வேலை வாய்ப்புகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்ப >> 24

ஐ.தே.கவின்

## மாற்றத்துக்கு வழிவிட்டு பதவி துறந்தார் கபீர்

கொழும்பு, ஏப். 6
ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலர் பதவியிலிருந்துநான்விலகிவிட்டேன். இவ்வாறு அமைச்சர் கபீர் ஹாசீம் நேற்று அறிவித்தார்.
உள்ளூராட்சித் >> 06



## புதிய பயணம் ஆரம்பம்

*வெற்றிக் கொண்டாட்டத்தில் ரணில் தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 6
பலமான அபிவிருத்தித் திட்டங்களுடன் எமது புதிய பயணம் ஆரம்பமாகவுள்ளது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்து எனக்கும், அரசுக்கும் ஆதரவ >> 24

## வலி.வடக்கில் 650 ஏக்கர் ஏப்.16ஆம் திகதி விடுவிப்பு

*பருத்தித்துறை – பொன்னாலை, மயிலிட்டி – கட்டுவன் வீதிகளும் விடுவிப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 6
கட்டுவனிலிருந்து மயிலிட்டிச் சந்தி வரையிலான முதன்மை வீதியில், இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள 4 கிலோ மீற்றர் நீளமான வீதி எதிர்வரும் 16ஆம் திகதி விடு >> 24

## சாவகச்சேரி பிரதேச சபை தமிழ்க் கூட்டமைப்பின் வசம்

*ஈ.பி.டி.பி., சு.க., ஐ.தே.க. ஆதரவு*

சாவகச்சேரி, ஏப்.6
சாவகச்சேரிப் பிரதேச சபையின் ஆட்சியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றுக் கைப்பற்றியது. ஈ.பி.டி.பி., சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐ.தே.க., தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி அதற்கு ஆதரவளித்தன.
சபையின் முதல் >> 06




# மகாவலி அதிகார சபையை தடுக்க புதிய சட்டம் தேவை

## வடக்கு முதலமைச்சர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஏப்.6

மகாவலி அதிகார சபைக்கு உள்ள அதிகாரத்துக்காக புதியதொரு சட்டத்தை மாகாண சபைகளுக்கு அளிக்கப்பட்ட பதின்மூன்றாம் திருத்தச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகத் தயாரித்து ஏற்ற பின்னரே மகாவலி அதிகார சபைச் சட்டத்தில் கைவைக்க முடியும் என கொழும்பு அரசு கூறுகின்றது. அதற்கிடையில் மகாவலி அதிகார சபை முல்லைத்தீவை முற்றிலும் தன்வசம் கொண்டு வந்துவிடும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான வடக்கு மாகாண சபையின் சிறப்பு அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:

மகாவலி சட்டத்தின் பிரிவு 3ன் கீழ் மகாவலிக்குப் பொறுப்பான அமைச்சர் அரச தலைவர் ஒப்புதலுடன் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் கட்டளையின் மூலம் எந்த ஒரு நிலப் பகுதியையும் விசேட நிலப்பகுதியாகப் பிரகடனப்படுத்தலாம். அந்தக் கட்டளைக்கு நாடாளுமன்றத்தால் பின்னர் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும். பிரகடனப்படுத்தப்பட்ட விசேட நிலப்பரப்பில் பிரிவு 13இன் கீழ்க் குறிப்பிடப்படும் பலதையும் செய்யலாம். 36 விடயங்கள் பிரிவு 13இல் அடையாளம் காட்டப்பட்டுள்ளன. முக்கியமாக அந்தப் பிரிவின் கீழ் மகாவலி அதிகார சபையானதுஒரு விசேட நிலப்பரப்பினுள் காணப்படும் காணிகளில், தோட்டங்களில் அல்லது நிலப் பகுதியில் மக்களைக் குடியிருத்த சகல நடவடிக்கைகளையும் எடுக்க முடியும். அவ்வாறுகுடியேற்றப்படுவோர் தாம் பெற்ற காணிகளை, தோட்டங்களை, நிலப்பகுதிகளை மேம்படுத்துவதற்கு அதிகாரசபை அவர்களுக்கு சகல பண உதவிகளையும் மற்றைய உதவிகளையும் நல்கலாம்.

எவ்வாறானவர்களைக் குடியேற்றலாம் என்று கூறப்படவில்லை. சர்வதேச நியமனங்களின் படி நிலப் பகுதிகளைச் சுற்றியிருக்கும் பிரதேசங்களில் இருப்பவர்களுக்கே முன்னுரிமை கொடுக்கவேண்டும். அவ்வாறு கொடுக்காமல் வடமாகாணத்துக்கு வெளியில் இருந்தே மக்களைக் கொண்டு வந்து மகாவலி அதிகார சபை வடமாகாணத்துக்குள் குடியேற்றியுள்ளது.

1987ஆம் ஆண்டில் 13வது திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தபோது மாகாணங்களுக்கு சில உரித்துக்கள் கொடுக்கப்பட்டன. முக்கியமாக அரச காணிகள் சம்பந்தமாக பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு மாகாண சபைகளையே சாரும் என்று அரசியல் யாப்பில் மாகாண சபையின் அதிகாரங்களைப் பட்டியல் இட்டு கூறும் விடயங்களுள் காணி சம்பந்தமான 18ஆவது விடயத்தின் கீழ் குறிப்பிட்ட 2ஆவது அட்டவணையின் 2:4 என்ற விடயத்தின் கீழ் கூறப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டம் அரசியல் யாப்பின் ஒரு அங்கமே. சட்டப்படி அரசியல் யாப்பே மற்ற எல்லாச் சட்டங்களையும்விடக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது. அப்படி இருந்தும் 1979ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மகாவலி அதிகார சபைச் சட்டம் எதனையும் கணக்கில் எடுக்காது தான்தோன்றித் தனமாக தனது வேலைகளைச் செய்து கொண்டு போகின்றது. காணிகளைக் கைவசம் வைத்திருப்பது மட்டுமன்றி பயனாளிகளுக்குக் கைமாற்றவும் அது உரித்து கொண்டிருக்கின்றது.

கொக்குத்தொடுவாய் வி்வசாயக் காணிகள் பற்றி சில விவரங்களைத் இங்கு வெளிப்படுத்த விரும்புகிறேன். நாயாறு கடல் ஏரிக்குத் தெற்கே 6 கிராமஅலுவலர் பிரிவுகள் உள்ளன. கொக்குத்தொடுவாய் கிராமமும் அதனுள் அடங்கும். போர் காரணமாக அந்தப் பகுதியில் இருந்தவர்கள் 1984ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இடம் பெயர்ந்தார்கள். சுமார் 27 வருட காலமாக முல்லைத்தீவுப் பகுதிகளில் இடம் பெயர்ந்திருந்தார்கள். பல இடங்களில் அவர்கள் தற்காலிகமாக குடியிருக்க வேண்டியிருந்தது. பொதுவாக அவர்கள் விவசாயிகளே. சிலர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவர்கள். அவர்கள் பாரம்பரியமாக கடலோரத்தில் வாழ்ந்து வந்திருந்தாலும், அவர்களின் விவசாய நிலங்கள் கொக்கிளாய் கிராமத்திற்கு வடக்கிலும் மேற்கிலும் இருந்தன.

இவை காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 1950, 1966, 1971 மற்றும் 1977ஆம் ஆண்டுகளில் அவர்களுக்குக் கிடைத்த காணிகள். இவர்கள் இடம் பெயர்ந்து சென்று கொண்டிருந்த காலகட்டத்தில் 15.04.1988ஆம் திகதியன்று இவர்களின் காணிகள் மகாவலி திட்டத்தின் கீழ் மகாவலி அதிகாரசபையின் "எல்"வலையத்துக்குச் சொந்தமான காணிகள் என்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டன.

மக்கள் தமது பாரம்பரியக் காணிகளை இழந்தனர். அந்தக் காணிகள் மகாவலிக் காணிகளாக மாறின. 2013ஆம் ஆண்டு இந்த மக்கள் தமது காணிகளுக்கு திரும்பிய போது அவர்களின் விவசாய நிலங்கள் மகாவலி அதிகார சபையால் வெளியில் இருந்து வந்தவர்களுக்கு "எல்" வலையத்தின் கீழ் குடியேற இடமளிக்கப்பட்டிருந்தனர்.

எல்எல்ஆர்சியானது இவர்களின் காணிகள் திரும்ப அவர்களுக்கே கையளிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்திருந்தும் அவர்களின் காணி அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

வேறு காணிகளில் இவர்கள் குடியேற அனுமதிக்கப்பட்டிருந்தும், இன்று வரையில் அவர்களுக்கு புதிய காணிகள் சம்பந்தமாகக் கூட உரிய உரித்தாவணங்கள் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். முன்னர் அவர்களுக்கிருந்த விவசாய நிலங்களைத் திரும்பிக் கொடுக்க முடியாவிட்டால் வேறு விவசாய நிலங்கள் அவர்களுக்கு மாற்றீடாகக் கொடுக்கப்பட்டு உரித்தாவணங்களும் வழங்கப்பட வேண்டும். இவை கிடைக்குமா?

அரசால் காணி அபகரிப்பு முல்லைத்தீவு - வவுனியா மாவட்டங்களில் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. அதனால்தான் இன்று இந்த விசேட அமர்வை ஒழுங்குபடுத்தியுள்ளோம். கரைதுறைப்பற்றின் காணிகள் யாவும் மகாவலியால் விழுங்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே மணலாறு வெலிஓயா ஆகிவிட்டது. ஒருமித்த எங்களின் நடவடிக்கைகளால்தான் ஓரளவுக்கு இதைத் தடுத்து நிறுத்தலாம்.

அண்மையில் அமைச்சர் மங்கள சமரவீரவை சந்தித்த போது மகாவலி அதிகார சபைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று கோரியிருந்தேன். அவர் அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்று உத்தரவாதம் அளித்தார். ஆனால் அது அவ்வளவு சுலபமன்று. புதியதொரு சட்டத்தை மாகாண சபைகளுக்கு அளிக்கப்பட்ட பதின்மூன்றாம் திருத்தச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகத் தயாரித்து ஏற்ற பின்னரே, மகாவலி அதிகார சபைச் சட்டத்தில் கைவைக்க முடியும். அதற்கிடையில் முல்லைத்தீவை முற்றிலும் தன்வசம் கொண்டு வந்துவிடும் மகாவலி அதிகார சபை. இது தான் யதார்த்தம் - என்றார். (ற-8)

# மாகாண சபையின் தவறாலேயே ஆக்கிரமிப்புகள் தொடர்கின்றன

## வடக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.6

வடக்கு மாகாண சபை எல்லைக் கிராமங்களில் அபிவிருத்திகளை மேற்கொள்ளாது மிகப் பெரிய தவறை விட்டுள்ளது. அதனாலேயே அங்கு ஆக்கிரமிப்புக்கள் இடம் பெறுகின்றன. இவ்வாறு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் சிவநேசன் சுட்டிக்காட்டினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான வடக்கு மாகாண சபையின் சிறப்பு அமர்வு நேற்று நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:

வடக்கு மாகாணத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்க மாகாண சபை நடவடிக்கை எடுக்காது தவறு விட்டுள்ளது. மாகாண சபை விட்ட பிழையால் எமது பாரம்பரிய, நிலங்கள் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதைத் தடுக்க மாகாண சபை என்ன செய்தது?.

எமது பிரதேசங்களில் இடம்பெற்று வரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை தடுக்க முயற்சிகளை எடுத்தோம் என யாராவது ஒருவராவது மனதில் கைவைத்துச் சொல்லுங்கள். எந்த நடவடிக்கையையும் செயலில் காட்டாது பேசிக்கொண்டு இருப்பதில் எவ்வித பயனும் இல்லை.

நாம் இங்கு மேற்கொள்கின்ற அபிவிருத்தி திட்டங்களை நகரப் பகுதிகளிலும் அதனை அண்டிய பகுதிகளிலுமே மேற்கொண்டு வருகின்றோம். எல்லைக் கிராமங்களை நாம் கைவிட்டு விட்டோம். அதை அறிந்தவர்கள் அங்கு திட்டமிட்ட குடியேற்றங்களை அபிவிருத்தீ என்ற போர்வையில் செய்து வருகின்றனர். எமது அபிவிருத்தி திட்டங்களை எல்லைப் புறங்களை நோக்கி நகர்த்த வேண்டும். அதன் ஊடாக ஒரு சிறிதளவு இடங்களையாவது எம்மால் காப்பாற்ற முடியும் என நினைக்கின்றேன் - என்றார். (ற-8)

# குடியேற்றத்துக்கான ஆரம்ப நிலையே முல்லைத்தீவில் முளைக்கும்புத்தர்கள்

## சபையில் சுட்டிக்காட்டினார் ரவிகரன்

யாழ்ப்பாணம், ஏப்.6

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் மக்களின் காணிகளில் உள்ள பிள்ளையார், அம்மன் சிலைகளுக்கு நடுவே புத்த பிரான் முளைக்கின்றார் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான வடக்கு மாகாண சபையின் சிறப்பு அமர்வு நேற்று நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

தமிழ் மணம் பரப்பி பரந்து விரிந்து கிடந்த தமிழர்களின் தொன்னிலமான மணலாற்றுப் பிரதேசத்தில் தற்போது சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு அவற்றுக்கு புதிய சிங்களப்பெயர்கள் சூட்டப்பட்டு தமிழர்களின் அடையாளங்கள் யாவும் அழிக்கப்பட்டுள்ளன. தொன்னில தமிழ்ப் பிரதேசமாகச் செழித்திருந்த பகுதி தற்போது சிங்களப் பெயர்களோடு சிங்களப்பகுதிகளாக காட்சியளிக்கின்றது.

தமிழர்களின் தாயகப் பிரதேசங்களாகிய வடக்கையும், கிழக்கையும் துண்டாடுவதற்காக மணலாற்றில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அதற்குரிய கருவியாக மகாவலி அபிவிருத்தி அதிகார சபை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழர்களின் பல பண்ணைகளுடன் பல்லாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் வியாபித்திருந்த மணலாற்றுப்பகுதியில் இருந்த மக்கள் 1978ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளியேற்றப்பட்டார்கள்.

1984 மார்கழி மாதம் வெளிப்படையான அறிவித்தல் மூலம் வெளியேற்றப்பட்ட கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் தெற்கு, கொக்குத்தொடுவாய் மத்தி ,கொக்குத்தொடுவாய் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இறுதி போர் முடிவுற்ற பின்னர் 20102011 காலப்பகுதிகளில் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டனர்.

மீள்குடியேற்றப்பட்ட இந்த மக்களின் 90சதவீதம் ஆனோர் விவசாயிகளாவார். இடப்பெயர்வுக்கு முன்னர் தமது நாளாந்த இருப்புக்காக விவசாயம் செய்த நிலங்களை இவர்கள் மீளக் குடியேறியபோது இழந்தனர். இவர்களால் தலைமுறை தலைமுறையாக பயிரிடப்பட்டு வந்த இந்த வயல் நிலங்கள் மகாவலி எல் வலயத்தின் ஒரு அபிவிருத்தி திட்டம் எனக்கூறப்படும் "கிவுல் ஓயா" திட்டத்தின் கீழ் சிங்கள மக்களுக்கு மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்பட்டு இன்று சிங்கள மக்களால் விவசாயம் செய்யப்பட்டு வருகின்றது.

2013ஆம் ஆண்டில் நிர்வாக எல்லைகள் எதையும் கொண்டிராத இந்தப்பிரதேசசெயலாளர் பிரிவுக்கு 2013.05.17ஆம் திகதிய 1811ஆம் இலக்க வர்த்தமானி மூலம் எல்லைகள் தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானிக்கப்பட்ட எல்லைகள் 171்7 ஆம் இலக்க 2012 ஜனவரி 24ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவின் எல்லைகளுடன் மேற்பொருந்துவதாக உள்ளது.

### விகாரைகள், புத்தர்சிலைகள்

குடியேற்றங்களுக்கு முன்னேற்பாடாக பௌத்தர்களே இல்லாத இங்களில் பௌத்த விகாரைகளை அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது. போர்க் காலத்துக்கு முன் ஒரு விகாரையும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இல்லை. இப்போது 11 விகாரைகள் உள்ளன என்று புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டி காட்டுகின்றது.

கொக்குளாயில் இராணுவத்தினரின் துணையோடு தமிழ் மக்களின் காணியில் அம்மன் கோவில் இருந்த இடத்தில் தற்போது பௌத்த விகாரை கட்டப்படுகின்றது. நாயாற்றுப்பகுதியிலும் பிள்ளையார் சிலைக்கு அருகில்விகாரை அமைக்கப்படுகின்றது. அதற்கு முன்பாக இராணுவ முகாம் இருக்கின்றது. இவற்றைப் பெரும் குடியேற்றத்துக்கான ஆரம்ப வேலைகளாகக் கருத முடிகிறது.

### புதிய திட்டமிடல்

போர் முடிவுற்று மக்கள் மீள்குடியமர்ந்த மிகவும் நெருக்கடியான 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போது இருந்த இராணுவத் தளபதியின் அழுத்தத்தால் நாயாற்றுப்பகுதியில் 78 படகுகள் கொண்டு தென்னிலங்கை மீனவர் தொழில் செய்யும் நிலை ஏற்பட்டது. 78 என்பது அடுத்த அடுத்த ஆண்டுகளில் தற்போது 300 ஆக உயர்ந்துள்ளது. இவர்கள் பெரும்பாலும் தடைசெய்யப்பட்ட தொழில்களையே செய்கின்றார்கள். சமூகமுரண் செயல்களுக்கும் துணைபோகின்றார்கள். அந்தப் பகுதியில் கசிப்பு விற்கப்பட்டு, சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டமை, சிலாபம் "இரணவில" பகுதியில் அண்மையில் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டமை தொடர்பிலான குற்றவாளி இந்தப் பகுதியில் வைத்த கைதுசெய்யப்பட்டமை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

ஒரு குறிப்பிட்ட மாகாணத்தின் மக்கள் பரம்பல் மாதிரியை இயற்கைக்கு முரணான வகையில் மாற்றுவது அரசின் காணிக்கொள்கையாக அமையக்கூடாது. இது கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதந்துரை 9.1.2.4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்போது இப்பகுதிகளில் நடைபெறும் நடைபெற்று கொண்டிருக்கும் நிகழ்வுகளை பார்க்கும் போது தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாகியுள்ளது - என்றார். (ற-8)

## கத்திகள் மற்றும் துப்பாக்கியுடன் நால்வர் கைது

கொழும்பு.ஏப்.6
கொலை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களுடன்தொடர்புடைய சந்தேகநபர்கள் நால்வர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.
அத்துருகிரிய மற்றும் ஹோகந்தர பகுதிகளைச் சேர்ந்தவர்களே அதே பகுதிகளில் வைத்து கைது செய்யப்பட்டனர்.
இவர்களிடமிருந்து ரி56 ரக துப்பாக்கி ஒன்றும் அதற்கு பயன்படுத்தப்படும் 12 ரவைகள், மகசின் ஒன்று, மற்றும் ஆறு கத்திகளும் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
மேலும் இரண்டு கிலோ கேரளக் கஞ்சாவும், 79 ஆயிரத்து 800 ரூபா பணமும் சந்தேகநபர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டன. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந.ரி2)

# கடிதம் எழுதிக்கொண்டிராது செயற்படவேண்டும் விக்கி

### சிவாஜி சபையில் காட்டம்

யாழ்ப்பாணம், ஏப் 6
வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் சிங்களக் குடியேற்றங்களை தடுக்கக் கடிதம் எழுதியுள்ளேன் என முதலமைச்சர் விக்னேஸ்வரன் சாக்குப் போக்குச் சொல்லாது ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான வடக்கு மாகாண சிறப்பு அமர்வு நேற்று நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்தாவது:
வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றங்களை தடுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கையை வடக்கு மாகாண முதல்வர் எடுக்க வேண்டும். அதனை விடுத்து, நான் இது தொடர்பாகக் கடிதம் எழுதிவிட்டேன் என்று சும்மா சாக்குப்போக்கு கூறிக்கொண்டு இருக்கக்கூடாது. வடக்கின் முல்லைத்தீவு மாவட்டத்தில் புற்றுநோய் பரவல் போல சிங்களக் குடியேற்றம் பரவலாக இடம்பெற்று வருகின்றது. இது நாட்டில் இனங்களுக்கு இடையில் மோதல்களை ஊக்குவிக்கின்றது. கடந்த காலங்களில் எமது மண்ணில் அதிலும், குறிப்பாக யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் ஆயுதப் போராட்டம் நடந்திருக்காவிட்டால் பல இடங்கள் சிங்களவர்களிடம் பறிபோய் இருக்கும். ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் இப்போது மெல்ல மெல்ல எல்லைக் கிராமங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கு மூல காரணம் ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் நாம் ஜனநாயக பலத்தை ஒன்று திரட்டிக் காட்டவில்லை என்பதே.
முதல் நடவடிக்கையாக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் தொடர்பாக பேச நாடாளுமன்றத்தில் முழுநேர விவாதத்தைக் கோர வேண்டும். தென்னிலங்கையில் உள்ள சிங்கள பேரினவாதிகள் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும். சுதந்திரம் பெற்ற தமிழீழமா? அல்லது சுயாட்சி தமிழீழமா? என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும். இந்த நாடு துண்டாடப்படுவதற்கு வெகு காலம் இல்லை என்பதையும் அவர்கள் உணரவேண்டும் - என்றார். (ந-8)



## கடமைகளைப் பொறுப்பேற்றார் டிக்கோயா நகரசபை தலைவர்

ஹற்றன்.ஏப்.6
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஹற்றன் டிக்கோயா நகரசபைத் தலைவராக நியமிக்கபட்ட ச.பாலேந்திரன் நேற்றுத் தனது கடமைகளைப் பொறுபேற்றார் .
இந்த நிகழ்வில் இலங்கைத் தொழிலாளர் காங்ரஸின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான், மத்திய மாகாணசபை உறுப்பினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர் .
ஹற்றன் கொழும்பு பிரதான வீதியின் மணிகூட்டுக் கோபுரத்துக்கு அருகாமையிலிருந்து ஹற்றன் டிக்கோயா நகர சபை வரை பேரணி ஒன்றும் முன்னெடுக்கபட்டது. (ந.ரி2)



## விபத்தில் கருகியது மோ.சைக்கிள்

*அம்பாறை,ஏப்.6*
*இரண்டு மோட்டார் சைக்கிள்கள், ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒரு மோட்டார் சைக்கிள் முற்றாகத் தீயில் எரிந்து நாசமாகியது.*
*இந்தச் சம்பவம் நேற்று அட்டாளைச்சேனை 16 ஆம் பிரிவு பகுதியில் இடம்பெற்றது.*
*சம்பவத்தில் காயமடைந்தவர்கள் அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.* *(ந,ரி2)*

## பறந்த தலைக்கவசத்தை பிடிக்க முயன்றவர் காயம்

*சாவகச்சேரி,ஏப்.6*
*மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது, காற்றில் அள்ளுண்டு பறந்த தலைக்கவசத்தை எடுக்க முயன்ற பெண், தலையில் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி பெரிய அரசடிப் பகுதி முதன்மைச் சாலையில் இடம்பெற்றது. மானிப்பாய் சுதுமலை வடக்கைச் சேர்ந்த கஜேந்திரன் பூம்பொழில் (வயது-38) என்ற பெண்ணே இவ்விதம் காயமடைந்தவராவார். கணவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளையில் பாதுகாப்பாகப் பூட்டப்படாத தலைக்கவசம் காற்றில் அள்ளுண்டு பறந்தது.*
*மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட முன்பே குறித்த பெண் தலைக் கவசத்தை எடுப்பதற்கு, மோட்டார் சைக்கிளிலிருந்து குதித்துள்ளார்.*
*இதன்போதே கால் தடுமாறி வீழ்ந்ததில் தலையில் காயமேற்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது.*
*காயமடைந்தவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.* *(ந,ரி2,9)*

## மூன்று அமைச்சுக்களின் செயலர்களுக்கு மாற்றல்

யாழ்ப்பாணம், ஏப்.6
வடக்கு முதலமைச்சரின் கோரிக்கைக்கு அமைவாக மூன்று அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இன்று முதல் நடைமுறைக்கு வரும்வகையில் வடக்கு மாகாண ஆளுநர் இந்த இடமாற்றங்களை வழங்கியுள்ளார்.
ரூபினி வரதலிங்கம், கூட்டுறவு மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயராளராகவும் , விஜயலக்சுமி கேதீஸ்வரன் முதலமைச்சருக்கு உட்பட்ட அமைச்சின் செயலாளராகவும், வரதீஸ்வரன் பேரவைச் செயலக செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான இடமாற்றக் கடிதங்களில் நேற்று ஆளுநர் ஒப்பமிட்டார்.
வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட செயலாளர்களை இடமாற்றம் செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் விடுத்த பரிந்துரை நீண்டநாள்களாக இழுபறியில் இருந்தநிலையில் தற்போது இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.
அதேவேளை, முதலமைச்சர் அமைச்சுக்கு 6ஆவது தடவையாக செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார். விவசாய அமைச்சின் செயலாளராக இருந்தவர் நிர்வாக சேவை தரம் 1 எனக் காரணம் காட்டப்பட்டு ஆணையாளராக நியமிக்கப்பட்டபோதும் தற்போது தரம் 1ஐ சேர்ந்த அதிகாரியே முதலமைச்சரின் அமைச்சுக்கு செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-105)

## தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளர் கடமைகளைப் பொறுப்பேற்றனர்

நுவரெலியா.ஏப்.6
கொட்டகலை பிரதேச சபையின் தவிசாளர் ராஜமணி பிரசாத் மற்றும் பிரதித் தவிசாளர் முத்துராமலிங்கம் ஜெயகாந்த் ஆகியோர் தங்களது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றனர்.
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் முன்னிலையில் அவர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்றனர்.
இதில், கொட்டகலை பிரதேச சபையின் இ.தொ.கா உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ந.ரி2)

## அதிகாரியை இடமாற்றக் கோரி தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

நுவரெலியா,ஏப்.6
அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும்டொரிங்டன்தோட்ட அதிகாரியை இடமாற்றம் செய்யக்கோரி நேற்றுத் தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டனர்.
டயகம ஹற்றன்பிரதானவீதியில் சுமார் 500க்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.
தோட்டத்தின் முகாமையாளர் தோட்டத் தொழிலாளர்களுக்கு உரித்துடைய எந்த சலுகைகளையும் செய்து கொடுப்பதில்லை, தொழிலாளர்களிடமிருந்து வேலையை மட்டும் பெற்றுக்கொள்கிறார். தேயிலை மலைகளை முறையாகப் பராமரிக்காததன் காரணமாக அவை காடாகி வருகின்றன.
தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக எவ்வித செவிமடுத்தலுமின்றி செயற்படுகிறார். இவ்வாறான பிரச்சினைகளால், தொழிலாளர்கள் துயரங்களை அனுபவித்து வருகிறார்கள் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தெரிவித்தனர்.
சம்பவம்தொடர்பில், தொழிற்சங்கவாதிகளிடம் தெரிவித்தபோதிலும் அவர்களும் தோட்ட முகாமையாளருக்கு ஆதரவாகவே செயற்படுவதாகவும், இது குறித்து உரியவர்கள் உரிய நடவடிக்கைஎடுக்கவேண்டும்என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந.ரி2)



## கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது

வவுனியா.ஏப்.6
கேரளக் கஞ்சா கடத்திச் சென்றவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார்.
மட்டக்களப்பு , காத்தான்குடியைச் சேர்ந்த 51 வயதுடைய ஒருவரே வவுனியாப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத்தகவலையடுத்து, யாழ்ப்பாணத்திலிருந்து பொத்துவில் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த பேருந்தை நொச்சிமோட்டைப் பகுதியில் வழிமறித்துப் பொலிஸார் சோதனை மேற்கொண்டனர்.
இதன்போதே சந்தேகநபர், 2 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டார்.
சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந.ரி2.110)

## சிறப்பு செயற்குழு கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6
அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் சிறப்பு செயற்குழுக் கூட்டம் யாழ் வண்ணை நாவலர்மகாவித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்குத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்த பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.
2018 ஆம் ஆண்டுக்கான இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சை நடத்துவது மற்றும் ஒழுங்கமைப்பு போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளமையினால் அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார்.

## மஹோற்சவம்

காரைநகர், ஏப். 6
காரைநகர் வாரிவளவு கற்பக விநாகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் சிறப்பாக இடம்பெறவுள்ளது.
மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா சித்திரைப் புத்தாண்டு தினமான எதிர்வரும்14ஆம்திகதிசனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசையை அடுத்து விநாயகர் தேரில் எழுந்தருளித் தேர்ப்பவனி இடம்பெறும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் வியாவில் ஐயனார் ஆலய தீர்த்தக் கரையில் தீர்த்தோற்சவம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (250)

### இராணுவத்தினரால்

# முகாமுக்குள் அழைக்கப்பட்டிருந்த இளைஞர்கள் வெளியே வரவில்லை

### சிறுப்பிட்டி வழக்கில் நேற்றுச் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஏப். 6
"சிறுப்பிட்டி படைமுகாமுக்குள் இளைஞர்கள் இருவரையும் இராணுவத்தினர் அழைத்துச் சென்றனர். அதனை என் கண்களால் கண்டேன். சிறிது நேரம் அந்த இடத்தில் நின்று பார்த்தேன். எனினும் இளைஞர்கள் இருவரும் வெளியே வரவில்லை" என்று சிறுப்பிட்டி இளைஞர்களைக் கடத்திக் கொலை செய்த வழக்கில் பெண் ஒருவர் சாட்சியமளித்தார்.
யாழ்ப்பாணம் சிறுப்பிட்டிப் பகுதியில் இளைஞர்கள் இருவர் இராணுவத்தால் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர். குறித்த வழக்கு நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நீதிவான் சி. சதீஸ்தரன் முன்னிலையில் சுருக்கமுறையற்ற விசாரணைக்காக வந்தது.
மன்றில் சந்தேகநபர்களான 5 இராணுவத்தினரும் முன்னிலையாகினர். 3ஆவது சந்தேகநபரான இராணுவச் சிப்பாய் உயிரிழந்துவிட்டார்.
வழக்குத் தொடுநர் தரப்பில் சட்ட மா அதிபர் சார்பில் அரசசட்டவாதி நாகரட்ணம் நிஷாந் முன்னிலையானார்.
வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள 14 சாட்சியங்களில் 7 சிவில் சாட்சிகளிடம் மன்றில் நேற்றுச் சாட்சியம் பெறப்பட்டது. அதன்போது பெண்ணொருவர் சாட்சியம் அளிக்கும்போது.
"இளைஞர்கள் இருவரும் சைக்கிளில் பயணித்த வேளைவழிமறித்த இராணுவத்தினர் அவர்களை சிறுப்பிட்டி படை முகாமுக்குள் அழைத்துச் சென்றனர். அங்கு என்ன நடக்கின்றது என்று முகாமுக்கு அண்மையில் நின்று சிறிதுநேரம் அவதானித்தேன். அந்த இளைஞர்கள் இருவரும் முகாமுக்குள் இருந்து வெளியே வரவில்லை" என்று அந்தப் பெண் சாட்சியமளித்தார்.
நேற்று 7 சாட்சியங்களிடம் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன. மீதி சிவில் மற்றும் பொலிஸ் சாட்சியங்கள் எதிர்வரும் ஜூலை 15ஆம் திகதி பதியப்படும் என்று தெரிவித்த நீதிவான் வழக்கை அன்றைய தினத்துக்கு ஒத்திவைத்தார்.

**பின்னணி**
இந்தச் சம்பவம் தொடர்பில் 1996ஆம் ஆண்டே விசாரணைகளை மேற்கொண்டிருந்த இராணுவப் பொலிஸார் கொல்லப்பட்ட இளைஞர்களில் ஒருவரின் சங்கிலி மற்றும் கைக்கடிகாரம் என்பவற்றை முகாமுக்குள் இருந்து மீட்டிருந்தனர். அத்துடன் இளைஞர்களின் துவிச்சக்கர வண்டிகளின் பாகங்களையும் இராணுவப் பொலிஸார் மீட்டிருந்தனர். அந்தச் சான்றுப் பொருள்கள் தற்போது இந்த வழக்குடன் சேர்க்கப்பட்டுள்ளன. (4,37)

## மகளிர் தின விழா

யாழ்ப்பாணம், ஏப் 6
யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் மகளிர் தினவிழா யாழ்.வண்ணை நாவலர் மகாவித்தியாலய மாநாட்டு மண்டபத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தலைவர் உதயகுமார் மகேஸ்வரி தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பிரதேச செயலர் பொன்னம்பலம் தயானந்தா கலந்துகொள்ளவுள்ளார்.

★★★★

கைதடி தென்கிழக்கு உவரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மகளிர் தின விழா விநாயகர் விளையாட்டு மைதானத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சங்கத் தலைவி ம.குகனேஸ்வரி தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமானமாவை சோ.சேனா திராசா கலந்து கொள்ளவுள்ளார். (113)

## பொதுக்கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப் 6
மானிப்பாய் கோவில் பற்று ப.நோ.கூ. சங்கத்தின் பொதுக்கூட்டம் சங்கக் காரியாலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சங்கத் தலைவர் எம். செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்தக் கூட்டத்தில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கலந்து கொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.
இதன்போது சங்கத்தின் சொந்தக் காணியில் புதிய காரியாலயம் கட்டுவதற்கு அரசிடமிருந்து நிதி கோருவது பற்றியும். யாழ். மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசத்தின் கடன் தொடர்பான நடுத்தீர்ப்பின் முடிவு பற்றியும் ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (115)

★★★★

வரணி, ஏப் 6
தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு முதன்மைச் சங்கத்தின் மேல்மாடியில் சங்கத் தலைவர் செ. அமரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (122)



வயாவிளான் மத்திய கல்லூரியில் மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் அண்மையில் இடம்பெற்றது. பொறுப்பாசிரியர் பா.பாலகுமாரனின் நெறிப்படுத்தலில் வாக்களிப்பு சிறப்பாக நடைபெற்றது.

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

காரைநகர், ஏப். 6
காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்ட மும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கல்லூரிநடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற் றுக்கிழமை மதியம் 3 மணிக்கு அதிபரும் சங்கத் தலைவருமான சிவந்தினி வாகீசன் தலைமையில் இடம்பெற வுள்ளது.
இக் கூட்டத்திற்கு கல்லூரியின் பழைய மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கச் செயலாளர் ந.பாரதி கேட்டுள்ளார். (250)

# வருடாந்த சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப் 6
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு வருடாந்தம் இடம்பெறும் சமய அறிவுப் போட்டி இவ் வருடமும் இடம்பெறவுள்ளது.
இப் போட்டிகள் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் இடம்பெறும். சமய பாடத்திட்டத்திற்கமையவும், ஆலய வரலாற்றை ஒட்டியும் சமய அறிவுப் போட்டி இடம்பெறும். தரம் 1,2,3 ஆரம்ப பிரிவாகவும் 4,5 இடைநிலைப் பிரிவாகவும் 6,7,8 கனிஷ்ட பிரிவாகவும் 9,10,11 சிறப்பு பிரிவாகவும் இடம்பெறவுள்ளன. ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை கரும பீடத்தில்/0773464805 என்னும் இலக்கத்தில் பரீட்சை இணைப்பாளரை தொடர்பு கொள்வதன் மூலம் மேலதிக விடயங்களைப் பெற்று போட்டிகளில் கலந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது

## பாடசாலை அபிவிருத்திக் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப் 6
யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் 2018ம் ஆண்டுக்கான அபிவிருத்திக் குழுக்கூட்டம் பாடசாலையின் தம்பையா மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு அதிபர் வேணுகா சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விபத்தில் பெண் காயம்

சாலையின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த குடும்பப் பெண் சாலையில் வீழ்ந்து காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது.
இதில் மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த சிவயோகராசா ஜெயகுமாரி (வய்து 48) என்ற பெண்ணே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (9)

## சனசமூக நிலைய திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப் 6
புனரமைக்கப்பட்ட உரும்பிராய் ஞானவைரவர் கோயிலடி சனசமூக நிலையத் திறப்பு விழா சனசமூக நிலைய முன்றலில் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு தலைவர் ரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந் தினராக வலி. கிழக்கு பிரதேச செயலர் சுபாஜினி மதியழகன் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## "ஓநாய் குலச்சின்னம்" நாவலின் திரைப்படம்

யாழ்ப்பாணம், ஏப் 6
உலகப் புத்தக தினத்தை முன்னிட்டு, சீன மொழியில் ஜியாங் றொங் எழுதிய 'ஓநாய் குலச்சின்னம்' என்ற நாவல், எழுத்தாளர் சி. மோகனின் மொழியாக்கத்தில் தமிழில் வெளிவந்து அதே பெயரில், சீன மொழித் திரைப்படமாக யாழ். பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு இலவசமாகக் காண்பிக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வில் ஆர்வமுடையோரை கலந்துகொள்ளுமாறு வாசகர் வட்டத்தினர் கேட்டுள்ளனர்.

# கால்நடைகள் திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஏப். 6
கோப்பாய், நீர்வேலி பிரதேசங்களில் கால்நடைகளை திருடி செல்லும் சம்பவங்கள் அதிகரித்துள்ளமையினால் கால்நடைகளை நம்பி வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நீர்வேலி மேற்கு பகுதியில் இரண்டு கடா ஆடுகள் களவாடப்பட்டுள்ளன.
இப்பகுதியில் உள்ள வீடு ஒன்றின் பின்பக்க கொட்டகையில் கட்டப்பட்ட கடாக்களே களவாடப்பட்டுள்ளன. வளர்ப்பு கால்நடைகள் மீது திருடர்கள் கண் வைத்து அவற்றை களவாடிகொல்வதால் கால்நடைகளை வைத்துப் பராமரிப்பதில் மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர். அவற்றுள் கால்நடைகளை மேய்ச்சலுக்காக தரவை நிலங்கள் மற்றும் விவசாயத் தோட்டங்களில் விடுவதற்கும் கால்நடை வளர்ப்போர் தயக்கம் காட்டி வருகின்றனர். பட்டப்பகல் வேளையில் மேச்சலுக்காக அவிழ்த்து விடப்படும் கால்நடைகளையும் திருடர்கள் களவாடிச் செல்கின்றமை தொடர்பில் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (17)



திருகோணமலையில் தமிழர்கள் செறிந்து வாழும் மூதூர் பிரதேசத்தில், 40 அடி உயர கோபுரத்துடன்கூடியதாக விகாரை அமைக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுக்காலை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் இராணுவ, பொலிஸ், வான்படை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், அரச உத்தியோகத்தர்கள், மூதூர் பிரதேச செயலாளர் அபூபக்கர் தாஹீர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந,ரி2)

வறட்சி காரணமாக

# வடக்கு உட்பட நாடு முழுவதும் 143, 235 குடும்பங்கள் பாதிப்பு

## உதவிகள் வழங்கல் தொடர்பில் மைத்திரிபால கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 6

வறட்சி காரணமாக வடக்கில் 3 மாவட்டங்கள் உட்பட நாடு முழுவதும் ஒரு லட்சத்து 43 ஆயிரத்து 235 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு உதவிகள் வழங்குதல் தொடர்பில் அரச தலைவர் நேற்றுக் கலந்துரையாடியுள்ளார்.

வறட்சி காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிகள் வழங்குவது தொடர்பில் சிறப்புக் கலந்துரையாடல் அரச தலைவர் அலுவலகத்தில் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று நடைபெற்றது.

வறட்சி காரணமாக குருநாகலை, புத்தளம், பொலன்னறுவை, அம்பாறை, அநுராதபுரம், கண்டி, மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 43 ஆயிரத்து 235 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்குத் தேவையான குடிதண்ணீர் வசதிகள் மற்றும் ஏனைய தண்ணீர் வசதிகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. உலர் உணவுப் பொருள் கூப்பன்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் செயற்பாடுகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

தண்ணீரைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நீர் நிலைகள் வரையறுக்கப்பட்டிருப்பதுடன் அவற்றின் தண்ணீரின் அளவு குறைந்த மட்டத்தில் இருத்தல், வன விலங்குகளுக்குப் போதுமானளவு தண்ணீர் கிடைக்காமை மற்றும் வன விலங்குகளின் மூலம் மக்களுக்கும் உடைமைகளுக்கும் ஏற்படும் சேதங்கள் அதிகரித்தல், மின்சார உற்பத்தி தொடர்பான பிரச்சினைகள், உணவுப் பாதுகாப்பு தொடர்பாக ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது.

குறித்த பிரதேசங்களில் நிறுவப்பட்டுள்ள குழாய்க் கிணறுகளை சீரமைத்தல் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்குத் தண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்தல் தொடர்பாக விவசாய அமைப்புகளின் ஊடாக விவசாய சமூகத்துக்குத் தெளிவுபடுத்தல் போன்ற குறுகிய கால நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அரச தலைவர் சுட்டிக்காட்டினார்.

வறட்சி காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள விவசாயக் குடும்பங்களுக்கு உதவும் வகையில் அரச தலைவரின் பணிப்புரையின் பேரில் நடைமுறைப்படுத்தப்படும் வறட்சி உதவிப் பொருள்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தும்போது எழக்கூடிய பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

கலந்துரையாடலில் அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்களும் இதில் கலந்துகொண்டனர் என்று அரச தலைவரின் ஊடகப்பிரிவு விடுதத செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (4)

## குடிதண்ணீர்ப் போத்தல்களின் நியமங்களை அறிக்கையிடவும்

யாழ்ப்பாணம், ஏப். 6

குடிதண்ணீர்ப் போத்தல்களின் விலை மற்றும் அவற்றின் நியமங்கள் தொடர்பில் உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.

பல மாவட்டங்களைப் பாதித்துள்ள வறட்சி காரணமாக ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் பிரச்சினைக்கு மத்தியில் சில வியாபாரிகளால் நியமங்களுக்குட்படாத வகையிலும் அதிக விலையிலும் குடிதண்ணீர் போத்தல்களை விற்பனை செய்தல் தொடர்பில் ஏற்பட்டுள்ள நிலமைகளைக் கவனத்திற்கொண்டு அரச தலைவர் இந்தப் பணிப்புரையை நேற்றைய வறட்சி பாதிப்புப் ப்ற்றிய கலந்துரையாடலில் விடுத்துள்ளார். (4)

## பிரதி சபாநாயகரும் சிக்கலில் மாட்டுவார்

கொழும்பு, ஏப். 6

பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபாலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி இதனைக் கொண்டுவரவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பின்போது திலங்க சுமதிபால நடந்துகொண்ட விதம் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

குறித்த வாக்கெடுப்பின்போது திலங்க பக்கச்சார்பற்ற முறையில் நடந்துகொண்டிருக்க வேண்டுமெனவும், எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வுகளில் இவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4)

# காலைவாரிய சு.க. அமைச்சர்கள் பதவியைக் கைவிடுவதற்கு மறுப்பு

## மைத்திரியிடமும் நேரில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 6

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து வாக்களித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள், தமது அமைச்சுப் பதவிகளைத் துறக்கமாட்டோம் என்று கடும் பிடிவாதமாக உள்ளனர். தமது பதவிகளைத்தாம் விட்டுக்கொடுக்கமாட்டோம் என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

மகிந்த அணியான பொது எதிரணியால் நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 76 பேரும், எதிராக 122 பேரும் வாக்களித்தனர். அத்துடன், 26 பேர் வாக்கெடுப்பில் பங்குபற்றவில்லை.

ரணிலுக்கு எதிராக பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த சு.கவினர் அனைவரையும் கூட்டரசில் இருந்து அடியோடு தூக்க வேண்டுமென ஐ.தே.கவினர் 38 பேர் கையொப்பமிட்ட எழுத்துமூல ஆவணம் தலைமை அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரதி அரச தலைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றுக் காலை மைத்திரிபால சிறிசேனவுக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதும் தாம் அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகப்போவதில்லை என்று பிரேரணைக்கு ஆதரவளித்தவர்கள் அரச தலைவரிடம் தெரிவித்துள்ளனர்.

அவருடனான சந்திப்பைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டிருந்த பிரதி அமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம, "தேசிய அரசுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. தொடர்ந்து வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வோம் என்று அரச தலைவர் கூறினார்" என்றார்.

எவ்வாறிருப்பினும் தலைமை அமைச்சருக்கு எதிராக வாக்களித்த சு.கவின் அமைச்சர்களின் பதவிகள் பறிபோகும் நிலையே காணப்படுகின்றது என்று அரசின் தகவல் அறியும் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. (4)

# தீர்மான வெற்றியை சரியாகப் பயன்படுத்தவும்

## ஐரோப்பிய ஒன்றியம் அரசுக்கு அறிவுரை

கொழுமபு, ஏப். 6

தலைமை அமைச்சருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் அரசால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இலங்கை ஜனநாயகத்தின் ஒரு சிறந்த அம்சமாகவே இதனைப் பார்க்கிறோம். எனவே தற்போது கிடைத்துள்ள இந்த வெற்றியை அரசு சிறந்த முறையில் பயன்படுத்தி எதிர்காலப் பயணத்தை முன்னெடுக்கும் என்று நம்புகின்றோம் .

இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் நேற்றுத் தெரிவித்தனர்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் பன்னாட்டு வர்த்தகம் தொடர்பான நாடாளுமன்றத் தூதுக்குழு கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த விடயங்களைத் தெரிவித்தனர்.

ஜனநாயகப் பண்புகள் இருக்கின்ற நாட்டில் தலைமை அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரும் உரிமை எதிர்க்கட்சிக்கு உள்ளது. அதேபோன்று அதனைத் தோற்கடிக்கும் உரிமை ஆளும்கட்சிக்கு உள்ளது. அந்த ஜனநாயகப் பண்பை இலங்கையில் பார்த்தோம் என்றும் இலங்கைக்கு ப் பயணம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவினர் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை ஊடாக இலங்கை அரசுக்கு ஒரு சிறந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கை அரசை வலுவாக்கித் தேவையான அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்று நம்புகின்றோம்.

கிடைத்துள்ள இந்த வெற்றியின் ஊடாக இலங்கை அரசு மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து தீர்க்கப்படாத பல நெருக்கிடிகளுக்கு தீர்வுகாணும் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றனர். (4.61)

## பரிசளிப்பும் கலை நிகழ்வும்

யாழ்ப்பாணம்,ஏப்.6

ஆறுகால்மடம் அரசடி ஞானவைரவர் சுவாமி திருக்கோயில் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் பரிசளிப்பு மற்றும் கலை நிகழ்வு என்பவை ஆறுகால்மட அறிவொளி கலையரங்கில் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளன. அறிவொளி சனசமூக நிலையத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் இடம்பெறும் நிகழ்வுகளில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் இ.ஜெயசீலன் முதன்மை விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (எ-113)



இனந்தெரியாதோரால்

## சாவகச்சேரி இந்துவின் மாணவர் வாகன தரிப்பிடம் சேதப்படுத்தப்பட்டுள்ளது

சாவகச்சேரி, ஏப். 6

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்பாக 15 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு இன்னமும் பாவனைக்கு விடப்படாத மாணவர் வாகனத் தரிப்பிடம் இனந்தெரியாதோரால் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

தரிப்பிடத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்ணாடிகள் கற்களால் எறிந்து நொறுக்கப்பட்டுள்ளன. அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த கல்லூரியின் சாதனையாளர்களின் உருவப் படங்களும் கிழித்து சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந் திரனின் நிதி ஒதுக்கீட்டில் கல்லூரியின் முன்பாக முதன்மைச் சாலையுடன் இணைந்திருந்த மதிலை உடைத்து உட்பகுதியில் மாணவர்களின் வாகனத் தரிப்பிடமும் (சைக்கிள்கள்) அவற்றைக் கொண்டு செல்வதற்காக பாதையும் வெளிப்பகுதியில் மாணவர்களுக்கான பேருந்துத் தரிப்பிடமும் நிர்மாணிக்கப்பட்டன.

பேருந்து தரிப்பிடக் கொட்டகைக்குள் கல்லூரியின் சாதனையாளர்களின் (பரீட்சைகள் மற்றும் தேசிய நிலைப் போட்டிகள்) உருவப் படங்கள் கண்ணாடிப் பிரேமிட்டு பொருத்தப்பட்டிருந்தன. இந்தக் கட்டட வேலைகள் முழுமையடையாததால் கட்டம் இன்னமும் திறக்கப்படவில்லை.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோர் கற்கள் வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர். இவர்களின் கல்வீச்சில் அருகில் உள்ள தொழில்நுட்ப ஆய்வுகூடக் கட்டடத்தின் கண்ணாடிகளும் சேதமடைந்துள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பாக கல்லூரி நிர்வாகத்தால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## கடும்...

வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், ஐரோப்பிய ஒன்றியக் குழுவினரிடம் எடுத்துரைத்துள்ளார்.

மேலும், இந்தக் கருமங்களை அரசு செய்யத் தவறும் பட்சத்தில் எம் மத்தியில் உள்ள தீவிர செயற்பாட்டாளர்களுக்கு அது ஒரு உந்து சக்தியாக அமைவதோடு நாமும் மிகக் கடுமையான நிலைப்பாட்டை எடுக்கவேண்டிய நிலமைக்குத் தள்ளப்படுவோம் எனவும் வலியுறுத்தினார்.

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 6பேர், எதிர்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனை, நாடாளுமன்றத்தில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில், கூட்டமைப்பு ஊடகப் பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

### மந்தமான செயற்பாடு

முன்னைய அரசு ஜனநாயகப் பண்புகளிலிருந்து விலகியதன் காரணமாவே தற்போதைய அரசு பதவிக்கு வந்துள்ளது. இந்த அரசின் சிந்தனையும் நடவடிக்கைகளும் முன்னைய அரசின் நடவடிக்கைகளோடு ஒப்பிடுகையில் சாதகமாக இருந்தாலும், கருமங்கள் மிக மந்தகதியிலேயே இடம்பெறுகின்றன. இந்த அரசு இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தி சமூகங்களுக்கிடையில் சுமுக நிலமையைக் கொண்டுவருவதற்கு இணக்கப்பாட்டைக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

### அரசமைப்பு

அதிகாரப் பகிர்வு தொடர்பில் விளக்கமளித்த சம்பந்தன், குறிப்பிட்ட பிரதேசங்களில் பல நூற்றாண்டுகளாக வாழும் மக்களின் சுயமரியாதை, மதிப்பு மற்றும் இறைமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒருமித்த பிரிபடாத, பிரிக்க முடியாத நாட்டுக்குள் ஒரு தீர்வையே நாம் வேண்டி நிற்கிறோம் என்றும் இதனைப் பூர்த்தி செய்வதற்கு அரசமைப்பை உருவாக்கும் கருமங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு விரைவான ஒரு தீர்வை எட்டவேண்டும் என்றும் கூறினார்.

புதிய அரசமைப்பில் மக்கள் தமது கருமங்களைத் தாமே முன்னெடுக்கக்கூடிய வகையில், அதிகாரங்கள் பகிரப்படுவதையும், அத்தகைய அதிகாரங்கள் மத்திய அரசால் மீளப் பெறமுடியாத வகையிலும், மத்திய அரசு அந்த அதிகாரங்களில் தலையிட முடியாத வகையிலுமான ஒரு கட்டமைப்பையே எதிர்பார்க்கிறோம் என்றும் தெரிவித்த இரா. சம்பந்தன், இந்த விடயங்கள் தொடர்பில் நாங்கள் மிகவும் நியாயமான வகையிலேயே செயற்படுகிறோம் என்றும் தெரிவித்தார். ஆனால் இந்தக் கருமங்களை அரசு செய்யத் தவறும் பட்சத்தில் எம் மத்தியில் உள்ள தீவிர செயற்பாட்டாளர்களுக்கு அது ஓர் உந்துசக்தியாக அமைவதோடு நாமும் மிகக் கடுமையான ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய நிலமைக்குத் தள்ளப்படுவோம் எனவும் வலியுறுத்தினார்.

### தமிழர் மீது வன்முறை

உறுப்பினர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்த இரா.சம்பந்தன், தமிழ் மக்கள் இந்த நாட்டில் இரண்டாந் தரமக்கள்குழுவாகப் பார்க்கப்படுவதன் நிமித்தம் அவர்கள் பாதிப்புக்குள்ளாகி வேதனையடைந்தவர்களாக மட்டுமல்லாது, நிந்திக்கப்பட்டவர்களாகவும் ஒடுக்கப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர் என்றும் தெரிவித்தார். மேலும் அரசியல் கோரிக்கைகளை முன்வைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்கள் மீது வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்ட சந்தர்ப்பங்களையும் எடுத்துரைத்தார்.

இவற்றினால் இந்த நாட்டில் தொடர்ந்தும் வாழ முடியாது என்ற நிலைப்பாட்டில் அநேக தமிழ் மக்கள் நாட்டை விட்டுவெளியேறி உலகின் பல பாகங்களிலும் வாழ்ந்து வருவதாகவும், இந்த நிலமை தொடர்ந்தும் நீடிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

### வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை

பன்னாட்டுச் சமூகத்துக்கு இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை மீண்டும் வலியுறுத்திய இரா.சம்பந்தன், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதில் காட்டப்படுகின்ற நீண்ட தேவையற்ற இழுத்தடிப்புக்கள் தொடர்பில் தமது அதிருப்தியைத் தெரிவித்த இரா. சம்பந்தன், இந்தச்சட்டமானது நீக்கப்படுவதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

தமிழ் அரசியல் கைதிகளின் நிலமை குறித்து உறுப்பினர்களைத் தெளிவுபடுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், பல கைதிகள் எந்தவொரு விசாரணையு மின்றி பல ஆண்டுகளாக சிறைகளில் இருக்கிறார்கள் என்றும் அவர்கள் அத்தனை பேரும் மேலும் தாமதங்களின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். நிலைமாற்றுகாலநீதிப் பொறிமுறைகள், படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிவிடுவிப்பு போன்ற விடயங்களிலும் அரசின் செயற்பாடு மிக மந்தகதியிலேயே இடம்பெறுவதையும் சுட்டிக்காட்டினார்.

### பன்னாட்டுச் சமூகம் ஞாபகமூட்டவேண்டும்

அரசு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றுவதனைப் பன்னாட்டுச் சமூகம் உறுதி செய்யவேண்டும் என்பதை வலியுறுத்திய இரா. சம்பந்தன், இலங்கை அரசுக்கான பன்னாட்டுச்சமூகத்தின் ஆதரவானது நிபந்தனைக்குட்பட்டது என்பதை பன்னாட்டுச் சமூகம் இலங்கை அரசுக்கு ஞாபகப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இலங்கை அரசானது தனது கடமையைச் செய்யவேண்டும் எனவும் அதிலிருந்து விலக முடியாது எனவும் தெரிவித்தார். மேலும் பன்னாட்டுச் சமூகமானது தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளதனையும் இரா.சம்பந்தன் வலியுறுத்தினார்.

### இராஜதந்திர நடைமுறை

சம்பந்தனின் விவேகமான இராஜதந்திர நடைமுறை யதார்த்தமான தலைமைத்துவத்துக்கு நன்றி தெரிவித்த ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரின் கருத்துக்களுக்கு தாம் மிக முக்கியத்துவம் கொடுப்பதாகவும், இந்த விடயங்கள் தொடர்பில் தமது சொந்த நாட்டு அரசுடன் ஐரோப்பிய ஒன்றியத்தில் எடுத்துரைப்பதாகவும் உறுதியளித்தனர் - என்றுள்ளது. (உ-5)

## சிங்களக்...

முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான வடக்கு மாகாண சபையின் சிறப்பு அமர்வு நேற்று வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள் தொடர்பாக ஆராய நாம் சிறப்பு அமர்வை ஒழுங்குபடுத்தினோம். இந்த அமர்வில் பல உறுப்பினர்களும் பலவாறான கருத்துக்களையும் கோரிக்கைகளையும் விடுத்துள்ளீர்கள். முல்லைத்தீவு மாவட்டம் மட்டுமல்லாது வன்னிப் பிரதேசங்கள் பலவற்றிலும் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

நாம் இவற்றைத் தடுத்து நிறுத்த இரண்டு வகையான முயற்சிகளை எடுப்போம். எதிர்வரும் 10 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களக் குடியேற்ற இடங்களை பார்வையிடுவதுடன் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக அனைத்து மாகாண சபை உறுப்பினர்களும் இணைந்து கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுப்போம்.

போராட்டத்தின் நிறைவில் மாவட்டச் செயலரிடம் மனு ஒன்றைக் கையளித்து அரசதலைவர் மற்றும் தலைமை அமைச்சருக்கு எமது கோரிக்கையை வலியுறுத்துவோம். எமது நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் சந்திப்பை மேற்கொள்வோம்- என்றார். (ற-8)

## தவறவிடப்பட்ட...

தாரிகளும் உள்வாங்கப்படவுள்ளனர். இது தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் எழுத்தில் விடுத்த கோரிக்கையை ரணில் ஏற்றுக்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் 20ஆயிரம் பட்டதாரி பயிலுநர்களுக்கு நியமனம் வழங்கும் நோக்கில் இந்த மாதம் 16ஆம் திகதி தொடக்கம் மாவட்டச் செயலகங்களில் நேர்முகத் தேர்வுகள் இடம் பெறவுள்ளன. அதுபற்றிப் பட்டதாரிகளுக்கு தனிப்பட்ட அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. ஆனால், பலருக்கு நேர்முகத் தேர்வுக்கான கடிதங்கள் அனுப்பப்படவில்லை.

அதாவது 2016.12.31க்கு முன்னர் பட்டம் பெற்ற வேலைதேடும் பட்டதாரிகள் மாவட்டச் செயலகங்களில் பதிவுகளை மேற்கொண்டிருந்தபோதும் ஒன்லைனில் பலர் பதிவுசெய்யத் தவறிவிட்டனர். அவ்வாறு வடக்கு கிழக்கு பகுதியில் மட்டும் சுமார் ஆயிரம் பேர் உள்ளனர். அவர்கள் நேர்முகத் தேர்வை இழக்கும் நிலை காணப்படுகிறது. எனவே வேலை தேடும் பட்டதாரிகளாகப் பதிவு செய்த குறித்த திகதிக்கு முன்னர் பட்டம் பெற்ற அனைவரையும் அழைக்க உடன் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சம்பந்தன் நேற்றுக் அவசர கோரிக்கை விடுத்திருந்தார். அதனை ஆராய்ந்த ரணில்,

குறித்த திகதிக்கு முன்னர் பட்டம் பெற்று நேரடியாகப் பதிவுகளை மேற்கொண்டவர்களையும் நேர்முகத் தேர்வுக்கு உள்வாங்குமாறு அமைச்சின் ஊடாக மாவட்டச் செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படும் என்று உத்தரவாதமளித்தார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,105)

## மாற்றத்துக்கு...

தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குரல் எழுப்பப்பட்டது. தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மான விவகாரம் முடிவுக்கு வந்ததும், கட்சி மறுசீரமைப்பு முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே கட்சியின் பொதுச் செயலர் பதவி விலகியுள்ளார்.

பதவி விலகலுக்கான கடிதம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும், கட்சி மறுசீரமைப்புக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் வகையிலேயே இந்த முடிவை தான் எடுத்தார் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, கட்சியின் பொதுச் செயலராக இருந்த திஸ்ஸ அத்தநாயக்க விலகிய ஒரு மணித்தியாலத்தில் என் மீது நம்பிக்கை வைத்து பொதுச் செயலராக என்னைக் கட்சியின் தலைவரான தலைமை அமைச்சர் அறிவித்திருந்தார். அதன்படி இன்றுவரை எனது பணிகளைச் செய்துள்ளேன். எதிர்வரும் சில நாள்களில் கட்சியில் மேற்கொள்ளப்படவுள்ள முற்றுமுழுதான மறுசீரமைப்புகளுக்கு ஆதரவளிக்கும் வகையிலேயே நான் பதவி விலகியுள்ளேன். நான் பதவிகளுக்காக ஒருபோதும் செயற்பட்டதில்லை. கட்சிக்காகவே செயற்படுகின்றேன் என்றார். (5)

## சாவகச்சேரி...

அமர்வு நேற்று வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்றது. அதில் தவிசாளர், உபதவிசாளர் தெரிவுகள் இடம்பெற்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கந்தையா வாமதேவனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் கந்தையா சதீஸ்கரனும் தவிசாளர் பதவிக்கு முன்மொழியப்பட்டனர்.

பகிரங்க வாக்கெடுப்பு நடத்துவதற்கு உறுப்பினர்கள் விருப்பம் தெரிவித்தனர்.

கந்தையா வாமதேவன் 23 வாக்குகளைப் பெற்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி., சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐ.தே.க., தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி என்பன வாமதேவனுக்கு ஆதரவாக வாக்களித்தன. சதீஸ்வரன் 6 வாக்குகளைப் பெற்றார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் அவருக்கு வாக்களித்தனர். 17 மேலதிக வாக்குகளைப் பெற்று வாமதேவன் தவிசாளராகத் தெரிவானார்.

உதவித் தவிசாளர் பதவிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் செல்வரத்தினம் மயூரன் முன்மொழியப்பட்டார். வேறு எவரும் இந்தப் பதவிக்கு முன்மொழியப்படாததால் அவர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். (ற-9,173,131)

## வன்புணர்ந்த...

காகத் தனக்கு அறிமுகமான குறித்த ஆசிரியர் ஒருவரிடம் கணித பாட கடந்த கால வினாத் தாள்களை வாங்கித்தர முடியுமா என்று மாணவி கேட்டுள்ளார். வாங்கித் தருவதாகக் கூறியும் இரண்டு தடவை ஏமாற்றியுள்ளார். மூன்றாவது தடவையும் குறித்த சிறுமி ஆசிரியரின் வீட்டுக்குச் சென்று வினாத்தாள்களைக் கேட்டபோது ஆசிரியர் வாங்கி வரவில்லை என்று கூறியுள்ளார்.

தவிர, தனது காணியில் வேலை செய்பவர்களுக்குத் தேநீர் ஊற்றிக்கொடுக்குமாறு கூறியுள்ளார்.

தேநீர் ஊற்றுவதற்காகச் சிறுமி வீட்டுக்குள் சென்றபோது குறித்த ஆசிரியர் சிறுமியை வன்புணர்ந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது. குறித்த ஆசிரியர் கைது செய்யப்பட்டார். வவுனியா நீதிவான் மன்றில் ஆரம்ப விசாரணைகள் இடம்பெற்ற பின்னர் வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டிருந்தது. கடந்த ஜூலை 18ஆம் திகதி இந்த வழக்குத் தொடர்பான குற்றப்பகர்வு பத்திரம் விசாரணைக்காகச் சட்டமா அதிபர் திணைக்களத்தால் வவுனியா மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. மேல்நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் முன்னிலையில் விளக்கம் இடம்பெற்று நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதிபதி தீர்ப்பில் தெரிவித்ததாவது:

குறித்த வழக்கு விசாரணைகளிலிருந்து எதிரியான ஆசிரியர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது. அவர் குற்றவாளி என்று மன்று முடிவுக்கு வருகிறது.

அவருக்கு 20 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இழப்பீடாக 5 இலட்சம் ரூபா செலுத்த வேண்டும். செலுத்தத் தவறின் ஒரு வருடம் கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும். குற்றவாளிக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டம் விதிக்கப்படுகிறது. செலுத்தத் தவறின், ஆறு மாதங்கள் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என்று நீதிபதி தெரிவித்தார்.

### குற்றங்கள் தொடர்வதற்கு நீதிபதி வேதனை தெரிவிப்பு

"இந்த வகையான குற்றங்களுக்கு இந்த நீதிமன்றம் கடுமையான தண்டனைகளை வழங்கித் தீர்ப்பளிக்கின்றபோதும் சமூகத்தில் வன்புணர்வு போன்ற குற்றச்செயல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றமை வேதனைக்குரியது. சமூகத்தில் கௌரவமான புனிதமான தொழில்களில் இருந்து கொண்டு இது போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களுக்கும், ஈடுபட நினைப்பவர்களுக்கும் இந்தத் தீர்ப்பின் மூலமாக எச்சரிக்கை விடுக்கப்படுகிறது" என்று நீதிபதி தனது தீர்ப்பில் மேலும் தெரிவித்தார்.

வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி ஐ.எம்.எம்.பாகிம் வழக்கை நெறிப்படுத்தினார். (4,110)

# வெற்றி பெற்றதும் விகாரைக்கு ஓடிய ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஏப். 6
கூட்டு எதிரணியினரால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத்தீர்மானத்தை தோற்கடித்த பின்னர், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கங்காராமய விகாரைக்குச் சென்று வழிபாடு நடத்தினார்.
தலைமை அமைச்சருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் 46 வாக்குகளால் தோல்வியடைந்தது. நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் ஒவ்வொருவராகப் பெயர் அழைத்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. முடிவு சுமார் அரை மணிநேரத்தில் அறிவிக்கப்பட்டு, நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.
இதையடுத்து, உடனடியாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, மனைவி, மைத்திரி விக்கிரமசிங்கவுடன், கங்காராமய விகாரைக்குச் சென்று வழிபாடு நடத்தினார்.
அவருடன் பெருமளவான ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களும் அங்கு குழுமியிருந்தனர். (5)



# கூட்டு அரசு தொடரும்

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 6
தற்போதைய கூட்டு அரசு தொடரும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நடந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு தோற்கடிக்கப்பட்டதை அடுத்து, கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
"கூட்டு அரசின் சில உறுப்பினர்களை நாம் இழந்திருக்கிறோம். ஆனால், எஞ்சியுள்ள உறுப்பினர்களுடன் தற்போதைய கூட்டு அரசு தொடர்ந்து முன்னெடுக்கப்படும். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை வெள்ளிக்கிழமை சந்தித்து இதுபற்றி ஆராயப்படும்" என்றும் அவர் தெரிவித்தார். (5)

## குழப்பவாதியின் குதர்க்கமான பதிவு

கொழும்பு, ஏப். 6
ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரும், இராஜாங்க அமைச்சருமான சுஜீவசேனசிங்க,தலைமை அமைச்சர் ரணிலுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியவர்களில் ஒருவர். இவர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பின்போது, தனது வாக்கை வித்தியாசமாகச் செலுத்தினார்.
நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவு அல்லது இல்லை என்றே, பெயர் கூப்பிடும்போது கையை உயர்த்தி உறுப்பினர்கள் சொல்லவேண்டும். சிங்கள உறுப்பினர்கள் எல்லோரும் சிங்களத்திலேயே தங்கள் பதிலைச் சொல்லி வாக்கைப் பதிவு செய்தனர்.
ஆனால் சுஜீவ சேனசிங்க மாத்திரம் 'இல்லை' என்று தனது வாக்கைப் பதிவு செய்தார். அவர் இப்படிச் சொன்னதும் சபையில் சிரிப்பொலிஎழும்பியது. (5)

## தீர்மானத்தில் கையெழுத்து: வாக்கெடுப்பில் திடீர் மாயம்!

கொழும்பு, ஏப். 6
தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையெழுத்திட்ட இரண்டு உறுப்பினர்கள், வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது சபையில் மாயமாகியிருந்தனர்.
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மகிந்த அணியினரால் கடந்த மாதம் 21ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்களான காதர் மஸ்தான் மற்றும் நிசாந்த முத்து ஹெட்டிகம ஆகியோர் கையெழுத்திட்டிருந்தனர்.
நம்பிக்கையில்லாத் தீர்மானம்மீதானவாக்கெடுப்பு பெயர் கூறி நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோது, இரண்டு உறுப்பினர்களும் சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை. (5)

# சிறுபான்மைச்சமூகத்தின் ஆதரவிலேயே ரணில் விக்கிரமசிங்க தப்பிப் பிழைத்தார்

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 6
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம், சிறுபான்மை சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் ஏகோபித்த ஒற்றுமையினாலேயே தோற்கடிக்கப்பட்டது. இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டமை தொடர்பில் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சிறுபான்மை சமூகத்தினரே தோற்கடித்துள்ளனர். சிறுபான்மைக் கட்சிகளான மலையத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி, வடக்கு-கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி உட்பட முஸ்லிம் கட்சிகளும் இணைந்து எதிராக வாக்களித்து உள்ளன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வாக்கெடுப்பில் கலந்துக் கொள்ளவில்லை. இதையும்நம்பிக்கையில்லாத்தீர்மானத்துக்கு ஆதரவாகக் கருதுகின்றேன். ஒட்டு மொத்தத்தில் இலங்கையின் சிறுபான்மைக் கட்சிகள் யாவும் ஒற்றுமையாக இணைந்து செயற்பட்டுள்ளன.
இதைஉணர்ந்துஅரசுஎதிர்காலத்தில்செயற்பட்டுச் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்து தீர்வுகாணவேண்டும். 30ஆண்டுகால கொடூரப் போர் காரணமாக ஏற்பட்டுள்ள இனப்பிரச்சனைக்குத்தீர்வுகாணப்படல் வேண்டும். இதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகும். சிறுபான்மைக் கட்சிகளும் தலைவர்களும் இதைச் சரியாகப் பயன்படுத்திச் சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்குத்தீர்வுபெற்றுக் கொடுக்க வேண்டும். இந்தநாட்டில்எந்த ஒருஅரசும்ஆட்சியைஅமைக்கவேண்டுமானாலும் அல்லது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானாலும் சிறுபான்மைமக்களின்ஆதரவுகட்டாயம் தேவை என்பதை இது உணர்த்தி நிற்கின்றது - என்றுள்ளது. (5)

## சு.கவிலிருந்து ஆதரவளித்தோர் யார் ?

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.
சுசில் பிரேமஜெயந்த, தயாசிறி ஜெயசேகர, டிலான் பெரேரா, ஜோன் செனிவிரத்ன, லக்ஸ்மன் வசந்த பெரேரா, சுதர்சனி பெர்னான்டோ புள்ளே, தாரநாத் பஸ்நாயக்க, சுசந்த புஞ்சிநிலமே, அனுர பிரியதர்சன யாப்பா, எஸ்.பி.திசநாயக்க, லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன, சந்திம வீரக்கொடி, அனுராத ஜெயரத்ன, சுமேதா ஜெயசேன, ரி.பி.எக்கநாயக்க, திலங்க சுமதிபால.
ஆகிய தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்த போது, கூட்டு எதிரணியினர் மேசைகளைத் தட்டி ஆரவாரம் செய்தனர். (5)

## பழிவாங்கும் அரசியலுக்கு துணைபோகோம்

### இ.தொ.கா. தெரிவிப்பு

பழிவாங்கும் அரசியலுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒருபோதும் துணைபோகாது என்று அந்தக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்தார்.
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் அந்தக் கட்சி பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (5)



# விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லையாம்

## சொல்கிறார் மகிந்த

கொழும்பு, ஏப். 6
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்தாலும், தமக்கு வெற்றியே என்று, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில்வாக்கெடுப்புமுடிந்த பின்னர், செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட மகிந்த ராஜபக்ச, சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தால், முடிவு மாறியிருக்கும். முதலில் எமக்கு ஆதரவாக 54 வாக்குகள் தான் இருந்தன. இப்போது, 76 வாக்குகளாக அதிகரித்துள்ளது. இது எமக்கு வெற்றி தான், என்று அவர் தெரிவித்தார். (5)

# ஊடக அமைச்சு மைத்திரி வசமாகலாம்

கொழும்பு, ஏப். 6
அமைச்சரவையை உடனடியாக மாற்றியமைப்பதற்கு அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேனதீர்மானித்திருக்கின்றார் என்று அறியமுடிகின்றது.
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு முடிவுக்கு வந்துள்ள சூழ்நிலையில் இந்தச் சூட்டோடு அமைச்சரவையை மாற்றி புதிய அமைச்சரவையை உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
இந்த அமைச்சரவை மாற்றத்தின் போது ஊடக அமைச்சு அரச தலைவரின் கீழ் கொண்டுவரப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மான விடயம் கடந்த வாரங்களில் சூடுபிடித்திருந்தபோது அரச ஊடகங்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் குறிப்பாக அரச தலைவரின் ஆதரவுத் தரப்புக்கு முக்கியத்துவமளிக்காமல் செயற்பட்டமை தொடர்பில் மைத்திரி தரப்பு அதிருப்தியில் இருக்கின்றது எனவும், இதனாலேயே ஊடக அமைச்சைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க மைத்திரி தீர்மானித்திருக்கின்றார் எனவும் அரசதலைவர் மைத்திரிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. (5)

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் திட்டமிட்ட அரசியல் சூழ்ச்சியே

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க



கொழும்பு, ஏப். 6

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதன் பின்னணியில் முழுமையான அரசியல் சூழ்ச்சியே இருக்கின்றது. இந்த நாட்டைச் சீரழித்து மக்களின் ஆணையை அழிக்கவே இவர்கள் முயற்சித்து வருகின்றனர்.

இவ்வாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நாடாளுமன்றில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய வங்கி விடயத்தில் கடந்த காலத்தில் இருந்து பெரிய ஊழல்கள் இடம்பெற்றன. அவை எவையும் வெளிவரவில்லை. இந்த ஆட்சியில் இடம்பெற்ற சில சம்பவங்கள் வெளிவந்துள்ளன. அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. சட்ட நடவடிக்கைகளை எடுத்துக்குற்றவாளிகளைத் தண்டிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சிலரைத் தண்டித்துள்ளதுடன் சிலர் குறித்து விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சிலர் இன்னும் வெளியில் உள்ளனர். அதனை மறுக்கவும் முடியாது. தேங்காய் எடுத்த குற்றத்தில் சிறையில் அடைத்த நாட்டில், கோடிக்கணக்கில் களவெடுத்த நபர்கள் வெளியில் சுதந்திரமாக உள்ளனர். இதில் எமக்கு அதிருப்தி உள்ளது. கள்ளர்களைத் தண்டிக்க வேண்டும். அரசு இந்த விடயங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற விமர்சனம் எம்மத்தியிலும் உள்ளது. அவற்றை நிவர்த்தி செய்ய நாம் அழுத்தம் கொடுத்து இன்று மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றோம். புதிய நீதிமன்றக் கட்டமைப்புகளை உருவாக்கி அதன் மூலம் குற்றவாளிகளைத் தண்டிக்கும் நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

கடந்த தேர்தல் மூலம் எந்தத் தலைமைகளுக்கும் முழுமையான ஆதரவை மக்கள் கொடுக்கவில்லை. அதனை நாம் அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும். மகிந்த ராஜபக்ச தேசிய வாதம், போர் வெற்றி என்று எதைக் கூறினாலும் மக்களின் முழுமையான ஆதரவு அவர்களுக்கு இல்லை என்பதை நன்கு உணர்ந்துள்ளனர்.

இவற்றை விளங்கிக் கொண்டு கூட்டு எதிர்க் கட்சியினர் நாட்டைக் குழப்பி வருகின்றனர். அரச தலைவர் தேர்தலில் இவர்களால் ஆட்சியை கைப்பற்ற முடியாது என்பதைத் தெரிந்து கொண்டு நாட்டைக் குழப்பி வருகின்றனர். இதற்கு இடமளிக்க முடியாது. நாம் மேலும் பலமடைந்து ஆட்சியைத் தக்கவைத்து எமக்கு எதிரான சக்தியை வீழ்த்த வேண்டும். அரசாக நாம் எமது அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம் -என்றார். (5,31

# மைத்திரிபால மீண்டும் காட்டிக் கொடுத்துவிட்டார்

## நாமல் எம்.பி. வேதனை



கொழும்பு, ஏப். 6

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மீளவும் காட்டிக் கொடுத்துவிட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச குற்றஞ்சுமத்தியுள்ளார். மைத்திரி காட்டிக் கொடுப்பதைப் பழக்கமாகக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நாமல் ராஜபக்ச தெரிவித்ததாவது:

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு முதலில் அரச தலைவர் மைத்திரியே ஊக்கமளித்திருந்தார். சுசில் பிரேமஜயந்த உள்ளிட்ட கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கொள்கை அடிப்படையில் சரியான தீர்மானத்தை எடுத்திருந்தமை வரவேற்கப்பட வேண்டியது.

நம்பிக்கையில்லாத்தீர்மானத்தின் ஊடாக, திருடர்களை யார் காப்பாற்றுகிறார்கள் என்று நன்றாகவே தெரிகின்றது. பிணைமுறி மோசடியாளர்களை யார் காப்பாற்றுகிறார்கள் என்று மக்களுக்குத் தெரியவந்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவுடன் ராஜபக்சவுக்கு ஒப்பந்தம் உள்ளதாகக் குறிப்பிட்டார்கள். ரணிலுடன் ஒப்பந்தம் செய்து நாட்டை விற்பது யார் என்று இன்று வெளிப்படையாகியுள்ளது. இது உலகுக்கே இன்று தெரியவந்துள்ளது. எம்மீது குற்றஞ் சுமத்தினார்களே ஒழிய மக்களின் பிரச்சினை தொடர்பில் இவர்கள் பேசவில்லை. மக்கள் இனிமேல் அவதானமாக இருக்கவேண்டும். நாம் ஒப்பந்தங்கள் செய்து, மகிந்தவை தலைமை அமைச்சராக்க மாட்டோம். பொதுத் தேர்தலே இன்று எமக்கு அவசியமாகும். அதற்கான வேலைத்திட்டங்களை நாம் செய்துவருகின்றோம். அதன் முதற்கட்டமே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம். வெகுவிரைவிலேயே பொதுத் தேர்தல் ஊடாக மக்கள் ஆட்சியை நிறுவுவோம் - என்றார். (5)

# தொண்டாவின் 'கண்' கதைக்கு நாடாளுமன்றில் திலகர் பதிலடி

கொழும்பு, ஏப். 6

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஒரு கண் என்றும், மகிந்த ராஜபக்ச மற்றொரு கண் என்றும் கூறியவர்களுக்கு நாளை ரணில் மேலுமொரு கண்ணாகக்கூட மாறலாம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ் தெரிவித்தார்.

கொள்கையற்ற இவர்கள்தான் தோட்டத் தொழிலாளர்களைக் கண்ணற்றவர்களாக்கியுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் திலகராஜ் மேற்கண்டவாறு கூறினார்.

"இன்று ஆறுமுகன் தொண்டமானுக்காக குரலெழுப்பும் மகிந்தானந்த அளுத்கமகேதான் அன்று கண்டி மாவட்டத்துக்குள் நுழையவிடாமல் தொண்டமானை அடித்துவிரட்டினார்" எனவும் அவர் குறிப்பிட்டார். (5)

# மோசடியாளர்களின் ஆட்டம் முடிவுக்கு வருகிறது

## எச்சரிக்கிறார் ராஜித



கொழும்பு, ஏப். 6

நாட்டைச்சீரழித்த கொலைகாரர்களினதும் மோசடியாளர்களினதும் இறுதி ஆண்டு இதுதான். அது உணரப்பட்டுள்ள நிலையில் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிகளை அவர்கள் முன்னெடுக்கின்றனர்.

இவ்வாறு அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இங்கு ராஜித மேலும் தெரிவித்ததாவது:

உதயங்க வீரதுங்க ஜப்பானில் யாருடன் ஒளிப்படம் எடுத்திருந்தார்? மகிந்தவுடனேயே அவர் ஒளிப்படத்தில் உள்ளார். மிக் வானூர்திக் கொள்வனவு மோசடி குறித்துத் தேடப்படுகின்ற முக்கிய சந்தேக நபர் தான் உதயங்க வீரதுங்க. பாங்கொக் சென்றிருந்த போதும் அவர்களுடனேயே இந்தச் சந்தேக நபரும் இருந்தார். அமெரிக்காவுக்குச் செல்வதற்கு முயற்சித்தபோதே டுபாய் வானூர்தி நிலையத்தில் உதயங்க வீரதுங்க தடுத்து நிறுத்தப்பட்டார். அப்போது அமெரிக்காவில் யார் இருந்தது? முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவே இருந்தார். அப்போது திடீரென உதயங்க வீரதுங்க என்னைப் பார்க்க அமெரிக்கா வர முற்படவில்லை என்று கோத்தபாய குறிப்பிட்டார்.

உதயங்க வீரதுங்கவைச் சரணடையுமாறும் அவர் குறிப்பிட்டார். சரணடையவில்லை. சரணடைந்து இங்கு வந்து சாட்சியமளித்திருந்தால் பின்னணியில் உள்ள அனைவரும் சிறைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும். மோசடி குறித்த அனைத்து விடயங்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. உதயங்க வீரதுங்க சாட்சியமளித்தால் யார் சிறைக்குச் செல்வார்கள் என்பது வெளிப்பட்டமையினாலேயே ஆட்சி கவிழ்க்கும் முயற்சிகளும் இங்கு முன்னெடுக்கப்படுகின்றன.

உக்ரேன் பாதுகாப்பு அமைச்சர் மிக் கொள்வனவு குறித்து வாக்குமூலம் தந்துள்ளார். மிக் கொள்வனவு உண்மையான விலை அனைத்தும் கிடைக்கப்பெற்றுள்ளன. நாட்டை சீரழித்த கொலைக்காரர்களினதும் மோசடிகார்களினதும் இறுதி ஆண்டு இதுதான் எனக் கூறியிருந்தோம்.

இந்த நடவடிக்கைகளை எதிர்கொள்ள முடியாத நிலையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் மற்றும் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி என்று முன்னெடுக்கின்றனர் - என்றார். (5)



# மகிந்தவுக்கு நன்றி கூறுகிறார் மங்கள

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததன் மூலம், தலைமை அமைச்சர் மீதான நம்பிக்கையைப் பலப்படுத்த உதவிய மகிந்த ஆதரவு ஒன்றிணைந்த எதிரணியினருக்கு நன்றி தெரிவிப்பதாக நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவொரு புதிய அத்தியாயம். ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவையும் பாதுகாத்துக் கொண்டு புதிய பாதையில் பயணிப்பதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. அரசில் இருந்து கொண்டு ஒன்றிணைந்த எதிரணிக்கு ஆதரவாக வாக்களித்தவர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன் - என்றார். (5)

# தீர்மானத்தை வென்றது ரணிலின் அரசியல் இராஜதந்திரம்

## கூறுகிறார் குணதாச அமரசேகர



கொழும்பு, ஏப். 6

தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் ரணிலின் அரசியல் இராஜதந்திரம் முழுமையாக வெளிப்பட்டுள்ளது.

இவ்வாறு கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தனது பதவியைத் தக்கவைத்துக் கொள்வதற்காகக் கூட்டு அரசின் கொள்கைகளையும் மீறிச் செயற்படுவார் என்ற விடயத்துக்கு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் சிறந்த உதாரணமாகக் காணப்படுகின்றது.

எவ்வித பக்கச்சார்பான விடயங்களையும் முன்னிலைப்படுத்தி ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் முன்வைக்கப்படவில்லை. நாட்டு மக்களின் கோரிக்கைகளுக்கு அமையவே நம்பிக்கையில்லாத் தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

இடம் பெற்றுமுடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் நாட்டு மக்கள் கூட்டு அரசுக்கு எதிராகத் தமது பெரிய எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அவற்றைப் பொருட்படுத்தாமல் தலைமை அமைச்சர் தொடர்ந்து கூட்டு அரசில் பதவி வகிப்பது வேடிக்கையாகவுள்ளது.

ரணில் மனச்சாட்சியுடன் செயற்படுபவராக இருந்தால் மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடியின் பின்னர் எவ்வித அழுத்தங்களும் இன்றி பதவி விலகியிருப்பார்.

ஆனால் இவை யாவும் நடைமுறையில் இடம்பெறவில்லை - என்றார். (5)

## கல்கிசையில் விபசார விடுதி சுற்றி வளைப்பு

### அறுவர் கைது



கொழும்பு, ஏப். 6

கல்கிசைப் பிரதேசத்தில் ஆயுள்வேத நிலையம் என்ற போர்வையில் நடத்திச் செல்லப்பட்ட விபசார விடுதியொன்று பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டது. அறுவர் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:

கல்கிசைப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போதே நிலையத்தை நடத்திச் சென்ற முகாமையாளர் உள்பட விபசாரத்தில் ஈடுபடத் தயாராகவிருந்த அறுவர் கைது செய்யப்பட்டனர் - என்றனர். (5)

## களனி விகாரையில் பொருள்கள் திருட்டு

### திருடனின் முகம் மறைகாணியில் சிக்கியது

கொழும்பு, ஏப். 6

களனி ரஜ மகா விகாரையில் இருந்த புராதன பெறுமதி மிக்க பொருள்கள் பல திருடப்பட்டுள்ளன. அது தொடர்பில் களனி பொலிஸார் சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

திருட்டுச் சம்பவமானது கடந்த 2 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகள் ஊடாகக் களனி விகாரையில் பொருத்தப்பட்டுள்ள மறைகாணியிலிருந்து (சி.சி.ரி.வி.) திருடன் என்று சந்தேகிக்கப்படும் நபரின் ஒளிப்படத்தைப் பொலிஸார் கண்டறிந்துள்ளனர். திருடனைப் பிடிக்கப் பொது மக்களின் உதவியைப் பொலிஸார் நாடியுள்ளனர். (5,71)

## பாடசாலைகள் இன்று மூடப்படுகின்றன

### கல்வி அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 6

அரச பாடசாலை மற்றும் அரச அனுமதி பெற்ற தமிழ், சிங்கள மொழி மூலமான பாடசாலைகள் முதலாம் தவணை விடுமுறைக்காக இன்று மூடப்படவுள்ளன. இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக அவை எதிர்வரும் 23 ஆம் திகதி திறக்கப்படவுள்ளன.

முஸ்லிம் பாடசாலைகள் முதலாம் தவணை விடுமுறைக்காக எதிர்வரும் 11 ஆம் திகதி மூடப்படும். இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் 18ஆம் திகதி திறக்கப்படவுள்ளன. (5)

# 193 உள்ளூராட்சி சபைகளில் மகிந்த அணியின் ஆட்சியே

### கூறுகிறார் ஜி.எல்.பீரிஸ்



கொழும்பு, ஏப். 6

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி 193 சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது. இருநூறுக்கும் அதிகமான சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும் என்கின்ற நம்பிக்கை எமக்குள்ளது. இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி 157 சபைகளில் ஐம்பது சதவீதத்துக்கு அதிகமான ஆசனங்களைப் பெற்றுள்ளது.


அங்கு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி ஆட்சியமைப்பதில் எவ்விதச் சிக்கலையும் எதிர்கொள்ளவில்லை.

ஐம்பது சதவீதத்துக்கு அதிகமான ஆசனங்களைப்பெற முடியாது போன 36 மன்றங்களிலும் ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைக்க முடிந்துள்ளது. இருநூறுக்கும் அதிகமான சபைகளைச் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி கைப்பற்றறும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

இது எதிர்வரும் பொதுத் தேர்தலிலும் முக்கிய பங்கு வகிக்கவுள்ளது.

எமது கட்சி சார்பில் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் பயன் தரும் வகையில் தமது பணியை முன்னெடுக்கவுள்ளனர். அதற்கான ஆலோசனைகள் அந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன - என்றார். (5)

**கேலிச்சித்திரம்**



நன்றி: லக்பிம

**அட! அப்படியா சங்கதி!!**



### அமைச்சராகும் உதய கம்மன்பில

பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவுக்கு அமைச்சுப் பொறுப்பொன்றை வழங்கவுள்ள தாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவிடம் தெரிவித்தாராம்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான விவாதம் முடிந்த கையோடு நாடாளுமன்ற மின்னுயர்த்தியின் அருகே முன்னாள் அரச தலை வரைச் சந்தித்தபோதே தலைமை அமைச்சர் இந்தக் தகவலைத் தெரிவித்தாராம். இதனைக் கேட்டு அதிர்ச்சியடைந்தாலும் பின்னர் சுதாகரித்துக் கொண்ட முன்னாள் அரச தலைவர், "ஏன் கம்மன்பிலவுக்கு அமைச்சுப் பதவியைக் கொடுக் க்கப் போகிறீர்கள்?" என்று ரணிலைப் பார்த்துக் கேட்டாராம்.

"இல்லை... நாடாளுமன்றத்தில் எனக்குப் பலத்தைக் காண்பிக்க உதவிய உதய கம்மன்பில. எனது எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சமர்ப்பித்து அரசியலிலும் என்னைப் பலப்படுத்திவிட்டார். அவருக்கு அமைச்சுப் பதவியை வழங்கினால் தப்பில்லையே" என்று கூறி சத்தமாகச் சிரித்தாரர்ம் ரணில். அவருடன் சேர்ந்து மகிந்த ராஜபக்சவும் சிரித்தாராம்.

## நீதிபதியை மாற்றுமாறு மகிந்தானந்த மனு

கொழும்பு, ஏப். 6

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேவால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுக் கட்டளை பிறப்பித்தது.

கொழும்பு 7, கின்ஸி வீதியில், 27 மில்லியன் ரூபா பெறுமதியான வீடொன்றைக் கிறிஸ்தோபர் ரொசான் என்பவரின் பெயரில் மகிந்தானந்த வாங்கினார் என்றும், வீடு வாங்கிய பணம், சட்ட விரோதமாகச் சேர்க்கப்பட்டது என்றும் குற்றஞ் சாட்டப்பட்டு, சட்டமா அதிபரால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்ற நிலையில், வழக்கை வேறு நீதிபதி முன்னிலையில் மாற்றி விசாரிக்க அனுமதிக்குமாறு மகிந்தானந்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான குமுதினி விக்கிரமசிங்க, ஜனக் டி சில்வா ஆகியோரடங்கிய குழாம் முன்னிலையில் மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அடுத்த அமர்வுத் தினமாக மே 15ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. (5)

## 6 அமைச்சர்களை நீக்குமாறு 33 எம்.பிக்கள் போர்க்கொடி!

### ரணிலுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது

கொழும்பு, ஏப். 6

தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்த, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆறு அமைச்சர்களையும் பதவி நீக்கம் செய்யுமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் 33 உறுப்பினர்கள் தலைமை அமைச்சரிடம் எழுத்து மூலம் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

அமைச்சர்களான் எஸ்.பி.திசாநாயக்க, டபிள்யூ.டி.ஜே.செனவிரட்ன, அனுர பிரியதர்சன யாப்பா, சுசில் பிரேமஜயந்த, சந்திம வீரக்கொடி மற்றும் தயாசிறி தயசேகர ஆகியோரைப்பதவிநீக்குமாறுதலைமை அமைச்சரிடம் கோரப்பட்டுள்ளது.

தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மான யோசனை தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், இந்த ஆவணம் ரணிலிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரசில் அங்கம் வகித்துக் கொண்டு அரசை விமர்சனம் செய்தல், அமைச்சரவைத் தீர்மானங்களை விமர்சனம் செய்தல் உள்ளிட்ட அரசுக்கு எதிரான செயற்பாடுகளால் இவர்களை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கை தொடர்பான பிரதியொன்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (5)

# புலனாய்வு அதிகாரியின் விளக்கமறியல் நீடிப்பு

மாணவர்கள் ஐவர் உள்பட 11 பேர் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவரையும் எதிர்வரும் 11ஆம் திகதிவரை மறியலில் வைக்குமாறு கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன நேற்று உத்தரவிட்டார்.

திருகோண்மலை கன்சைட் முகாமிலிருந்து பொலித்தீன் பையால் சுற்றப்பட்ட சடலங்களை லொறியொன்றில் ஏற்றினர் என்ற சந்தேகத்தில் கடற்படையின் முன்னாள் புலனாய்வு அதிகாரி கஸ்தூரிலாகே காமினி, 9ஆவது சந்தேகநபரான மெண்டிஸ் ஆகியோரின் விளக்கமறியலே நீடிக்கப்பட்டது.

2008ஆம் ஆண்டு மற்றும் 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில், இடம்பெற்ற கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பி. தஸநாயக்க உட்பட எழுவருக்கு எதிராகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு, கோட்டை நீதிமன்றத்தால் அறுவரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

ரியர் அட்மிரல் ஆனந்த குருகேவை இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக இரண்டு தடவைகள் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அழைத்தும் அவர் வருகை தரவில்லை என்று கடந்த அமர்வில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அறிவித்திருந்திருந்தமைக்கமைய அவரை முன்னிலையாகுமாறு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தது.

கடந்த 4ஆம் திகதி அவரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டதாக நீதிமன்றத்தில் நேற்று அறிவித்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர், கடத்தலுடன்தொடர்புடையவர்என்று சந்தேகிக்கப்படும் கடற்படைக் கொமாண்டர் பிரசாத் ஹெட்டியாராச்சி தொடர்பில் வினவப்பட்டதாகவும் அறிவித்தனர். ஹெட்டியாராச்சி உரியமுறையில் விடுமுறை பெற்றுக்கொண்டுள்ளாரா என்று வினவியமைக்கு அதற்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என்று குறிப்பிட்டார் என்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அறிவித்தனர். (5)



## யாழ்.அத்தியடி பிள்ளையார் கோயில் பெருந்திருவிழா - 2018

06.04.2018 - வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.
13.04.2018 - வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பைரதம்
14.04.2018 - சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழா
15.04.2018 - ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழா.

**பகல் திருவிழாக்கள் தினமும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.**
**மாலைத் திருவிழாக்கள் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும்.**

பிள்ளையார் பணியில் நிற்கும்
கோயில் நிர்வாகம்

**விளம்பர அனுசரணை:- மைதிலி நகைமாடம்**
89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 7902**
(IN/6383)(11.17)

## கண்ணீர் பூக்கள்

எமது கல்லூரி ஆசிரியர் திருமதி குயின்மேரி விஜயரட்ணம்
அவர்களின் அன்புத் தந்தையார்

**லெஸ்லி ஜோர்ஜ் பிரேமச்சந்திரன் தோமஸ்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(in.6386) (13.17) **புனித பத்திரிசியார் கல்லூரி குடும்பம்.**

## கூறுவிலை கோரல்

எமது சமாசமானது பூநகரி பகுதியில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி செயற்றிட்டம் ஒன்றுக்காக பெக்கோ இயந்திரம் (செயின்). றோளர், டோசர் ஆகியவற்றுக்கான வேலைக்கான கூறுவிலை கோரப்படுகின்றது. பொருத்தமானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**குறிப்பு:- கூறுவிலையினைப் பின்வரும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.**

**தலைவர்/ பொதுமுகாமையாளர்**
**பூநகரி கடற்றொழிலாளர்**
**கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்**
**ஜெயபுரம், பல்லவராயன்கட்டு.**

**சி.கிருபாகரன் (GM)**
**077 465 9877, 021 321 7575**
(AKN/427)(11)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**தம்பு நடேசு**

**(Retired Senior Tax Officer, Department of Inland Revenue)**



தோற்றம்
04.11.1935

மறைவு
22.03.2014

திதி:- அபரபக்க சஷ்டி
(06.04.2018)

நான்கு ஆண்டுகள் நகர்ந்தாலும்
எம் ஈரவிழிகள் இன்னும் காயவில்லை
நீளும் காலப் பெருவெளியில்
எம்முடன் நீளுகின்றன உங்கள் நினைவுகள்....

381, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்,
குடும்பத்தினர்.
(CS/14488)(11.17)

## மணமகள் தேவை

1992 இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை. (CS 15446)(14.17)
**076 668 7662**

## வீடு விற்பனைக்கு

நந்தாவில் லேனில் அமைந்துள்ள 4½ பரப்புக் காணியில் உள்ள மாடிவீடு விற்பனைக்குண்டு. (7 அறைகளுடன் பெரிய வீடு)
**077 187 7754** (CS/14770)(11.17)

## வீடு வாடகைக்கு

மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம், மொடேண் கொஸ்பிற்றல் வளாகத்தில் சகல வசதிகளுமுடைய 5 அறை வீடு வாடகைக்கு உள்ளது. நேரில் அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளமுடியும்.
**தொடர்பு - 077 4833303**

## பணிப்பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி நின்று வீட்டுவேலைசெய்வதற்கு பணிப்பெண் தேவை.
**வயது - 45 - 50**
**சம்பளம் - 30 000/= மாதம் ஒன்றுக்கு**
**(உணவு, தங்குமிட வசதி இலவசம்)**
**தொடர்பு - 077 639 3782**

## மணிக்கூடுகள் விலைக்கு வாங்கப்படும்

Rolex, Omega, Phatak Philiph
இன்னும் பழைய கால
மூன்று மீட்டர் Watch
மணிக்கூடுகளும்.
விலைக்கு வாங்கப்படும்.
**077 703 1041**

## MAJESTIC CINEPLEX




Jaffna Bronze-3D
10.00AM | 1.30PM | 4.30PM | 7.30PM




Jaffna Silver
10.45AM | 1.45PM | 4.45PM | 7.45PM




Jaffna Platinum
1.30PM | 7.30PM




Jaffna Platinum
10.30AM | 4.30PM

மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள்
021 2227712
CEYLON THEATRES
Since 1928
www.ceylontheatres.lk
MajesticCineplexSL

## உதயன்

**விளம்பர தொடர்புகளுக்கு,**
**advt@uthayan.com,**
**021 493 1111**



## பொங்கல் விழாவும் குளிர்த்தி விழாவும்

கீரிமலை, கருகம்பனை
ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி அம்பாள் ஆலய
(நாச்சிமார்) வருடாந்த பங்குனித்திங்கள்
பொங்கல் விழாவும் குளிர்த்தி விழாவும்
09.04.2018 நடக்கவிருப்பதால் அடியார்கள்
அனைவரையும் அன்போடு
அழைக்கின்றோம்.

(CS 15457)(14.17) **ஆலய நிர்வாகசபை.**

## கண்ணீர் பூக்கள்



எமது கல்லூரி ஆசிரியர்
திருமதி குயின்மேரி விஜயரட்ணம்
அவர்களின் அன்புத் தந்தையார்
**லெஸ்லி ஜோர்ஜ்**
**பிரேமச்சந்திரன் தோமஸ்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**புனித பத்திரிசியார் கல்லூரி.** ஆசிரியர் சங்கம்
(in.6387) (13.17)

## கண்ணீர் அஞ்சலி



வேலணை பிரதேச செயலகத்தில் J/34 நயினாதீவு வடக்கு பிரிவின் கிராம அலுவலராகக் கடமையாற்றும் திருமதி கிரிதாஸ் **வினோதினி** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி பராசக்தி பாலசுந்தரம்**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்**
**நலன்புரி சங்கம்.**
(CS/15449)(11) **பிரதேசசெயலகம் - வேலணை.**

## நெஞ்சகலா நினைவலைகள்



**கதிரேசு**
**கதிர்காமநாதன்**

வாழ்நாள் தலைவராக அன்பால் ஆதரவாய் எம்மை வழிநடத்தி தன் காணியின் ஓர் பகுதியை ஆலய வளர்ச்சிக்குத் தந்தும் தன்னலம் கருதாமல் தொண்டாற்றி மறைந்த தங்கள் ஆத்மா துர்க்கையம்மன் பாதங்களில்சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

தோற்றம் 27.10.1937
மறைவு 07.03.2018

துயர் பகிரும்
ஸ்ரீ ஆதிதுர்க்கையம்மன் ஆலய பரிபாலன சபையினர்
பெருமாக்கடவை, அளவெட்டி.
(CS/15288)(11)

## மரண அறிவித்தல்

### குலசிங்கம் ஆறுமுகநாதன்



காரைநகர் சிவன் கோயிலடியைப்பிறப்பிடமாகவும்,ஜேர்மனி லிவர்குசன் ஐ வசிப்பிடமாகவும் கொண்ட குலசிங்கம் ஆறுமுகநாதன் 03.04.2018 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களானகாரைநகர்சிவன் கோயிலடியைச் சேர்ந்த குலசிங்கம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காரைநகர் களபூமி, நந்தாவிலைச்சேர்ந்த வினாசித்தம்பி - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சரோயினிதேவியின் அன்புக் கணவரும், தினேஷ், திவ்வியா, சிவனியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவனேஸ்வரி, சுந்தரேஸ்வரி, தினமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றஇராஜலிங்கம்மற்றும்விமலாதேவி, யோகலிங்கம், காலஞ்சென்ற சொர்ணலிங்கம் மற்றும் சிகாமணிதேவி, தியாகலிங்கம், சநதிராதேவி, காலஞ்சென்ற புவனச்சந்திரன், கலில், அற்புதராசா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.04.2018 ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**
(CS/15450)(11)
**0049 214 75597, 0049 1172 497292**

## வேலையாள்கள் தேவை

உதயநகர் கிளிநொச்சியில் இயங்கும்
**லக்ஷின்** கராச்சிற்கு உழவு இயந்திர பெட்டி அடிப்பதற்கு
வேலையாள்கள் தேவை
**077 456 0407 / 076 961 8992**



# சாதனை மாணவியை சந்தித்தார் குரே

யாழ்ப்பாணம், ஏப்.6

கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி.சி.ஈ சாதாரணதரப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழியில் பரீட்சை எழுதியவர்களில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட வேம்படி மகளிர் கல்லூரி மாணவியை வடக்கு மாகாண ஆளுநர் றெயினோல்ட் குரே தனது அலுவலகத்துக்கு அழைத்துப் பாராட்டினார்.

பாடசாலை அதிபர் மற்றும் பெற்றோர் சகிதம் யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்துக்கு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் வருகைதந்த மாணவி மிருதி சுரேஸ்குமாருக்கு ஆளுநர் பரிசில்பொதி வழங்கி மதிப்பளித்தார்.

யாழ். குடாநாட்டு மாணவர்கள் அண்மைக்காலமாக கல்வியில் முன்னேற்றம் அடைந்து வருவது மகிழ்ச்சி அளித்துள்ளதாகத் தெரிவித்த ஆளுநர் மிருதி சுரேஸ்குமார் மேலும் கல்வியில் முன்னேற்றம் கண்டு இந்த நாட்டுக்குச் சேவையாற்ற வேண்டும் எனக் கோரிக்கை விடுப்பதாகத் தெரிவித்தார். (எ-8)

வடக்குப் பாடசாலைகளில்

# வசதிகள் அதிகரிக்கின்றபோதிலும் மாணவர்கள் தொகையில் வீழ்ச்சி

மாகாணக் கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டு

வவுனியா, ஏப். 6

**வடக்கு மாகாணத்தில் முன்னர் பாடசாலைகளில் வசதிகள் குறைவாக இருந்தன. மாணவர்கள் அதிகம் இருந்தனர். ஆனால் தற்போது வசதிகள் அதிகரித்து மாணவர்கள் தொகை வீழ்ச்சி கண்டிருக்கிறது. வடக்கில் உள்ள ஆயிரத்து 10 பாடசாலைகளில் 10 இலட்சம் மாணவர்கள் படிப்பதற்குரிய வசதிகள் இருந்தும் மாணவர் தொகையோ 2 இலட்சத்து ஐம்பதாயிரமாகக் காணப்படுகிறது.**



இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன்.

வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலயத்தில் வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் அமைக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதிபர் கி.நந்தபாலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராக மாகாண கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: எந்தப் பாடசாலையையும் தரமுயர்த்துவது இல்லை என்ற பொதுவான ஒரு கொள்கையை இப்பொழுது நடைமுறைப்படுத்தி வருகின்றோம். ஆனால் வன்னிப் பாடசாலைகளில் அதன் தரங்கள் மற்றும் மாணவர் தொகையைப் பொறுத்து தரமுயர்த்துவது பற்றி ஆலோசனை செய்யப்படும். அத்துடன் வவுனியாவைப் பொறுத்தவரை ஆண்கள் மட்டும் கல்வி கற்பதற்கு ஒரேயொரு பாடசாலையாக தமிழ் மகாவித்தியாலயம் காணப்படுகிறது. அந்த நிலைமையை மாற்ற வேண்டிய தேவை உள்ளது. போர் காரணமாக எமது சனத்தொகை அதிகரிப்பு என்பது மிகவும் வீழ்ச்சி மட்டத்தில் காணப்படுகிறது. இந்த நாட்டிலே 75 வீதம் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக உள்ள நிலையில், கடந்த ஆட்சியிலே இராணுவத்தினர் 3 பிள்ளைகளைப் பெற்றால் அவர்களுக்கு 1 இலட்சம் ரூபாய் வைப்பிலிடப்படும் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச கூறினார். அதுபோலவே, சிங்கள இனம் அழியப்போகின்றது, எனவே ஒவ்வொருவரும் 5 குழந்தைகள் பெற வேண்டும் என்று ஞானசாரதேரர் கூறி வருகின்றார். இங்கு வினோதம் என்னவென்றால், எங்களை அழிப்பதற்கு அவர்கள் வரிந்து கட்டிக்கொண்டு செயற்படுகிறார்கள் என்பதே உண்மை. இந்த நாட்டின் ஆதிக்குடிகள் நாங்கள் என்ற வகையில் எமது சனத்தொகை பெருக்கத்தை அதிகரிக்க வேண்டிய தேவை எமக்கு இருக்கின்றது. அதனைவிட நாம் சிறுபான்மையாக இருந்தாலும் வலிமையானவர்களாக மாறவேண்டும்- என்றார்.

நிகழ்வில் வவுனியா நகர கோட்டக்கல்வி அதிகாரி பி.நடராஜா, பிரதிக்கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்) சகாயராஜா, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த கருணாநிதி, ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் விருந்தினர்களால் மரக்கன்றுகளும் நடப்பட்டன. (எ-110)

தடை செய்யப்பட்ட

# இழுவைமடி படகுத்தொழில் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.6

கடல் ஆராய்ச்சி நிறுவனமான நாரா நிறுவனத்துக்கு கடற்றொழில் அமைச்சு விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக கடல் அடித்தள இழுவைமடித்தொழில் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் கடற்றொழில் நிறுவனத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கலந்துரையாடலில் இழுவைமடித்தொழில் இடம்பெறும் பிரதேசங்கள் தொடர்பாகவும் அந்த தொழிலுக்கு பாவிக்கப்படும் வலைகள் தொடர்பாகவும் இந்தத் தொழில்முறையால் மீனவருக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட் டது.

நாரா நிறுவனம் இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ள இழுவைமடித் தொழில் தொடர்பான ஆய்வொன்றை மேற்கொள்ளவுள்ளது. அதற்கான ஆரம்பக் கட்டக் கலந்துரையாடலே இடம்பெற்றது.

அன்றைய தினம் காலையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் தீவகம், வடமராட்சி, வடமராட்சி கிழக்கு, மாதகல், சுழிபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மீனவர்கள் கலந்துகொண்டனர். அவர்களிடம் நேரடியாகக் கருத்துக்கள் பெறப்பட்டன.

அதேபோன்று மாலை நடைபெற்ற கலந்துரையாடலில் குருநகர், நெடுந்தீவு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த குறித்த தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் கலந்துகொண்டு கருத்துக்கள் தெரிவித்தனர். அவர்கள் தாங்கள் தொழில் செய்கின்ற இடப்பரப்புக்களை தெளிவுபடுத்தினர். மேலதிக ஆய்வுக்காக நாரா நிறுவனம் மற்றும் சமுத்திரவியல், பைலொயி நிறுவனம் என்பவற்றை குறித்த பகுதிகளுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொள்ள கடற்றொழில் அமைச்சு அறிக்கை மூலம் கோரியுள்ளது என நீரியல் வளத்துறை உதவிப்பணிப்பாளர் ஜே.சுதாகரன் தெரிவித்தார். (எ-113)

நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடித்து வென்ற ரணிலுக்கு

# வவுனியாவில் பட்டாசு கொளுத்தி ஆர்ப்பரிப்பு

வவுனியா, ஏப். 6

தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தோற்கடிக்கப்பட்ட நிலையில், வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றின் உரிமையாளரும், ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளரான கருணாதாசவும் வவுனியா பேருந்து நிலையப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு பட்டாசு கொளுத்திக் கொண்டாடினர்.

கூட்டு எதிர்க்கட்சியால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 46 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றில் தோற்கடிக்கப்பட்டது. கடந்த 21ஆம் திகதி சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நேற்றுமுன்தினம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 76 வாக்குகளும், எதிராக 122 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன. வாக்கெடுப்பில் 26 பேர் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், தலைமை அமைச்சர் ரணிலுக்கு கிடைத்த வெற்றியைக் கொண்டாடும் விதமாக, வவுனியா நகரப்பகுதியில் உள்ள பழைய் பேருந்து நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு 11மணியளவில் குறித்த நபர்களால் பட்டாசுகொளுத்தி மகிழ்ச்சி வெளிப்படுத்தப்பட்டது. (எ-21)





# லண்டனில் போராடியவரின் தாயாருக்கு அச்சுறுத்தல்

முல்லைத்தீவு. ஏப். 6

லண்டனில் இலங்கை அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தியதாகக் கூறப்படும் ஒருவரின் தாயார் முல்லைத்தீவில் அடையாளம் தெரியாதவர்களால் அச்சுறுத்தப்பட்டுள்ளார் என்று முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறையிடச்சென்றபோது பொலிஸார் முறைப்பாட்டை ஏற்க மறுத்துள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

அதன்பின்னரே பொலிஸார் விசாரணை நடத்தினர் என்றும் கூறப்படுகிறது. சம்பவம் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவில் கடந்த 2 ஆம் திகதி பாதிக்கப்பட்ட தாயார் முறையிட்டுள்ளார்.

இந்த நிலையில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட பெண்ணின் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் சென்ற முள்ளியவளைப் பொலிஸார் சம்பவம் குறித்து விசாரணை செய்தனர்.

அவரைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து விசாரணை செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (4.ரி3)

புதுவருடத்தை முன்னிட்டு

## கூட்டுறவுப் பணியாளர்களுக்கு நிலுவைப்பணம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 6
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கூட்டுறவுச் சங்கங்கள், தமது பணியாளர்களுக்கு வழங்கவேண்டிய கொடுப்பனவுகளின் நிலுவைகளை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளன என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
அதனடிப்படையில் விடுமுறைநாள், வாழ்க்கைச் சேவைப் படி, சேவைக்கான கொடுப்பனவு போன்ற கொடுப்பனவுகளின் நிலுவைகளை கட்டம் கட்டமாகப் பணியாளர்களுக்கு வழங்குவதற்குச் சங்கங்கள் ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளன.
சங்கங்களின் நிதி நிலைமைக்கு ஏற்றவாறு கொடுப்பனவுகள் வழங்கப்படும். குறிப்பாக சில சங்கங்கள் நட்டத்தில் செயற்படுவதால், இந்தக் கொடுப்பனவுகளை வழங்கமுடியாத நிலையில் உள்ளன. எனினும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கொடுப்பனவுகளில் சிலவற்றைக் கட்டம் கட்டமாக வழங்க இயக்குநர் சபைக் கூட்டங்களில் தீர்மானிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-17)

பேசாலைப் பகுதியில் கைவிடப்பட்ட

## கடற்படை முகாமில் இருந்து ஒரு தொகை ரவைகள் மீட்பு



மன்னார், ஏப். 6
பேசாலை நடுக்குடாப் பகுதியில் கைவிடப்பட்ட கடற்படை முகாமில் இருந்து ஒரு தொகை ரவைகள் கடந்த செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டன. தலைமன்னார் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து துரித கதியில் செயற்பட்ட தலைமன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்ணாண்டோ தலைமையிலான பொலிஸ் குழுவினர், நடுக்குடா பகுதியில் ஒரு தொகுதி வெடி பொருள்களை மீட்டுள்ளனர்.
குறித்த கடற்படை முகாமைச் சோதனையிட்டபோதே ரீ 56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் இயங்குநிலையிலிருந்த ஆயிரத்து 405 ரவைகள் மீட்கப்பட் டன. ரவைகள் தொடர்பில் தலைமன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-56)

உடையார்கட்டுக்குளத்தில் பூட்டப்பட்டிருந்த

# தண்ணீர்ப் பம்பிகளை அகற்றிய இராணுவம்

### விவசாயிகள் சிறுபோகத்துக்கு தயார்

முல்லைத்தீவு, ஏப் 6
**விவசாயிகளுடைய வாழ்வாதாரக் குளத்தில் பம்பிகள் பூட்டித் தமது பயிருக்கு நீர் இறைத்த இராணுவத்தரப்பு, நேற்றுமுன்தினம் அந்தப் பம்பிகளைக் கழற்றி விவசாயிகளுக்கு வழிவிட்டது. இதனால் மகிழ்ச்சியடைந்த உடையார்கட்டு விவசாயிகள் சிறுபோகத்துக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டுள்ளனர்.**

போருக்குப் பின்னர் புதுக்குடியிருப்பு உடையார்கட்டுப் பகுதியில் நிலைகொண்ட இராணுவத்தினர் அங்கு ஒரு பண்ணையை அமைத்து விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டனர். தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டபோது உடையார்கட்டு விவசாயிகள் நம்பி சிறுபோகத்தில் ஈடுபடும் உடையார்கட்டுக் குளத்தில் 4 இஞ்சி கொண்ட 3 தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களைப் பூட்டி குளத்தில் இருந்து தமது பண்ணைக்கு தண்ணீர் இறைத்தனர். இதனால் அந்தக் குளத்தின் கீழ் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் வருடாந்தம் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டனர். குறித்த பிரச்சினை தொடர்பாக அதிகாரிகள், அரசியல் தலைவர்களுக்கும் அறிவித்தனர். பயனளிக்கவில்லை. பிரதேச, மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் இணைத்தலைவர்களுடைய கவனத்துக்கும் கொண்டுவந்தும் இருந்தனர். எவையும் பயனளிக்கவில்லை. குறித்த குளத்தில் பூட்டப்பட்ட இராணுவத்தின் இயந்திரங்கள் அகற்றப்பட வேண்டும் என்று தெரிவித்த விவசாயிகள் அவ்வாறு இடம்பெறாவிட்டால் தாம் இந்த ஆண்டுக்கான சிறுபோகச் செய்கையை கைவிடுவோம் என்று அறைகூவல் விடுத்தனர். வீதியில் இறங்கி இரண்டு நாள்கள் பெரும் போராட்டம் நடத்தினர். விடயம் அதிகாரிகளுக்கு தலையிடியைக் கொடுத்தது. அவர்கள் பலருக்கு அறிவித்தனர்



அண்மையில் முல்லைத்தீவுக்கு வருகை தந்த நிதி அமைச்சர் மங்களவிடம் விவசாயிகள் குறித்த விடயத்தை தெரியப்படுத்தியிருந்தனர். நிதி அமைச்சர் மாவட்டச் செயலரிடம் குறித்த விடயம் தொடர்பாக வினவினார். அதற்குப் பதிலளித்த மாவட்டச்செயலர் ரூபவதி கேதீஸ்வரன் "நீர் இறைக்கும் இயந்திரங்களை அகற்றுவதாக இராணுவத்தினர் உறுதியளித்துள்ளனர். எனவே ஒரு சில தினங்களில் அவை அகற்றப்படும்" என்று தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே நேற்றுமுன்தினம் அந்தக் குளத்தில் பூட்டப்பட்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூன்றையும் இராணுவத்தினர் அங்கிருந்து அகற்றிச் சென்றனர். எனினும் இராணுவத்தினரால் அங்கு அமைக்கப்பட்டிருந்த குடிசை ஒன்று இதுவரை அகற்றப்படவில்லை. அதையும் அகற்றுவதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். குறித்த சம்பவத்தை அடுத்து உடையார்கட்டுக் குளத்தின் கீழ் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள், குளத்து நீரை நம்பித் தொழில்களில் ஈடுபடும் குடும்பங்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். சிறுபோகப் பயிர்ச்செய்கையை ஆரம்பிக்க இன்னும் சில நாள்களே உள்ளநிலையில் அவர்கள் தங்களுடைய நிலங்களில் அதற்கான ஆயத்தப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இரு நாள்களில் சிறுபோக விதைப்புகள் தொடர்பாக மாவட்டச் செயலருடன் சந்திப்பு ஒன்றும் இடம்பெறவுள்ளது என்று அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். (எ-21)

# இணைய ஊடகங்கள் செய்திகளை நேர்த்தியாக வெளியிட வேண்டும்

### வவுனியா மாவட்ட சட்டத்தரணி ஆர்.கீர்த்தனன் தெரிவிப்பு

வவுனியா, ஏப். 6
இணைய ஊடகங்கள், செய்திகளை நேர்த்தியான முறையில் வெளியிட வேண்டும். அதற்கு ஊடகவியலாளர்கள் அமைப்பு ஒன்றை நிறுவி மிகவும் கட்டுக்கோப்புடன் ஊடகங்களைக் கொண்டு நடத்தவேண்டும். இணைய ஊடகங்கள் பிரசுரிக்கும் செய்திகளுக்குப் பொறுப்புக்கூறல் தன்மையும், நியாயப்படுத்தக்கூடிய நம்பகத்தன்மையும் இருக்க வேண்டும். அதன்போதே இணைய ஊடகங்கள் தொடர்பாக மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும்.
இவ்வாறு தெரிவித்தார் வவுனியா மாவட்ட சட்டத்தரணி ஆர்.கீர்த்தனன்.
வவுனியா இணைய ஊடகவியலாளர்கள் சங்கத்தின் பொதுக்கூட்டம் வவுனியா வைரவப் புளியங்குளத்தி லுள்ள தனியார் கல்வி விரிவுரை மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. அதில் ஆலோசகராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தற்போதைய நிலையில் ஒரு இணையத்தளத்தில் செய்தி வெளியிடுவது என்பது கஷ்டமான விடயமல்ல. ஆனால் அதில் மக்களுக்கு ஒரு நம்பகத்தன்மை இருக்கவேண்டும்.
ஊடகவியலாளர்களாகிய நீங்கள் பொதுமக்களின் பல பிரச்சினைகள் தொடர்பாக துணிச்சலுடன் குரல் எழுப்புபவர்கள். அதேவேளை உங்களையும் பாதுகாத்துக்கொண்டு கவனமாகவும் செயற்படவேண்டும்.
தற்போது பெரும்பாலான ஊடகங்களுக்கு எதிராக பலர் அவதூறு பரப்பி வருகின்றனர்.
அவ்வாறான எதிர்ப்புக்களை எதிர்கொள்வது எப்படி என்று ஊடகவியலாளர் அமைப்புகள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். அதேவேளை ஊடகவியலாளர்களாகிய நீங்களும் உங்களுடைய திறமையையும் ஆற்றலையும் சமூகத்தின் நன்மைக்காக பயன்படுத்த வேண்டும் - என்றார்.
"இன்று மக்களை இயக்குகின்ற அத்தியாவசியத் தேவைகளில் நான்காவது துறையாக ஊடகத்துறை காணப்படுகின்றது. அது மிகவும் பிரதான மான இடத்திலிருப்பதால் அதனை சரியான முறையில் கொண்டு நடத்தவேண்டும்.
சரியான செய்திகள் மக்களைச் சென்றடைய வேண்டும். இவற்றை சரியான முறையில் நடத்தவதற்கு ஒரு அமைப்பு ஒன்று இருப்பதுடன் அது ஒரு கட்டுக்கோப்புடன் செயற்பட வேண்டும். அதற்கமைய இந்தச் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளமை நல்ல விடயமாகும்.
எனினும் இந்தச் சங்கம் தனியாக ஊடகத்துறையை நோக்கியதாக இல்லாமல், அது சமூகம் சார்ந்த அனைத்துவிதமான செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.
பொது விடயங்களில் பங்கெடுப்பதுடன் அவற்றை வெளிக்கொண்டுவர வேண்டும். அதேபோல இடம்பெறும் அநீதிகளையும் தட்டிக்கேட்கும் துணிச்சலுடன் இருக்க வேண்டும்.
இணையத்தில் நிறையப்பேர் செய்திகளை வெளியிட்டு வருகின்றார்கள். ஊடகவியலாளராகப் பதிவு செய்யப்பட்டு அனுமதியளிக்கப்பட்டவர்களை ஒன்றிணைத்து சங்கம் செயற்பட வேண்டும்" என்று வவுனியா மாவட்ட சட்டத்தரணி அ.திலீப்காந்தன் தனது உரையில் தெரிவித்தார். (எ)

## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடமாடும் கூட்டுறவுச் சந்தை

யாழ்ப்பாணம், ஏப். 6
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வடக்கு மாகாணத்தில் நடமாடும் உள்ளூர் உற்பத்தியாளர் கூட்டுறவு சந்தைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இந்தச் சந்தைகளை எதிர்வரும் 9ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரை நடத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.
'கூட்டுறவில் கூட்டுறவு' என்ற தொனிப்பொருளில் இயங்கிவரும் உள்ளூர் உற்பத்தியாளர் கூட்டுறவு சந்தைகள் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் நடத்தப்படும்.
ஒவ்வொரு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தினதும் அனுசரணையுடன் இந்த உள்ளூர் உற்பத்தி நடமாடும் கூட்டுறவுச் சந்தைகள் நடத்தப்படும்.
மக்கள் நடமாட்டம் கூடிய பொதுவான இடங்களில் இந்த நடமாடும் சந்தைகளை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ்ப்பாணப் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் இந்த நடமாடும் கூட்டுறவுச் சந்தை வீரசிங்கம் மண்டப வளாகத்தில் நடைபெறும்.
ஐந்து நாள்கள் இடம்பெறும் இந்த உள்ளூர் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சந்தை முகாமில் கூடுதலான மக்கள் கலந்துகொண்டு பயனடைய முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-17)



## கட்டுப்பாட்டிழந்த ஓட்டோ குடைசாய்ந்து மூவர் காயம்

கொழும்பு, ஏப். 6

தலவாக்கலை முச்சக்கரவண்டி ஒன்று வீதியை விட்டு விலகி குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது. அதில் மூவர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் பாமஸ்டன் வீதியில் நடந்துள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாமஸ்டன் தோட்டப்பகுதியிலிருந்து தலவாக்கலை நோக்கிச் சென்ற முச்சக்கர வண்டியே வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)



## தையல் போதனாசிரியர்கள் ஐவருக்கு நேற்று நியமனம்

யாழ்ப்பாணம், ஏப். 6

தையல் போதனாசிரியர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று சுண்டுக்குளியிலுள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

போதனாசிரியர்களுக்கான நியமனக்கடிதங்களை வட மாகாண ஆளுநர் றெயினோல்ட்குரே வழங்கினார்.

இந்த நிகழ்வில் வடமாகாண முதன்மைச் செயலாளர் பத்திநாதன் முதலமைச்சர் அமைச்சின் செயலாளர் ரூபினி வரதலிங்கம் கிராம அபிவிருத்தி திணைக்கள பதில்பணிப்பாளர் நளாயினி இன்பராஜ்ஆகியோர் கலந்துகொண்டனர். (ற-ரி5.32)

## மணல் ஏற்றிச் சென்ற லொறி மண் மேட்டில் மோதி விபத்து

### ஒருவர் காயம்

கொழும்பு, ஏப். 6

மஹியாங்கனையிலிருந்து ஹற்றன் பகுதிக்கு மணல் ஏற்றிச்சென்ற லொறி வீதியைவிட்டு விலகி மண்மேட்டில் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நேற்று முன்தினம் நடந்தது.

லொறியின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனதாலேயே வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் லொறியின் சாரதி காயங்களுக்குள்ளான நிலையில் நுவரெலிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## கோத்தாவின் இடைக்காலத் தடை உத்தரவு ஜூலை 3 வரை நீடிப்பு

கொழும்பு.ஏப்.6

பொதுவுடைமைகள் சட்டத்தின் கீழ் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை கைது செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடை உத்தரவு மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 3ஆம் திகதி வரை கோத்தபய ராஜபக்சவை கைது செய்ய தடை விதித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி பிரீதி பத்மன் சுரசேன மற்றும் சிரான் குணரத்ன ஆகியோர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளனர்.

டீ.ஏ.ராஜபக்ஷ ஞாபகார்த்த அருங்காட்சியகத்தை நிர்மாணிக்க அரசின் நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்சவுக்கு எதிராக, பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ற-ரி4)

# சிறந்த தலைமையே வறுமையை ஒழிக்கும்



## பெரமுன கட்சி அமைப்பாளர் பீ.எச்.பியசேன தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஏப். 6

சிறு தேசிய கட்சிகளும் சுயநல எண்ணம் கொண்ட தலைமைத்துவங்களுமே எமது மக்களின் சாபக்கேடாகும். அதை மாற்றியமைக்க நல்ல தலைமைத்துவத்தின் கீழ் நாம் ஒன்றிணைவதன் மூலம் வறுமையற்ற சுபீட்சம் நிறைந்த வளமுள்ள நாடாக எமது நாட்டை கட்டியெழுப்பவும், மாற்றியமைக்கவும் நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளரும் கரையோர பிரதேச இணைப்பாளருமான பீ.எச்.பியசேன தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தொகுதிகளுக்கு அமைப்பாளர்களை அமைத்துக்கொள்வதற்கான கலந்துரையாடல் நேற்று அக்கரைப்பற்றுக் காரியாலயத்தில் இடம்பெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"காலா காலமாக சுயநல எண்ணம் கொண்டு போக்குக் காட்டி அரசியல் செய்யும் தலைமைத்துவங்களை நம்பி தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுக் கொண்டே வந்திருக்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் தேவைகளைநிறைவேற்றுவதற்காக மக்களை கேடயமாகவும், ஆயுதமாகவும், இனவாதிகளாகவும் மாற்றி அவர்களைப் பயன்டுத்தி வருகின்றார்கள். இவர்கள் மக்களுக்குச்சேவை செய்ய விரும்பாதவர்கள் என்பதை எம்மக்கள் இன்னும் அறியாதவர்களாக இருந்து கொண்டு வருகின்றார்கள்.

அரசியல் என்பது மக்கள் சேவையாகும்" இதனைக் கடந்தகால தமிழ் மக்களின் போராட்டமும், அரசியலும் இதைத்தான் சொல்லி நிற்கின்றது.

கடந்த காலங்களில் நாம் செய்த தவறுகளை எண்ணிக்கொண்டிருக்காமல் இனிவரும் காலங்களில் எமது மக்களுக்கான அபிவிருத்திகளையும், அவர்களின் இருப்பையும், வாழ்வாதார முன்னேற்றங்களின் வாழ்வுப் பாதைகளையும் ஒரு முன்னேற்றமானதாக அமைத்துக்கொள்ளவும் மாற்றத்தை ஏற்படுத்தவும் நாம் ஒன்றிணைவோம் - என்றார். (ற-ரி5)

## துப்பாக்கிச் சூடு: இருவர் காயம்

கொழும்பு, ஏப். 6

ஈருவ அதுருவெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் 2 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது.

சிற்றூர்ந்தில் பயணித்துக் கொண்டிருந்தவர்கள் மீது உந்துருளியில் பயணித்த இருவரே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதில் காயமடைந்தவர்கள் நுகேகொடை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (றரி5)

## இயக்குநர் ஜேம்ஸ் பீரிசுக்கு மைத்திரி பிறந்தின வாழ்த்து



கொழும்பு, ஏப். 6

பன்னாட்டு புகழ்பெற்ற திரைப்பட இயக்குநரான கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் தனது 99 ஆவது பிறந்த தினத்தை நேற்றுக் கொண்டாடினார். திம்பிரிகஸ்யாயவிலுள்ள அவரது வீட்டுக்குச் சென்ற அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

தேசிய சினிமாத்துறை பன்னாட்டுக் கீர்த்தியைப் பெற்றுக் கொள்வதற்குத் தனது படைப்பாற்றலை வழங்கிய இலங்கையின் மூத்த திரைப்பட இயக்குநரான கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மேற்கொண்டுள்ள பணிகளைப் பாராட்டி அவரது மருத்துவ சிகிச்சை உள்ளிட்ட ஏனைய செலவுகளுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்க மைத்திரி அண்மையில் அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றிருந்தார்.

இவருக்கு மாதாந்தக் கொடுப்பனவுக்கான ஆவணங்கள் மற்றும் அதற்கான முதலாவது காசோலையை மைத்திரி கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸிடம் கையளித்தார்.

அமைச்சர் ரஞ்ஜித் மத்தும பண்டார, கலாநிதி சோமரத்ன திஸாநாயக, ரேணுகா பாலசூரிய ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ற-ரி5)





## திஸ்ஸ அத்தநாயக்க வெளிநாடு செல்ல நீதிமன்றம் அனுமதி

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர், திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு வெளிநாடு செல்ல, கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

களனிப் பல்கலைக்கழகத்தின் கல்வியியலாளர்கள் சங்கம், அவுஸ்திரேலியாவில் ஏற்பாடு செய்துள்ளகூட்டத்தில்பங்கேற்க விடுத்திருந்த அழைப்பையடுத்து, இதற்கு அனுமதி வழங்கக் கோரி அவர் நீதிமன்றில் முன்வைத்த கோரிக்கைக்கமையவே அடுத்த மாதம் 10ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டது.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க ஆகியோருக்கிடையில், ஒப்பந்தம் மேற்கொள் ளப்பட்டுள்ளது எனத் தவறாகக் குறிப்பிட்டு, ஆவணம்ஒன்றைத்தயாரித்து, அதனை ஊடகங்களுக்கு வழங்கியமை தொடர்பில், இவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. (ற-ரி5)

## இரத்தினபுரியில் சடலங்களை வைத்து ஆர்ப்பாட்டம்

இரத்தினபுரி பல்லேபத்தப் பகுதியில்இருசடலங்களை வைத்து நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 2 ஆம் திகதி எம்பிலிப்பிட்டி - இரத்தினபுரி பிரதான வீதியில் தெமட்டகல பகுதியில் பேருந்தும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்களை வைத்தே ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

விபத்துடன் தொடர்புடைய பேருந்துச் சாரதி கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஆர்ப்பட்டம் முன்னெடுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தால் இரத்தினபுரி.எம்பிலிப்பிட்டி வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதனையடுத்து பேருந்து உரிமையாளர் உயிரிழந்த இருவரின் குடும்பங்களுக்கும் நட்டயீடு வழங்குவதாக தெரிவித்ததன் பின்னர் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. (ற-ரி5)

# அல் ஹுசைனுக்கு மூளையே இல்லை

## டுடேர்த்தே வசை மழை



மணிலா, ஏப். 5

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் மூளை இல்லாதவர் என்று வசை மழை பொழிந்தார் பிலிப்பைன்ஸ் அதிபர் டுடேர்தே.

பிலிப்பைன்சின் புதிய அதிபராக கடந்த 2016ஆம் ஆண்டு ஜூன் மாதம் டுடேர்தே பொறுப்பேற்றார். அன்று முதல் அங்கு போதைப்பொருள் ஒழிப்பு போரில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். போதைப் பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் விற்பனையாளர்கள் என 10 ஆயிரம்பேர்கொன்றுகுவிக்கப்பட்டனர். சுமார் 7 லட்சம் பேர் அரசிடம் சரணடைந்துள்ளனர். 45ஆயிரம் பேர் தேடப்பட்டு வருகின்றனர். இவ்வாறாக தொடர்ந்துவரும் டுடேர்தேயின் அதிரடி நடவடிக்கைகளுக்கு எதிராக உலக நாடுகள் பலவும் கிளர்ந்தெழுந்துள்ளன.

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா டுடேர்தேக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்த நிலையில், அவரை 'பெட்டை நாயின் மகன்', 'விபச்சாரியின் மகன்' என்றெல்லாம் வசை பொழிந்த டுடேர்தே, தனக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்த ஐ.நா. சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் ஹுசைனுக்கு எதிராகவும் தற்போது கடும் வசை மழை பொழிந்துள்ளார்.

"மனித உரிமைகள் ஆணையாளர் பதவியில் இருப்பவன் விபச்சாரியின் மகன். உனக்கு இவ்வளவு பெரிய தலை இருக்கிறது. ஆனால் அதன் உள்ளே ஒன்றுமில்லாமல் வெற்றிடமாக இருக்கிறது. உனது இரு காதுகளுக்கும் இடையில் ஒன்றும் இல்லாமல் மண்டை வெற்றிடமாக உள்ளது. அதன் உள்ளே இருக்கும் பொருளால் தலைமுடி வளர தேவையான சக்தியைக்கூட கொடுக்க முடியாததால் உன் தலைமுடி எல்லாம் கொட்டிப்போய் கிடக்கிறது" என்று டுடேர்தே மேலும் தெரிவித்தார்.

முன்னதாக சயிட் அல் ஹுசைன், "டுடேர்தே தனது அத்துமீறல்களுக்கு பதில் சொல்ல வேண்டிய காலம் மிக விரைவில் வரும். அவரை உளநலப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும்" என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



# அமெரிக்க இராணுவத்தை உடனடியாக வெளியேற்ற வேண்டாம்

## ட்ரம்புக்கு அறிவுரை

வொஷிங்டன், ஏப். 6

சிரியாவில் முகாமிட்டு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அமெரிக்க இராணுவத்தை உடனடியாக வெளியேற்ற வேண்டாம் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு முழுமையாகத் தோற்கடிக்கப்படும் நிலையில் உள்ளது. இதனால் சிரியாவில் முகாமிட்டுள்ள அமெரிக்க இராணுவம் விரைவில் திரும்பப் பெறப்படும் என்று ட்ரம்ப் தெரிவித்திருந்தார். இதையடுத்தே அவர் தனது முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் இவ்வாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராணுவம் உடனடியாகத் திரும்பப் பெறப்பட்டால் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு திரும்பவும் எழுச்சிபெறும் என்பதாலேயே இராணுவத்தை உடனடியாக திரும்பப்பெறும் நடவடிக்கையைக் கைவிடுமாறு ட்ரம்புக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று மேலும் தெரியவருகிறது. (ம)

# அமெ.- மெக்சிக்கோ எல்லையில் இராணுவம்

## ட்ரம்பின் அடுத்த திட்டம்



அமெரிக்கா - மெக்சிக்கோ எல்லையில் இராணுவத்தை நிலைநிறுத்தத் திட்டமிட்டுள்ளார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

மெக்சிக்கோவில் இருந்து அமெரிக்காவுக்குள் நுழையும் அத்துமீறிய குடியேற்றங்களைத் தடுப்பதற்காகவும், போதைப் பொருள் கடத்தலைத் தடுப்பதற்காகவும் இரு நாடுகளின் எல்லையில் தடுப்புச் சுவரை அமைத்து வருகிறது அமெரிக்கா. ட்ரம்பின் திட்டத்தின் அடிப்படையிலேயே இந்தச் சுவர் கட்டப்படுகிறது. இவ்வாறிருக்க அமெரிக்க இராணுவத்தையும் எல்லையில் நிறுத்தத் திட்டமிட்டுள்ளார் ட்ரம்ப். அமெரிக்க ஊடகங்கள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளன. (ம)



# 8 ஆயிரம் கோடி பீப்பாய் கச்சாய் சுரக்கும் கிணறு

## பக்ரைனில் கண்டுபிடிப்பு

பக்ரைனில் 8 ஆயிரம் கோடி பீப்பாய் கச்சாய் எண்ணெய் சுரக்கக்கூடிய கிணறொன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

வளைகுடா நாடுகளில் ஒன்றான பஹ்ரைன் நாட்டில் சன்னி இஸ்லாமியர்களின் ஆட்சி நடைபெற்று வருகிறது. பெரும்பாலும் கச்சா எண்ணை உற்பத்தியை நம்பியுள்ள இந்த நாட்டில் கடந்த 1932ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட பெட்ரோல் கிணற்றின் மூலம் மட்டும் நாளொன்றுக்கு சுமார் 50 ஆயிரம் பீப்பாய் (ஒரு பீப்பாய் என்பது சுமார் 160 லீற்றர்) அளவிலான கச்சா எண்ணை கிடைக்கிறது. இது தவிர, அபு சபா பெட்ரோல் கிணற்றின் மூலம் நாளொன்றுக்கு சுமார் ஒன்றரை லட்சம் பீப்பாய் அளவிலான கச்சா எண்ணை கிடைக்கிறது. இந்த நிலையில் பக்ரைனின் மேற்குப் பகுதியில் சுமார் 2 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவில் புதிய பெட்ரோல் கிணறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கிணற்றில் சுமார் 8ஆயிரம் கோடி பீப்பாய் கச்சாய் எண்ணெய் சுரக்கும் என்று தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



இஸ்தான்புல்லின் அய்டின் பல்கலைக் கழகம், முன் கால்கள் இரண்டையும் இழந்த அணிலொன்று நடப்பதற்குத் தேவையான உதவியைச் செய்துள்ளது. முன்னங் கால்கள் இரண்டுக்கும் பதிலாக இரண்டு சக்கரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் இந்தப் படத்தை வெளியிட்டது. (ம)





இந்த பண்டிகைக்காலத்தில் யூனியன் வங்கியில் சேமித்து வியத்தகு பரிசுகளை பெற்றுக்கொள்ளுங்கள்!

| வைப்புத் தொகை | பரிசு |
|---|---|
| ரூ. [illegible] – ரூ. [illegible] | ட்ராவலிங் பாக் ஒன்று |
| ரூ. [illegible] – ரூ. [illegible] | மின்சார கேத்தல் ஒன்று |
| ரூ. [illegible] – ரூ. [illegible] | ப்ளூடூத் ஸ்பீக்கர் ஒன்று அல்லது பொப்-அப் டோஸ்டர் ஒன்று அல்லது பவர் பாங்க் ஒன்று |
| ரூ. [illegible] – ரூ. [illegible] | 12.5Kg காஸ் சிலின்டர் ஒன்று மற்றும் ரெகியுலேற்றர் உடன் இரு சுவாலைகளை கொண்ட காஸ் அடுப்பு அல்லது ஃபுட் புரொசெசர் ஒன்று அல்லது தன்னியக்க கட்டுப்படுத்தியுடான ஸ்டான்ட் ஃபான் ஒன்று |
| ரூ. [illegible] மற்றும் அதை விட அதிகமானவை | 32 அங்குல LED தொலைக்காட்சி அல்லது மின்பார் குளிர்சாதனப் பெட்டி அல்லது டெப் ஒன்று அல்லது 12.5Kg காஸ் சிலின்டர் ஒன்று மற்றும் ரெகியுலேற்றர் உடன் இரு சுவாலைகளை கொண்ட காஸ் அடுப்புடன் சோஸ்பான் 4 ஐ கொண்ட சமையலறை சாதனங்கள் |

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
இந்தச் சலுகை 2018 மார்ச் 25ஆம் திகதி முதல் தொகை கையிருப்பிலுள்ள வரை செல்லுபடியாகும்.

011 5 800 800

UNION BANK

பிரதான காரியாலயம்: 64, காலி வீதி, கொழும்பு 03 | www.unionb.com

Seasonal Offers



கொமர்ஷல் வங்கியின்
கிரெடிட் மற்றும் டெபிட் கார்ட்களுடன்
இப் பண்டிகைக் காலத்தை
குதூகலமாய்
கொண்டாடுங்கள்

கிரெடிட் மற்றும்
டெபிட் கார்ட்களுக்கு
30%
வரையான
விலைக்கழிவு

## யாழ்ப்பாணம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஏப்ரல் 06 - 08 | ஏப்ரல் 06 - 08 | ஏப்ரல் 06 - 08 | ஏப்ரல் 06 - 08 | ஏப்ரல் 06 - 22 |
| மதர் அன்ட் பேபி கெயர் | கபிலா காலணியகம் | த.குமாரசாமி டெக்ஸ்டைல்ஸ் | ஸ்ரைலிஸ் பிரான்ட்ஸ் | ஞானம் பெயின்ட்ஸ் |
| திருநெல்வேலி<br>கிரெடிட் - 20%***<br>டெபிட் - 15%***<br>021 2 220 180 | கிரெடிட் - 25%<br>டெபிட் - 15%<br>021 2 223 097 | கிரெடிட் - 25%<br>டெபிட் - 15%<br>021 2 228 847 | கிரெடிட் - 15%***<br>டெபிட் - 10%***<br>021 2 215 295 | கிரெடிட் & டெபிட் - 30% **<br>021 2 225 577 |

| | | | |
|---|---|---|---|
| ஏப்ரல் 06 - 22 | ஏப்ரல் 10 - 22 | ஏப்ரல் 11 - 13 | ஏப்ரல் 11 - 13 |
| கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ் பிரைவேட் லிமிடெட் | டெய்லி பூட் சிற்றி | மெகா மார்ட் | வாணி டெக்ஸ்டைல்ஸ் |
| கிரெடிட் - 10%****<br>டெபிட் - 5%<br>076 3 594 662 | கிரெடிட் - 10%<br>டெபிட் - 5%<br>021 2 224 600 | கிரெடிட் - 25%<br>டெபிட் - 15%<br>021 2 229 798 | கிரெடிட் - 25%<br>டெபிட் - 15%<br>021 2 225 578 |

## வவுனியா

| | | |
|---|---|---|
| ஏப்ரல் 06 - 08 | ஏப்ரல் 06 - 08 | ஏப்ரல் 10 - 12 |
| கட்டியாணி டெக்ஸ்டைல்ஸ் | ஸ்ரார் பெஷன் | நியூ லக்கி டெக்ஸ் |
| கிரெடிட் - 25%<br>டெபிட் - 15%<br>024 2 054 812 | கிரெடிட் - 20%<br>டெபிட் - 15%<br>024 2 226 525 | கிரெடிட் - 25%<br>டெபிட் - 15%<br>024 2 227 503 |

## கிளிநொச்சி

| | |
|---|---|
| ஏப்ரல் 06 - 21 | ஏப்ரல் 06 - 25 |
| விநாயகர் பேர்னிச்சர் | சண் பேர்னி சிட்டி |
| கிரெடிட் - 20% ****<br>டெபிட் - 20%<br>021 2 285 372 | கிரெடிட் - 20% ****<br>டெபிட் - 20%<br>077 3 526 810 |

** தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கு
*** ஆடைகளுக்கு மாத்திரம்
**** கிரெடிட் கார்ட் கொடுப்பனவுகளுக்கு
COMBANK இலகு தவணைக் கொடுப்பனவுத் திட்டம்

இச் சலுகை 2018 ஏப்ரல் 25 வரை மாத்திரமே

COMBANK MAX LOYALTY REWARDS

COMMERCIAL BANK

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது Fitch Rating - AA (lka) +94 11 2 353 353 www.combank.lk

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# போர்க்குற்ற விசாரணையை கைவிட்டதா கூட்டமைப்பு?

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத்தீர்மானம்தோல்வியடைந்துவிட்டது. ஆதரவாக 122 வாக்குகளும், எதிராக 76 வாக்குகளும் கிடைத்தன. ஆதரவு வாக்குகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்16வாக்குகளும்அடக்கம்.கூட்டமைப்பின் ஆதரவு இல்லாவிட்டாலும்கூட ரணில்வெற்றிபெற்றிருப்பார் என்பது உண்மையானாலும், சிறுபான்மை இனங்கள் அனைத்தும் ரணிலுக்குத் தமது ஏகோபித்த ஆதரவை வழங்கி யிருக்கின்றன என்பதும் இங்கு கவனத்திற்குரியது.

இந்த இக்கட்டில் இருந்து தன்னைக் காப்பாற்றிவிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விதித்த 10 நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்வதாக ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட்டுக் கொடுத்திருந்தார். அதன் அடிப்படையில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ரணிலுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்புக்கு ஒரு நாள் முன்னதாகவே கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கொழும்பில் நடத்தப்பட்டது. முதல் நாளில் காரசாரமான விவாதங்களோடு இரு தடவைகள் நடந்த கூட்டத்தின் இறுதியிலேயே ரணிலுக்கு விதிக்க வேண்டிய நிபந்தனைகள் பட்டியலிடப்பட்டன. இது ஒரு நேர்த்தியான காய் நகர்த்தல், ரணிலிடம் விதிக்கப்படவேண்டிய நிபந்தனைகளைச் சீராய்ந்து பார்த்து எடுத்துவரும்படி முன்னதாகக் கட்சித் தலைமை கோரியிருக்கவில்லை. 3ஆம் திகதிய கூட்டத்தின் பெறுபேறாக அவசர அவசரமாக இந்தப் பட்டியல்தயாரிக்கப்பட்டது.நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கு அப்போதிருந்த ஞாபகங்களுக்கு ஏற்ப முக்கிய பிரச்சினைகள் என்று இந்தப் 10 விடயங்களும் பட்டியலிடப்பட்டன.

கூட்டத்தில் ரணிலை ஆதரிக்கவேண்டும் என்பதை நோக்கி நாடாளுமன்ற உறுப்பினர்களை வழிப்படுத்தியவர்கள், மிக நுணுக்கமாக தமது தரப்பிலிருந்து ரணிலிடம் முன்வைக்க வேண்டிய மிக முக்கிய நிபந்தனைகளை நாடாளுமன்ற உறுப்பினர்களின்முன்பாகத்தூக்கிப்போடவில்லை.அதனால்அவை விவாதத்துக்குள் வரவும் இல்லை, நிபந்தனைப் பட்டியலில் சேர்க்கப்படவும் இல்லை.

அவ்வாறு விடப்பட்ட முக்கிய விடயங்கள் இரண்டு உள்ளன. அதில் முதலாவதும் மிக மிக முக்கியமானதும் போர்க்குற்ற விசாரணை. நிலைமாறு கால நீதியைச் செயற்படுத்துவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் உறுதிமொழி வழங்கியகொழும்புஅரசு, வெளிநாட்டுநீதிபதிகள், வழக்குரைஞர்கள், வழக்குத் தொடுநர்கள் ஆகியோரை உள்ளடக்கிய கலப்புநீதிமன்றம்ஒன்றைஉருவாக்குவதாகவாக்குறுதிவழங்கியிருந்தது. ஆனால் பின்னர் அதனைச் செயற்படுத்தவில்லை. செயற்படுத்துவதற்கான அசுமாத்தத்தையும் காணவில்லை.

போர்க்குற்ற விசாரணை நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்திவந்ததமிழ்த்தேசியக்கூட்டமைப்பு,குறைந்தபட்சம் கொழும்பு அரசு வாக்குறுதியளித்த கலப்பு நீதிமன்றத்தை உடனடியாக ஆரம்பிக்குமாறு வலியுறுத்தி அதனையும் நிபந்தனைப் பட்டியலில் சேர்த்திருக்கவேண்டும். அது நடக்கவில்லை.

இரண்டாவது விடயம், நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குச் சில நாள்களுக்கு முன்னர் வரைக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 2015ஆம் ஆண்டு 30/1 தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தி வந்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அந்தக் கோரிக்கையும்கூட நிபந்தனைப்பட்டியலில் சேர்ப்பிக்கப்படவில்லை.

இந்த இரு விடயங்களுமே தற்போதைய நிலையில் தமிழ் மக்களுக்கு மிக மிக முக்கியமானவை. வழக்குத் தொடர்வதற்கோ, குற்றமிழைத்தவர்களை யார் என்று கண்டறியவோஅதிகாரமற்றகாணாமற்போனோர்தொடர்பான அலுவலகத்தை உடனடியாக இயக்கவேண்டும் என்பதை நிபந்தனைப்பட்டியலில்சேர்த்ததமிழ்த்தேசியக்கூட்டமைப்பு இந்த இரு விடயங்களையும் மறந்துபோய் பட்டியலில் சேர்க்காமல்விட்டது என்று நம்புவது கடினமானது.

எனவே, நிபந்தனைப் பட்டியலில் சேர்க்காமல் விட்டதன் மூலம், சேர்க்க வேண்டிய அளவுக்கு முக்கியத்துவம் இல்லாதவை என்று கருதியதன்மூலம் போர்க்குற்ற விசாரணை, ஐ.நா. தீர்மானத்தைக் கொழும்பு முழுமையாகச் செயற்படுத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளைக்கூட்டமைப்புக்கைவிட்டுவிட்டது என்றே கொள்ளவேண்டும்.

போர்க்குற்றவிசாரணைநடத்தப்படவேண்டும்என்றுதேர்தல் அறிக்கையில்கூறிமக்கள்ஆணையைப்பெற்றுவிட்டு,தலைமை அமைச்சரிடம் இருந்து அதற்கான எழுத்துமூல உறுதி மொழியைப் பெறாதது(எழுத்து மூலஉறுதி மொழியைப் பெற்றாலும் ஒன்றும்நடக்கப்போவதில்லைஎன்பதுஉறுதியாகத்தெரிந்தாலும், குறைந்தபட்சம் நிறைவேறாத அந்தப் பட்டியலிலாவது சேர்த்திருக்கலாம்) மக்கள் ஆணையை மீறும் செயல் இல்லையா?



# முன்னாள் போராளிகளது வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தப்படல் அவசியம்

ஜே. அருள்மதி

கடந்த 2009ஆம் ஆண்டு, போர் முடிவுற்ற பின்னர் 12 ஆயிரத்துக்கும் அதிகமான முன்னாள் போராளிகள் இராணுவத்தினரால் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயமாக்கப்பட்டனர். வாழ்வு வளம் மிக்கதாக மாற்றி அமைக்கப்பட்டு, அவர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். சமூகத்துடன் இணைந்துகொண்டுள்ள பல முன்னாள் போராளிகள் பலசுயதொழில் முயற்சிகளையும்மேற்கொண்டு வருகின்றனர். வாழ்க்கை நீரோட்டத்தில் இணைந்துள்ள அந்த முன்னாள் போராளிகளுக்கு சமூகத்தில் உரிய அந்தஸ்துகள் வழங்கப்படவேண்டும்.

### விடுதலைப் போராட்டத்தில் இணைந்ததால் தமது கல்வியையே தொலைத்த போராளிகள்

எமது நாட்டில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இடம் பெற்ற உள்ளநாட்டுப் போர் காரணமாக பல இளைஞர்கள், யுவதிகள் ஈழ விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொண்டனர். இதனால் அவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதியில் முடிவுற்றுள்ளன. அவர்கள் போர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டதால், போர் தொடர்பாக பயிற்சிகளையும் ஒழுக்க விழுமியங்கள் தொடர்பான பயிற்சிகள், நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். அப்போது அவர்களுக்கு என்று கட்டமைப்புக்கள் அமைக்கப்பட்டு தலைவர், தளபதிகள், சிறப்புத் தளபதிகள், பொறுப்பாளர்கள் என பல உட்கட்டமைப்புக்களை அமைத்து நிர்வகித்து செயற்படுத்தி வந்துள்ளனர். அத்தகைய கட்டமைப்புக்களுக்குள்ளிருந்த நிலையிலிருந்து விடுபட்டு, சமூகமயமாக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களையே அவர்கள் நிர்வகித்து வரவேண்டிய நிலையிலும், சுய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய நிலையிலும், முன்னாள் போராளிகளின் வாழ்க்கை அமையப் பெற்றுள்ளது.

இராணுவத்தினரால் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு நிலையங்களில் வழங்கப்பட்ட தொழிற் பயிற்சிகள், கணனிப் பயிற்சிகள், யோகாசனப்பயிற்சிகள், சுயதொழில் வேலைவாய்ப்புப் பயிற்சிகள், கல்விச்சுற்றுலா போன்ற வாய்ப்புக்களைப் பெற்ற போராளிகள் சிலர், தம்மை மாற்றி அமைத்து வாழ்க்கை நீரோட்டத்தில் முன்னேற்றம் அடைந்துள்ள நிலையிலும், முன்னாள் போராளிகளின் சமூகமயமாக்கல் பல அனுபவங்களையும் ஆக்கத்திறனையும் கற்பித்துக் கொடுத்துள்ளது.

### சமூக மயமாக்கப்பட்ட போராளிகளின் தேவைகளை அரசு நிறைவேற்ற வேண்டும்

சமூகமயமாக்கப்பட்ட போராளிகளுக்கு பல அனுகூலங்கள் அரசால் வழக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் பணியகம் தெரிவித்திருந்தது. எனினும், அவற்றில் சிலவற்றை தனியார் நிறுனங்களுடன் இணைந்து சிறியளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுயதொழில் வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ள நிலையிலும், வீட்டுத்திட்டம் போன்ற அடிப்படை வசதிகள் இன்றுவரையில் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. போர் நிறைவுற்ற நிலையில், தமது இருப்பிடங்களையும் உறவினரையும் விட்டுத்தூரம் சென்று வாழ்ந்து கொண்டுள்ள முன்னாள் போராளிகளில் சிலர், தற்போதும் வாடகை வீடுகளிலும் உறவினர் வீடுகளிலும் வசித்து வருகின்றனர். ஒரு நிரந்தர வசிப்பிடம் அற்ற நிலையிலும், போர் நிறைவுற்று, தமது புனர்வாழ்வு காலம் முடிவுற்ற நிலையில் சமூகமயமாக்கப்பட்ட போராளிகளின் வாழ்வில் விடியல் ஏற்படுத்தப்படவில்லை. மக்கள் பிரதிநிதிகள் வாய்ப்பேச்சளவில் தத்தமது அரசியல் இருப்பைத் தக்கவைக்கும் முயற்சிகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றார்கள். குறிப்பாக தென்னிலங்கை அரசியல் பரப்புரையாக 2020ஆம் ஆண்டில் இலங்கை தன்னிறைவடையும் எனப் புதிய புரளியைப் பரப்பி வருகின்ற நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. இது அரச தலைவர் தேர்தலைக் குறிவைக்கும் காய் நகர்த்தல் நடவடிக்கையாகவே காணப்படுகின்றது. இதையே எமது தமிழ்ப் பிரதிநிதிகளும் இன்னும் சில தினங்களில் தமது கையில் எடுத்துப் பரப்புரை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

### முன்னாள் போராளிகளின் வாழ்வின் மறுமலர்ச்சிக்கு உதவுதல் தமிழர் அனைவரதும் கடமை

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயமாக்கப்பட்ட முன்னாள் போராளிகள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளனர் என்பதை அனைவரும் உணராமல் இல்லை. அவர்களுக்கான அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? போர் முடிவுற்றுள்ளது; முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வுக் காலம் முடிவுற்றுள்ளது; அதோடு எல்லாமே முடிந்துவிட்டதா? ஒரு அச்ச உணர்வுடன் வாழ்ந்துவரும் முன்னாள் போராளிகளுக்குள்ளும் ஒரு அச்ச நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. நீண்டகாலம் சிறைவாசம், பின்னர் புனர்வாழ்வு. இவ்வாறு காலம் கடந்து பலர் நடுநிலை வயதை அடைந்த நிலையில், குறுகிய வயதில் நோய்வாய்ப்படுதல், வாழ்க்கைச்சுமை அதிகரித்தல் போன்றவற்றினால் உள ரீதியாகவும், மன அழுத்தம் காரணமாகவும், தமக்குள்ளே ஒரு அச்ச உணர்வுடன் உள்ளனர்.

அரசு, முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வுப் பயிற்சிகளை வழங்கியதுடன் நிறுத்திவிடாது, அவர்களின் அடிப்படை வாழ்வியலைக் கட்டியெழுப்ப நடவடிக்கைகளை துரிதகதியில் மேற்கொள்ள வேண்டும். வீட்டுத்திட்டம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் புனர்வாழ்வுப்பணியகம், புனர்வாழ்வு பெற்று வெளியேறிய 12ஆயிரத்திற்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகளின் வாழ்க்கை நீரோட்டத்தில் மீள் சூழற்சியை மேற்கொண்டு, அவர்களுக்கு மேலும் ஆக்கத்திறனுடனான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் மேற்கொள்ளுதல் அவசியமாகும். வடக்கு கிழக்கு மாகாணங்களை அடையாளப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகளும் அரசுடன் தொடர்புகொண்டு முன்னாள் போராளிகளின் வாழ்வியலை கட்டியெழுப்ப உதவுவதுடன் தம்மாலான உதவிகளையும், புலம் பெயர் உறவுகளின் பங்களிப்புடன் மேற்கொண்டு முன்னாள் போராளிகளின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முன்வர வேண்டும்.

# சிரியா விடயம் சின்னதல்ல

கு. மதுசுதன்



சிரியா விடயம் இன்று உலகின் அனைத்துமக்களையும்பாதித்து விட்டது என்பதற்கப்பால், மனிதத்தை நேசிக்கும், சுதந்திரத்தை விசுவாசிப்பவர்களை மட்டும் தான் அது கவலைகொள்ள வைத்துள்ளது. மாறாக இன அழிப்பை மேற்கொள்ளக் காரணகர்த்தாவாக இருப்போருக்கு சிரிய விடயம், சிறிய விடயமாகவும், சிரிப்புக்குரிய விடயமாகவுமே அமையும்.

உலக வல்லரசுகள் தத்தம் ஆயுத பலத்தைப் பரீட்சித்துப் பார்க்கின்ற இடமாகவும், ஆயுத சந்தையைச் செயற்கையாக உருவாக்கவும் பல தந்திர மந்திர காரியங்களை அரங்கேற்றுவதுமுண்டு.

## எண்ணெய்க்கான போராக இடம்பெற்ற வளைகுடாப் போர்

வளைகுடாப் போர் பற்றி அறிந்திருப்பீர்கள்; கண்ணுற்றிருப்பீர்கள். அப்போதைய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷின் ஆட்சிக் காலத்தில் பயங்கர அணு ஆயுதங்களை வைத்திருப்பதாக ஈராக் மீது குற்றம்சாட்டி, படையெடுத்து, அந்த நாட்டைத் துவம்சம் செய்தது அமெரிக்கா. ஈராக்கின் வளங்கள் அனைத்தையும் சூறையாடியது. அவதானிப்பாளர்கள் பலர் அது ஆயுதத்துக்கான போரல்ல, எண்ணெய்க்கான போர் எனப் பகிரங்கமாகவே விமர்சித்தனர்.

எவ்வாறு வல்லரசு ஆதிக்கம், மத்திய தரைக்கடல் முஸ்லிம் நாடுகளைத் தனது கட்டுக்குள்ளும், பதற்றத்துக்குள்ளும், போர் மேகங்களுக்குள்ளும் வைத்துக்கொண்டு வருகிறது என்பது வரலாறு.

அதன் பாணியில் அமெரிக்க ஏகாதிபத்தியம், பின்னர் ஆப்கானிஸ்தானையும், கடாபியின் நாடான லிபியா போன்ற நாடுகளையும், பயங்கரவாதத்துக்குள் தள்ளி, அதன் போர்வையில் பின்னர், தானே தனது படைகளை அனுப்பி அந்த நாடுகளைத் தனது ஆளுகைக்குள் கொண்டு வந்ததும் வரலாறு.

அவ்வாறானதொரு பாணியில் தற்போது சிரியா எனும் விடயத்தை அரங்கேற்றி வருகின்றன வல்லரசு ஆதிக்கச் சக்திகள்.

இந்த விடயத்தில் நாம் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புப் பற்றியும் நோக்க வேண்டியுள்ளது. ஏனெனில் இந்த ஐ.எஸ். ஐ.எஸ் எனும் அமைப்பு, சிரியா மற்றும் ஈராக் பகுதிகளை இஸ்லாமிய நாடாகப் பிரகடனப்படுத்தி பல வன்செயல்களை மேற்கொண்ட அமைப்பென்பது ஊடகங்களின் பார்வையூடாக நாம் நம்பிய உண்மைகள்.

## ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைக் காரணம் காட்டித் தலையை நுழைத்த அமெரிக்கா

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் அட்டூழிய, பயங்கரவாத செயல்களுக்காக அதன் மீது நடவடிக்கை எடுக்கப் போகிறோம் என்ற போர்வையில், அமெரிக்க ஏகாதிபத்தியம் அங்கு பெரும் படை நடவடிக்கைகளில் இறங்கியமை சகலரும் அறிந்ததொன்று.

ஆக, ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக்கெதிராக பொது மக்களைக் காப்பாற்ற, மனிதாபிமானத்துடன்தான், அமெரிக்கா அந்த அமைப்புக்குகெதிரான நடவடிக்கைகளை ஆரம்பித்தது என நாம் நம்பிக்கொண்டிருக்கலாம். ஆனால் எம்மில் பலர் மறுதலை உண்மைகளை அலசி ஆராயாமல் ஊடகங்களது பொய்களை, உண்மைகள் என்று நம்பி, அரசியல் புரிவில்லாது கட்ப்பதே எமது வாழ்வாகிவிட்டது.

உண்மையில் இதை இன்னும் ஆழமாக இப்படி யோசித்து பாருங்கள்.

எப்போதும் மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகளை எரிபற்று நிலைக்குள் வைத்திருக்கவே அமெரிக்கா விரும்புகிறது. ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான் எனப் பல அரங்கேற்றங்களின் பின் எவ்வாறு அடுத்த ஆளுகைகளை மேற்கொள்வது என்று சிந்தித்தால் அதற்கான நிகழ்ச்சி நிரலாக சிரியாவின் ஐ.எஸ்.ஐ.எஸ்ஸின் எழுச்சி கண்முன் தெரிகிறது.

உண்மையில் அந்த அமைப்புக்கு எவ்வாறு போர்ப் பயிற்சிகள் மற்றும் நவீன ஆயுதங்கள் கிடைக்கப்பெறுகின்றன என்பது புரியாத புதிர்தான். அதாவது தமது ஆளுகைக்குள் உட்படுத்த வேண்டிய நாட்டில் அல்லது தேசத்தில் செயற்கையாக பிரச்சினைகளைத் தோற்றுவித்து, அதையொரு சாட்டாகக் கொண்டு அதற்குள் ஊடுருவுவதே தந்திரமான நிகழ்ச்சி நிரல்கள்.

அதற்காக வல்லாதிக்கச் சக்திகளால் உருவாக்கப்பட்ட அமைப்பாகக் கூட ஐ.எஸ்.ஐ.எஸ். இருக்கலாம்.

அந்த அமைப்பைக் கொண்டு பல அட்டூழியங்கள், பயங்கரவாத செயல்களை நிகழ்த்திக்கொண்டிருக்க, அதைத் தடுக்கவும், பயங்கரவாதத்தை அழிக்கவும், பாசத்தோடும் , நேசத்தோடும் ,அக்கறையோடும் வல்லாதிக்கச் சக்திகள், குறித்த அந்த நாடுகளுக்குள் விமானத் தாக்குதல்கள் மற்றும் பிற தாக்குதல்களைத் தொடுக்கும் அல்லது அந்த நாடுகளது கிளர்ச்சியாளர்கள் அல்லது அரசுக்கு ஆயுத, நிதி, படை உதவிகளை முன்வந்து வழங்கும். இதனால் அந்த நாடுகளை எப்போதும் எரிபற்று நிலைமைகளுக்குள் வைத்துக்கொள்ள வல்லாதிக்கச் சக்திகளால் முடிகிறது.

## வல்லாதிக்கச் சக்திகளின் ஆக்கிரமிப்புப் பாணி அது

அவ்வாறானதொரு பாணியில் தான், பல பயங்கரவாத அமைப்புக்களை தனக்குத் தேவையான பிராந்தியங்களில் வல்லாதிக்கச் சக்திகள் உருவாக்கி வைத்துக்கொள்ளும். பின்னர் பல கொலைகள் நிகழ்ந்தேற வழி வகுத்து, அதன் பின்னர் அந்த நாடுகளுக்கு மனிதாபிமான உதவிகள், ஐ.நா பிரேரணைகள், உணவு உதவிகள், வாழ்வாதார உதவிகளைச் செய்து தனது பாவங்களைக் கழுவிக் கொள்ள முயற்சிக்கும்.

இப்போது சிரியா விடயத்தில் சிரிய அதிபரை பதவி விலகக் கோரி அந்த நாட்டுக் கிளர்ச்சியாளர்கள் அரச படைகளுடன் போரிட்டு வருகிறார்கள்.

கிளர்ச்சியாளர்களுக்குச் சார்பாக அமெரிக்கா பல்வேறு உதவிகளை மேற்கொண்டு வந்தது; வருகிறது. இதனால் போர் பல பரிணாம வடிவங்களைச் சந்தித்தது.

ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியம் போட்ட கணக்கு தப்பிதமாகிப் போனது. தற்போது மீண்டெழும் மிகப்பெரும் வல்லாதிக்கச் சக்தியும் சிறந்த ஆளுமையும் கொண்ட விளாமிடிர் புடின் தலைமையிலான ரஷ்ய நாடு, அமெரிக்காவுக்கெதிராக சிரியா அரசுக்கு சார்பாக சிரியாவில் வான் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது.

ஆக, இதனை உன்னிப்பாகப் பார்த்தால் சிரிய அரசா அல்லது கிளர்ச்சியாளர்களா என்ற ஆட்டம் என்பதற்கப்பால், உண்மையாக அமெரிக்காவா அல்லது ரஷ்யாவா என்ற பனிப்போர் தந்திரமாக அமைந்துள்ளது சிரிய விவகாரம்.

அதில் உண்மையில் பற்றியெறிவது என்னவோ சிரியாவும், அதன் மக்களும், வளங்களுமேயாகும். அங்கு இடைவிடாத போரால் பச்சிளம் குழந்தைகள், பெண்கள் , வயோதிபர்கள் எனப் பல பொதுமக்கள் கொல்லப்படுகிறார்கள். உண்மையில் குழந்தைகள் கொல்லப்படும்வீதமே அங்கு அதிகமாகவுள்ளது.

## சிரியப் போரும் கூட எண்ணெய்க்கான அதிகாரப் போட்டியின் ஒரு அங்கமே

சிரியா ஒரு முஸ்லிம் ந்ாடு. அங்கு அழிந்துகொண்டிருப்பது இஸ்லாத்தை பின்பற்றும் முஸ்லிம்கள் தான்.

மத்திய தரைக்கடலில் அமைந்துள்ள மத்தியகிழக்காசிய் நாடுகள் எல்லாமுமே முஸ்லிம் நாடுகள் தான். எண்ணை வளத்தைக் கொண்டுள்ள நாடுகள் அவை.

அந்த நாடுகள் அனைத்தும் ஒற்றுமையாக, ஓரணியாக, ஒரு குடையின் கீழ் செயற்பட்டால், எந்தவொரு வல்லாதிக்கச் சக்தியாலும் அந்த நாடுகளில் ஒன்றையேனும் சீண்ட முடியாது என்பதே உண்மை.

ஆனால், இன்று இஸ்லாமிய நாடுகள் பல சூறையாடப்பட்டு பற்றியெரிகின்றன. இதற்கு பைபிள், குர் ஆன் மற்றும் யூத மத நூல்களில் விடை தேடினால் கிடைக்கும். அவை குறித்து வரலாற்றுப் பதிவுகள் பலவுள.

அன்று ஹிட்லர் எனும் ஆளுமையால் யூதர்கள் அழித்தொழிக்கப்பட்ட போது, உதவிபுரிந்த அமெரிக்கா, அதேயூதர்கள் இன்று வளர்ந்து இஸ்ரேலை உருவாக்கியபோது, அதைநட்புநாடாக்கிக்கொண்டுள்ளது. இஸ்ரேலின் எதிரி நாடு சவுதி அரேபியா. அதையும் அமெரிக்கா நட்பு நாடாக்கிக்கொண்டுள்ளது. இதுதான் பூகோள உலக ராஜதந்திர அரசியல். ஆனால் இதில் சோகம் என்னவெனில், உலகில் ஒரு யூதன் எந்த நாட்டில் கொல்லப்பட்டாலும், இஸ்ரேல் அவனுக்காக முன்னிற்கும் . ஆனால் உலகில் ஒரு முஸ்லிம் தேசமே பற்றியெரியும்போது, மற்றைய முஸ்லிம் நாடுகள் வேடிக்கை பார்க்கவே செய்கின்றன.

## ஆசிரியருக்கான கடிதம்

### ஒலிபெருக்கிகளுக்கு ஓய்வு வழங்கப்படுமா?

ஆண்டவனை அமைதியாக வழிபடுவதே சிறந்ததென யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கூறியுள்ளமை மிகச் சரியானதே. ஆண்டவன் குடியிருக்கும் ஆலயங்களில் அமைதியைப் பேணுவது தலையாய கடமையாகும். அப்போதுதான் அங்கு வருபவர்கள் தமது வழிபாடுகளை இடையூறில்லாமல் நிறைவேற்ற முடியும்.

ஆனால் தற்போதெல்லாம் ஆலயங்களில் அமைதி கடைப்பிடிக்கப்படுவதாகத் தெரியவில்லை. அதிகாலை வேளையிலேயே ஒலிபெருக்கியின் உதவியுடன் பக்திப் பாடல்கள் ஒலிக்கவிடப்படுவதால், அயலில் உள்ளவர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். மேலும் இரவிலும் வெகு நேரம் வரை இந்தச் செயற்பாடு தொடர்வதால் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாது அவலப்படுகின்றனர். நோயாளர்களும், முதியவர்களும், சிறுவயதுப் பாலகர்களும் அமைதியை இழந்து தவிக்கின்றனர்.

வேத மந்திரங்களும், மேளக்கச்சேரிகளும் கூட ஒலிபெருக்கியூடாகப் பெரும் சத்தமாக ஒலிக்க விடப்படுவதையும் காணமுடிகின்றது.

இதனால் ஆலயங்கள் மீது வெறுப்புத்தான் ஏற்படுகின்றது. இந்த நிலை உடன்டியாக மாற வேண்டும். சகலதையும் ஆலய வளாகத்தினுள் அடக்கிக் கொள்வதே சிறந்தது. ஆலய நிர்வாகிகள் கவனிப்பார்களா?

*நா. சுப்பிரமணியம், மல்லாகம்.*

### நற்பணிகள் என்றும் மதிப்புப் பெறும்

'மனித உடலுக்குச் சிரசே பிரதானம்.' என்ற கூற்றின் மூலம் தலைமையின் முக்கியத்துவம் சிறப்பிக்கப்படுகிறது.

அதேபோன்று எந்தவொரு சின்னஞ்சிறு பொது நிறுவனம் முதல் அரசியல் ரீதியில் செயற்படும் அரச நிர்வாகம் வரை 'தலை' சரியாக, நியாயமாக, சேவை உணர்வுடன் இயங்குமாயின், குறிப்பிட்ட அந்த நிறுவனத்தினதோ, அமைப்பினதோ செயற்பாடு மக்களுக்குப் பயனுள்ள வகையில் அமையுமென்பது நிச்சயமே.

இதோ, உதாரணத்துக்கு ஒன்று. யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சை நாடிவரும் நோயாளர்களுக்கான தேவைகள் அனைத்தையும் இனங்கண்டு அவற்றுக்கான வசதி வாய்ப்புக்களைச் சிறந்த முறையில் ஏற்படுத்திக் கொடுத்து உதவி வருவது குறித்து பல தரப்புக்களது பாராட்டுக்களையும் நன்றியறிதல்களையும் பெற்று வருகிறார்.

அந்த வகையில் முகதாடை மற்றும் வாய் தொடர்பாக நோய்கள் மற்றும் குறைபாடுகளுடையோருக்கான சிகிச்சையை வழங்கிவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில், குறித்த குறைபாடுகளுக்கான அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ளத்தக்க வாய்ப்புக்களையும், வைத்தியசாலைப் பணிப்பாளர் ஒழுங்கு செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை, குறித்த முகதாடை மற்றும் வாய் தொடர்பான நோய் மற்றும் குறைபாடுகள் உள்ளோர் உரிய சிகிச்சையைப் பெறுவதற்கானதொரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமேதுமில்லை.

*க. ஜெயா,*
*வண்ணார்பண்ணை*

இரா.நிசாந்தன்



# சூரிய புத்திரன் கர்ணன்

## வீரமும், கொடைத் திறனும் கொண்ட அர்த்த படிகம்

மகாபாரதம் எனும் செந்தமிழும், சமயமும் இழையோடும் காப்பியத்தில் எண்ணற்ற கதாபாத்திரங்கள் அமைவுறுகின்றன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான தன்மைகளின் ஊடே சிறப்புறுகின்றன. ஆனால் அத்தகு கதாபாத்திரங்களில் எல்லோரது மனங்களிலும் நிறைந்திருக்கின்ற ஒரு பாத்திரக்கூறு கர்ணனுடையதாகும். வீரமும், தீரமும், கொடை அளிக்கும் மனப்பாங்கும், செஞ்சோற்றுக் கடன் தீர்க்கும் உயரிய தன்மையும், கொண்டமைந்ததாக சிறப்புறுகின்றான் கர்ணன்.

**பிறப்பிலலேயே சிறப்புற்ற கர்ணன்**

பாரதத்தின் யது வம்சத்தின் மன்னர்களில் ஒருவனாகிய சூரசேனன் என்பவனின் மகளாக விளங்கியவள் குந்தியாவாள். குந்திதேவிக்கு சிறுவயதிலே துர்வாச முனிவர், விரும்பிய தேவரை வரவழைக்கும் ஓர் அரிய மந்திரத்தினை வழங்கிச் சென்றார். அதன்படி குந்திதேவியும் குறும்புத் தனமாக சூரியனை நினைத்து மந்திரத்தை உச்சரித்தாள். அந்தக் கணமே சூரியன் அவள்முன் தோன்றினான். இதனை எதிர்பாரத குந்திதேவி அச்சமடைந்தாள். அப்போது சூரிய தேவன், குந்தியிடம், உனக்கு என் அம்சமாக ஓர் மகன் பிறப்பான். அவன் மிகப் பெரும் வீரனாகக் திகழ்வான். இந்த உலகம் அவனை மாவீரன் கர்ணன் என புகழ்ந்துரைக்கும் எனக் கூறினார். அதன் படி குந்தியும் சூரியனின் அம்சமாக ஓர் மகனை பெற்றெடுத்தாள். இவ்வாறு பிறந்த அந்தக் குழந்தை பிறப்பிலேயே உடலில் கவசமும், காதில் குண்டலங்களும் கொண்டு திவ்ய ஒளி பொருந்தியதாக விளங்கியது. கர்ணன் எனும் நாமகரணமும் பெற்றுக் கொண்டது அந்தக் குழந்தை. ஆனால் தன் மீது ஏற்படும் பழிக்கு அஞ்சி அந்தக் குழந்தையை ஆற்றிலே விட்டுவிட்டாள் குந்திதேவி. ஆற்றில் மிதந்து வந்த கர்ணனை, தேரோட்டி அதிரதன் என்பவன் எடுத்து தனது மனைவி ராதையிடம் கொடுத்தான். நீண்ட காலம் குழந்தை இல்லாத குறை நீங்கப்பெற்ற அவர்கள் மகிழ்ச்சியுடன் அந்தக் குழந்தையை வளர்த்து வந்தனர். ஆனால் கர்ணன் பிறப்பால் அரச குலத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும், வளர்ந்தது தேரோட்டியின் மகனாகையால் எல்லோரும் அவனை குலத்தில் தாழ்ந்தவன் எனவாறே அழைத்தனர். மேலும், தேரோட்டி மகன் என்றே அழைத்தனர். இது கர்ணன் மனதில் பெரும் துன்பத்தை விதைத்தது. கர்ணனும் தன் பிறப்பின் இரகசியம் பற்றி அறியாமலேயே அதிரதன் மற்றும் ராதையின் மகனாகவே வளர்ந்து வந்தான்.

**பரசுராமரின் சீடனான கர்ணன்**

கர்ணன் தேரோட்டியின் மகனாக வளர்ந்து வந்தாலும் சிறு வயதில் இருந்தே வில்வித்தையில் விருப்பம் உடையவனாக விளங்கினான். வில்லாற்றலில் சிறந்த வீரனாக வரவேண்டும் எனும் நோக்கில், பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் குருவாக இருக்கும் துரோணரிடம் செல்கின்றான் கர்ணன். ஆனால் துரோணரோ கர்ணனின் பிறப்பைக் காரணம் காட்டி, தான் சத்தியர்களுக்கு மட்டுமே கல்வி கற்றுக் கொடுப்பேன் எனக் கூறி கர்ணனை சீடனாக ஏற்க மறுத்துவிட்டார். இந்த நிலையில் தன் விருப்பத்தை நிறை வேற்றிக்கொள்ள பரசுராமரிடம் சென்ற கர்ணன் தன்னை ஓர் பிராமணன் எனப் பொய் உரைத்து பரசுராமரின் சீடனாக இருந்து வில் வித்தை முதலிய போர்க்கலைகள் அனைத்தையும் கற்றுக் கொண்டான்.

**துரியோதனனின் நட்பைப் பெறல்**

இது இவ்வாறு இருக்க துரோணரிடம் போர்க் கலைகளைக் கற்ற பாண்டவரும், கௌரவர்களும் தம் திறமைகளை காட்டும் பொருட்டு அஸ்தினாபுரத்தில் ஓர் அரங்கேற்றம் நடைபெற்றது. அப்போது பாண்டவரில் அர்ச்சுனன் தன் வில்லாற்றல் வாயிலாக பற்பல சாகசங்களை செய்து காட்டினான். இவற்றைக் கண்டவர்கள் ஆச்சரியப்படும் வகையில் அர்ச்சுனன் வில்லின் திறன் இருந்தது. இந்த நிலையில் அரங்கில் நுழைந்த கர்ணன் அர்ச்சுனனைக் காட்டிலும் தன் வில்லின் வாயிலாக பல திறன்களை வெளிப்படுத்தினான். ஆனால் கர்ணனின் பிறப்பு, தகுதி என்பவற்றைக் காரணம் காட்டி அவனை அங்கு போட்டியிடுவதற்கு மறுத்து விடுகின்றனர். இவ்வாறிருக்க துரியோதனன் கர்ணனைத் தன் நண்பனாக கொண்டு அவனை அங்க தேசத்தின் மன்னனாகவும் முடி சூட்டினான். இதனால் அதுவரைக்கும் குலத்தில் தாழ்ந்தவன் எனும் பழியினைப் பெற்று வந்த கர்ணன் அதிலிருந்து விடுபட்டுக் கொண்டான். அன்றிலிருந்து நட்பிற்கு எடுத்துக் காட்டாய் கர்ணன் துரியோதனன் நட்பு விளங்கியது. ஆனால் துரியோதனன் அதர்ம வழியில் செல்பவன் என்ற போதிலும் தன் களங்கத்தைப் போக்கியவன் எனும் வகையில் அவனுக்கு பக்க பலமாக உடனிருந்தான் கர்ணன். அதாவது சேற்றில் முளைத்த செந்தாமரையாக விளங்கினான் கர்ணன்.

**கொடை வள்ளலான கர்ணன்**

தான் இருப்பது அதர்மத்தின் தரப்பில் என்பதை அறிந்தும் துரியோதனனின் நட்பிற்கு மதிப்பளித்து, தன் மீதான களங்கத்தினைப் போக்க கர்ணன் கொடை அளிக்கத் தொடங்கினான். தன்னிடம் யார் எதனை வேண்டி வந்தாலும் அதனை இல்லை எனக் கூறாது அவருக்கு அளித்து வந்தான் கர்ணன். இத்தகு கொடைத் தன்மையினால் பெரும் புகழையும் பெற்றுக் கொண்டான். ஒரு முறை இந்திரன் மாறு வேடம் கொண்டு கர்ணனிடம் அவனது கவச, குண்டலங்களைத் தானமாக கேட்டான். வந்திருப்பது இந்திரன் என்பதையும், தன்னிடம் இருக்கும் கவச, குண்டலங்களை தானம் செய்தால் தன் உயிருக்கு ஆபத்து வரும் என்பதனை அறிந்திருந்தும் சிறிதும் கலக்கமின்றி தன் உடலில் ஒட்டியிருந்த கவசத்தையும், குண்டலங்களையும் வெட்டி எடுத்துத் தானம் செய்தான் கர்ணன். அது மட்டுமன்றி பாரதப் போரின் இறுதிக் கட்டத்தில் கண்ணன் பிராமண வேடம் தாங்கி கர்ணனிடம் வந்து அவனது புண்ணியங்களின் பலன்களைத் தானமாக கேட்டார். அதன்படி கர்ணனும் கலக்கமின்றி அந்தத் தானம் தனைக் கொடுத்தருளினான்.

> பாரதத்தின் யது வம்சத்தின் மன்னர்களின் ஒருவனாகிய சூரசேனன் என்பவனின் மகளாக விளங்கியவள் குந்தியாவாள். குந்திதேவிக்கு சிறு வயதிலே துர்வாச முனிவர், விரும்பிய தேவரை வரவழைக்கும் ஓர் அரிய மந்திரத்தினை வழங்கிச் சென்றார். அதன்படி குந்திதேவியும் குறும்புத் தனமாக சூரியனை நினைத்து மந்திரத்தை உச்சரித்தாள். அந்தக் கணமே சூரியன் அவள்முன் தோன்றினான். இதனை எதிர்பாரத குந்தி தேவி அச்சமடைந்தாள். அப்போது சூரிய தேவன், குந்தியிடம், உனக்கு என் அம்சமாக ஓர் மகன் பிறப்பான், அவன் மிகப் பெரும் வீரனாகக் திகழ்வான். இந்த உலகம் அவனை மாவீரன் கர்ணன் என புகழ்ந்து ரைக்கும் எனக் கூறினார். அதன் படி குந்தியும் சூரியனின் அம்சமாக ஓர் மகனை பெற்றெடுத்தாள். இவ்வாறு பிறந்த அந்தக் குழந்தை பிறப்பிலேயே உடலில் கவசமும், காதில் குண்டலங்களும் கொண்டு திவ்ய ஒளி பொருந்தியதாக விளங்கியது.

**திரௌபதியின் சுயம்வரத்தில் கலந்து கொள்ளல்**

பாஞ்சால தேசத்தின் இளவரசி, திரௌபதியின் சுயம்வரம் நடைபெற்றது. அந்தச் சுயம்வரத்தின் போட்டியில் வெற்றிபெறக் கூடியவர்கள் கர்ணன் மற்றும் அர்ச்சுனன் ஆகிய இருவருமே என்பதை அனைவரும் அறிந்திருந்தனர். இந்த நிலையில் அந்தப் போட்டியில் கலந்து கொண்ட கர்ணன் வில்லை வளைத்து இலக்கைக் குறிவைத்து தாக்க முற்படும் சமயத்தில் திரௌபதி கர்ணனை குலத்தில் தாழ்ந்தவருக்கு நான் மாலை சூட்டமாட்டேன் எனக் கூறி மறுத்து விட்டாள். இது கர்ணனுக்கு மிகப் பெரும் அவமானத்தையும், மன வேதனையையும் கொடுத்தது.

**கர்ணன் தன் பிறப்பின் இரகசியம் அறிதல்**

கண்ணபிரான் வாயிலாக, கர்ணன் தன் பிறப்பின் இரகசியம் பற்றி அறிகின்றான். குந்தியே தன் தாயெனவும், பாண்டவர்கள் தன் சகோதரர்கள் என்பதையும் அறிந்து மிகுந்த மனவேதனை கொள்கின்றான். கர்ணன் தன் மூத்த புதல்வன் என்பதை குந்திதேவியும் கண்ணன் வாயிலாகவே அறிந்து கொள்கின்றாள். பின் கண்ணன் தூண்டுதலால் கர்ணனிடம் வந்து பாண்டவர்கள் பக்கம் வரும்படி வேண்டுகின்றாள். அதற்கு கர்ணன், குந்தியிடம், தாயே, நான் அவமானப்படும் சமயத்தில் எனக்கு உதவியவன் துரியோதனன். இன்றும் அவன் என்னை ஆதாரமாகக் கொண்டே போரினை செய்யத் துணிந்துள்ளான். என் மீது அவன் கொண்டுள்ள நம்பிக்கையை உடைத்து நான் பாண்டவர் பக்கம் வரமுடியாது எனக் கூறினான். அதன்படி குந்தி கர்ணனிடம் இரு வரங்களை வேண்டவே, கர்ணன் அவற்றை அளித்து, தானும் குந்தியினிடத்து இரு வரங்களைப் பெற்றுக் கொண்டான்.

மகாபாரதப் போரில் கௌரவர் பக்கம் நின்று போரிட்டவன் கர்ணன். அதன்படி மகாபாரதப் போரில் அர்ச்சுனனைக் கொல்வதையே இலட்சியமாகக் கொண்டு போர் செய்தவன். கௌரவர் சேனையின் முக்கிய வீரர்களான பீஸ்மர் மற்றும் துரோணரின் வீழ்ச்சிக்கு பின் கௌரவ சேனையில் சேனாதிபதியாக பொறுப்பேற்றான் கர்ணன். இதனை கூறுவதற்கு மகாபாரதத்தில் கர்ண பருவம் எனும் ஒரு பருவமே அமைவுறுகின்றது. இந்த நிலையில் அர்ச்சுனனுடன் கடுமையான போரில் ஈடுபட்டான் கர்ணன். இருப்பினும் இறுதியில் குரு பரசுராமர் அளித்த சாபத்தின் விளைவாக கற்ற வித்தைகள் மறந்து போகவே அர்ச்சுனன் அம்பு பட்டு பூமியில் சாய்கின்றான் கர்ணன். ஆனால் கர்ணன் தோல்வியடைந்து நிலத்தில் சாய்வதற்கு, அவன் பெற்ற பல்வேறு சாபங்களும், அவன் அளித்த தானங்களுமே பெரும் பங்காற்றின என்பதே உண்மை. இவ்வாறாக, உத்தம குலத்தில் பிறந்து தர்மம்தனை அறிந்திருந்தும், விதிவசத்தால் அதர்மத்தின் பக்கம் இருந்து தன் செஞ்சோற்றுக் கடனை நிறைவேற்றியவன் கர்ணன். அவனது வீரமும், கொடைத்திறனும், நட்பினை மதிக்கும் தன்மையும், ஆற்றலும், கொண்டவனாக விளங்கும் கர்ணனை இந்த அகிலமானது மாவீரன் கர்ணன் என அவன் பெருமையினையும், புகழையும் இனியும் பறைசாற்றும் என்பதில் ஐயமில்லை.

நாளை
07.04.2018
சனிக்கிழமை
பங்குனி 24

திதி: ஸப்தமி மரண பி.இ. 12.07 வரை
நட்சத்திரம்: மூலம் பி.ப. 03.13 வரை
சுபநேரம்: 03.08–04.38 வரை
ராகுகாலம்: 09.08–10.38 வரை

## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
## அசத்தலான தள்ளுபடி

01.04.2018 தொடக்கம் 14.04.2018 வரை

சிறுவர்களுக்கான ஆடை தினுசுகள் பெண்களுக்கான சாறிகள், சல்வார்கள், பிளவுஸ், Top கள் மற்றும் அனைத்து விதமான ஆடைகளையும் ஆண்களுக்கான சேட்டிங், சூட்டிங் அனைத்து ஆடைகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ளலாம்.



### ஸ்ரீ லலிதா பெஷன்
இல.165, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.


### லலிதா ரெக்ஸ்
இல. 5,6 நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 5260

---

## ஹரி றியல் எஸ்டேட்
HARI REAL ESTATE

வடபுல ஆதன வர்த்தகத்துறையின் நம்பிக்கையான திறவுகோல்



★ திருநெல்வேலி கலாசாலை வீதியிலிருந்து 200 Mtr உட்புறமாக இரண்டு புத்தம் புதிய வீடுகள் குடியிருப்பதற்கு தயார்நிலையில் விற்பனைக்கு

★ கொக்குவில் கருவப்புலம் வீதியில் 03 1/2 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு

**ஹரி றியல் எஸ்டேட்**
இல. 10A, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி +94 021 221 4422
மொபைல் + 94 70 300 4000
முகநூல் harirealestate.lk

POWERED BY HARI

---

## VANIKAA SURGICALS இன்
### மேலும் சில தனித்துவமான உபகரணங்கள்

1. Oxygen Concentrator
2. Phelgm Sucker Ubits - Single Jar & Double Jar
3. Nebulizers - Home Use & Ultrasonic models
4. Many Brands of Air Mattress with Warranty
5. Water Mattresses
6. Pulse Oxy meters
7. Infra Red Non-Contact Thermometers - சிறு குழந்தைகளின்உடல் வெப்பத்தை துல்லியமாக வாசிக்கக்கூடியது 2 வருடஉத்தரவாதத்துடன்.
8. Thermometer (Multi Stem)- கொதிநிலை அளவிடுவதற்கு மற்றும் குளிர்நில்ல மானி. HUMIDITY THERMOMETERS FREEZER THERMOMETERS, INDOOR-OUTDOOR THERMOMETERS, LABORATORY THERMOMETERS.
9. Tablet Organizers & Tablet Splitters, இன்னும் பல.....



203, Hospital Road, Jaffna.
Tel: 021 222 0077 /
Mob: 077 44 22 367 / 0775106910
E-mail- vanisurgi@sltnet.lk




நாங்கள் என்றும் உங்களுடன்

---

## பவள விழா வாழ்த்துக்கள்



பருத்தித்துறை சுப்பர் மடத்தைச் சேர்ந்த

### வைத்திலிங்கம் தங்கராசா
அவர்கள்

### இன்று 06.04.2018 இல்
### தனது 75 ஆவது பிறந்தநாளை

கொண்டாடும் இந்தவேளையில் பருத்தித்துறை கொட்டடி பெரிய பிள்ளையாரினதும், சுப்பர்மடம் முனியப்பரினதும் அருள் பெற்று மென் மேலும் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

(cs 436) (13.17)

---

## முதலாம் ஆண்டு நினைவுதினம்



அமரர் குணதாசன் கிறிஸ்ரி ஜோசப்
பிறப்பு :- 01.01.1975

அமரர் Dr. மாக்கிறட் றோஸ் சுகந்தி
பிறப்பு- 27.09.1982

இறப்பு:- 07.04.2017

இவர்களுடைய முதலாம் ஆண்டு நினைவுநாள் நாளை (07.04.2018) சனிக்கிழமை அவர்களது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து முற்பகல் 11 மணியளவில் சுன்னாகம் தூய அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் ஆத்மசாந்தித் திருப்பலியிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

குடும்பத்தினர்.
077 251 6560, 077 166 0448

(CS15453)(11)

# Computer Courses

Diploma in Computerized
**Accounting**
Tally, Quick Book, Accpac, M.Y.O.B

Diploma in
**Video Editing**
Premiere cs6, Photoshop CC, Adobe After Effect, Eduis Pro 7, Pinnacle Studio, Nuendo

Diploma in
**Auto CAD**
2D & 3D Modeling

Adv. Dip. in
**Hardware & Networking**

Programming & Web Development With
**Java, C++, PHP**

**CCTV Camera**
Technician

புதிய பிரிவுகள் ஆரம்பம்
DMI COMPUTER EDUCATION
DMI COMPUTER EDUCATION

| | | |
|---|---|---|
| யாழ்ப்பணம் | No.113,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். | Tel:.021 222 4403 |
| நெல்லியடி | M. M. V வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக). | Tel:.021 226 2470 |
| சாவகச்சேரி | No.174, கண்டி வீதி, சாவகச்சேரி.(HNB அருகில்) | Tel:.021 227 0775 |
| சுன்னாகம் | No.130, K.K.S வீதி, சுன்னாகம்.(NSB அருகில்) | Tel:.021 224 1970 |
| கிளிநொச்சி | No.19 A9 வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக). | Tel:.021 228 5655 |


TENDER NOTICE
GOVERNMENT OF THE DEMOCRATIC SOCIALIST
REPUBLIC OF SRI LANKA
MINISTRY OF PORTS AND HIGHWAYS
ROAD DEVELOPMENT AUTHORITY JAFFNA

WORKS UNDER MAINTENANCE VOTE
UNDER GOSL FUND

INVITATION FOR BIDS

1. The Chief Engineer, Road Development Authority, Beach Road, Jaffna, on behalf of the Chief Engineer's Tender Board will receive sealed Bids for the following works under Maintenance vote under RMTF Fund. Receiving bids will be closed at 10.00 am on 27.04.2018-. Bids should be submitted on the forms available from the Chief Engineer, Road Development Authority, Beach Road, Jaffna. Bidding documents will be issued from 09.04.2018 up to 26.04.2018 on a payment of non- refundable tender fee of Rupees.2300.00 (including VAT)

| Details of works | Bid Security | ICTAD |
|---|---|---|
| 1. Re Construction of Bridge No.4/1 Sangilithoppu - Chemanai Road (B399) | 50,000.00 | C 8 & above |
| 2. Re construction of Bridge No. 3/3 Kachcheri -Beach - Fort Road | 35,000.00 | C 8 & above |

2. Bidding documents may be inspected free of charge at the Chief Engineer's office, Road Development Authority, Beach Road, Jaffna.
3. Eligible bidders shall comply with the following qualification criteria;
   a) The bidder shall be registered with the Institution for Construction Training and Development ICTAD, under the Grade and speciality given below.
   ICTAD Registration required:
   Speciality: Roads/Bridges
   Grade : C 8 and above
4. Bids shall be valid up to 29.06.2018 (63 calendar days) from time of closing of bids.
5. Bids must be accompanied by a bid security which mentioned in the tender document. Any bid not accompanied by an acceptable bid security will be rejected.
6. Bid security valid up to 27.07.2018
7. Dead line for the submission of Bids shall be on 27.04.2018 at 14.00 hrs
8. Sealed bids may be dispatched either by registered post or hand delivered to the Chief Engineer, Road Development Authority, Beach Road, Jaffna to be received before the closing time.
9. Bids will be opened on 27.04.2018 at 14.30 hrs immediately after the closing at the above address.
10. Bidders or their authorized representatives are requested to be present at the opening of Bids.
11. Pre-bid meeting will be held at Chief Engineer's office, Beach Road, Jaffna on 18.04.2018 at 10.00 a.m.
12. For further details, please contact Chief Engineer, on Tel No: 021 222 2968, Fax No: 021 222 2968.
13. Office will be kept closed on 12.04.2018 and16.04.2018 For RDA special Holiday

Provincial Director/NP
Road Development Authority
Beach Road, Jaffna

Chief Engineer
Road Development Authority
Beach Road, Jaffna

(in 6374) (13.17)

# மரண அறிவித்தல்கள்



## திருமதி தங்கரத்தினம் அப்புத்துரை

வளலாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் அப்புத்துரை 02.04.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையா அப்புத்துரையின் அன்பு மனைவியும் சரஸ்வதிப்பிள்ளை (இலங்கை), பாலகிருஷ்ணன்(கனடா), பாலசுப்பிரமணியம்(கனடா), செல்வராணி (லண்டன் UK) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராசலட்சுமி(இலங்கை), நவநீதம்(கனடா) மற்றும் பிரதீபன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சக்திவேல், சிவசுப்பிரமணியம்(கண்ணன் கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் பானுஜன், தட்சாயிணி, ஜெனிக்கா, வர்ஷா, துஸ்னியா, கஸ்மிதா மற்றும் கபிஷன் ஆகியோரின் பிரியமான பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு வளலாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 11.00 மணிக்கு வளலாய் கூனக்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(IN 6384) (14,17)

**பிரதீபன் - 076 498 2597 / பானுஜன் - 077 148 3801**

பிறப்பு 26 . 09 . 1939



இறப்பு 04 . 04 . 2018

## திருமதி தவமணி இராசரத்தினம்

நல்லூர் மூத்த விநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி இராசரத்தினம் 04.04.2018 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை இராசரத்தினம் (மதுவரித்திணைக்கள அத்தியட்சகர்) இன் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் மருமகளும் க.பஞ்சாட்சரம்(சோலைவரித்திணைக்கள உத்தியோகத்தர்) காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் சு.கமலமணி ஆகியோரின் சகோதரியும் நடராஜன் இராஜேஸ்வரி காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், யோகரத்தினம் மற்றும் திருக்குமரன் சகுந்தலா(கனடா), விஜயலக்சுமி ஆகியோரின் மைத்துனியும் நிரஞ்சினி(ஜேர்மனி), இராஜகுமாரன்(லண்டன்), சூரியகுமாரன்(லண்டன்), கமலினி(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் துரைரத்தினம்(ஜேர்மனி), மோகனா(லண்டன்), காயத்திரி(லண்டன்), ரவீந்திரன்(கனடா), சாவித்திரி(ஜேர்மனி), விஜயகுமார்(ஆஸ்திரேலியா), ரவீந்திரகுமார்(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரோஷா, திலக்ஷன்(ஜேர்மனி), மாளவி, துளசி(லண்டன்), ஹர்சினி(லண்டன்), ஷாலினி, கோகுலன்(ஆஸ்திரேலியா), ஜனனி(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2018) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.101, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
(மூத்த விநாயகர் கோயில் முன்பாக)

(IN 15423) (14,17)

தகவல்: மகன்மார்.
இ.இராஜகுமாரன்
இ.சூரியகுமாரன்

**0094 212 227 022 / 0012 8927 48722**



# சல்மான் கானுக்கு 5 ஆண்டுகள் சிறை

மான் வேட்டை வழக்கில் சிக்கிய நடிகர் சல்மான் கானுக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு நேற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

'ஹம் சாத் சாத் ஹெயின்' என்ற ஹிந்தி படப்பிடிப்பில் கலந்து கொள்வதற்காக, நடிகர்கள் சல்மான் கான், சயீப் அலி கான், நடிகைகள் தபு, நீலம், சோனாலி பிந்த்ரே ஆகியோர் ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூருக்கு கடந்த 1998 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி சென்றிருந்தனர்.

அன்றைய தினம் இரவு, ஜோத்பூரில் பரவலாகக் காணப்படும் 'வெளி மான்' இனத்தைச் சேர்ந்த இரண்டு மான்களை சல்மான் கான் சுட்டுக் கொன்றார். இந்த வழக்கின் விசாரணைகள் கடந்த 20 ஆண்டுகளாக நடைபெற்று வந்தன. இந்த வழக்கின் தீர்ப்பு ஜோத்பூர் நீதிமன்றத்தில் நேற்று வெளியானது. சல்மான் கானின் குற்றம் உறுதிப்படுத்தப்பட்டு அவருக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.



அதிகமான அன்பை விட அதிகமான புரிதல் எந்த உறவையும் நீண்டகாலம் வாழ வைக்கும்...!

பொய்களை சமைப்பது கடினம் உண்ணுதல் மிகக் கடினம். பின் செரிமானம் ஆவது அதனினும் கடினம்!



# கண்ணாடி சொல்லும் மூன்று பாடங்கள்...!



**1** எமது முகத்தில் ஏதேனும் அழுக்கோ, கறையோ பட்டுவிட்டால் கண்ணாடியில் அது தெரிகிறது. அந்தக் கறையைக் கண்ணாடி, கூட்டுவதும் இல்லை, குறைப்பதும் இல்லை. உள்ளதை உள்ளபடி காட்டுகிறது அல்லவா? அதேபோல், உன் சகோதரனிடம், நண்பனிடம், கணவரிடம், மனைவியிடம் எந்த அளவுக்கு குறை இருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் அதனைச் சுட்டிக்காட்ட வேண்டும். எதையும் மிகையாகவோ, ஜோடித்தோ சொல்லக் கூடாது. துரும்பைத் தூண் ஆக்கவோ, கடுகை மலையாக்கவோ கூடாது. இது கண்ணாடி சொல்லும் முதல் பாடம்!

**2** கண்ணாடிக்கு முன்னால் நீ நிற்கும்போது தான் உன் குறையைக் காட்டுகிறது. நீ அகன்று விட்டால் கண்ணாடி மௌனமாகிவிடும். அதேபோல் மற்றவரின் குறைகளை அவரிடம் நேரடியாகவே சுட்டிக்காட்ட வேண்டும். அவர் இல்லாதபோது முதுகுக்குப் பின்னால் பேசக்கூடாது. இது கண்ணாடி தரும் இரண்டாவது பாடம்!

**3** ஒருவருடைய முகக் கறையைக் கண்ணாடி காட்டியதால் அவர் அந்தக் கண்ணாடி மீது கோபமோ, எரிச்சலோ படுகிறாரா? இல்லையே! அதேபோல், எம்மிடம் உள்ள குறைகளை யாரேனும் சுட்டிக் காட்டினால் அவர் மீது கோபமோ, எரிச்சலோ படாமல் நன்றி கூற வேண்டும். அந்தக் குறைகள் எம்மிடம் இருக்குமேயானால் திருத்திக்கொள்ள வேண்டும். இது கண்ணாடி தரும் மூன்றாவது பாடம்!



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அவசரப்பணி ஏற்பட வாய்ப்புண்டு. அக்கம் பக்கத்தினருடன் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலம் பாதுகாக்கவும்.

**இடபம்:** எதிர்மறையாக பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். உடல் நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும்.

**மிதுனம்:** மனம் தெளிந்த நீரோடை போல இருக்கும். எதிலும், சமயோசிதமாக செயல்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து மனதில் நம்பிக்கை வளரும்.

**கடகம்:** உங்கள் மீது பலரும் நல்லெண்ணம் கொள்வர். உற்சாகமுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவான குறுக்கீடு விலகும். ஆதாயம் உயரும்.

**சிங்கம்:** நேர்மை வழியில் நடைபோடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குறையை சரி செய்வது நல்லது. பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**கன்னி:** சிலர் உங்களின் நற்செயலை பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி உருவாகும். இலாபம் சுமார். பெண்களுக்கு தாய்வழி உறவினரால் உதவி கிடைக்கும்.

**துலாம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். திட்டமிட்ட பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட பணி விரைவாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வருமானம் எதிர்பார்த்ததை விட அமோகமாக இருக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**தனுசு:** திட்டமிட்ட பணியை எளிதாக நிறைவேற்றுவீர்கள். வாகனப் பயணத்தால் இனிய அனுபவம் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் உயரும்.

**மகரம்:** எவரிடமும் குடும்ப பிரச்னையைப் பேச வேண்டாம். தொழிலில் விற்பனை சுமாராக இருக்கும். இலாபம் மிதமாக இருக்கும்.

**கும்பம்:** உங்களால் பலன் பெற்று நன்றி மறந்தவரையும் மன்னிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள அளவில் பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** பேச்சு, செயலில் வசீகரம் மேலோங்கும். புதிய நண்பர்களின் அறிமுகத்தால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் உயரும். சேமிக்க வாய்ப்புண்டு.

# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 1 | 8 | | 6 | | | |
| | | | 7 | 1 | | 5 | | |
| | | | 4 | | | | 1 | |
| | 8 | | 3 | | | | 5 | |
| 1 | | | 2 | | | 7 | 9 | 8 |
| | | | | | 1 | 2 | | |
| 5 | | | | | 7 | 9 | | |
| 8 | 7 | | | 3 | | 6 | | 1 |
| 6 | 9 | | | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 5 | 9 | 4 | 8 | 7 | 1 | 2 |
| 4 | 8 | 2 | 7 | 1 | 3 | 5 | 9 | 6 |
| 9 | 7 | 1 | 5 | 2 | 6 | 4 | 3 | 8 |
| 6 | 4 | 7 | 8 | 3 | 9 | 1 | 2 | 5 |
| 5 | 2 | 3 | 6 | 7 | 1 | 8 | 4 | 9 |
| 8 | 1 | 9 | 2 | 5 | 4 | 3 | 6 | 7 |
| 7 | 9 | 4 | 1 | 6 | 5 | 2 | 8 | 3 |
| 2 | 3 | 8 | 4 | 9 | 7 | 6 | 5 | 1 |
| 1 | 5 | 6 | 3 | 8 | 2 | 9 | 7 | 4 |

நேற்றைய விடை

## அப்பாவின் தியாகம்









# மாற்றம் (உரையாடல்)



ரமணனும் நிமலனும் ஒரே வகுப்பில் படிப்பவர்கள் நண்பர்களும் கூட. இருவரும் சந்தித்துக் கொள்கின்றனர்.

ரமணன் :- என்ன நிமலன்? முகம் கறுத்துப் போயிருக்கு வழக்கம் போல் வீட்டில் அப்பா அம்மாவுடன் ஏதாவது பிரச்சினையா?

நிமலன் :- எந்த நாளும் பிரச்சினைதான். இப்போது உன்னட்ட போட்டுவாறன் எண்டன். சத்தம் போடத் தொடங்கி விட்டினம்.

ரமணன் :- விடு. இது உனக்குப் பழிகிப் போய் விட்டுதுதானே!

நிமலன் :- சும்மா, எந்த நேரமும் படிப்பு. படிப்பு எண்டு ஒரே அறுவை. கொஞ்சம் நேரம் விளையாடினால் என்ன?

ரமணன் :- கொஞ்சம் பொறு. நீ இண்டைக்குக் காலமை எத்தினை மணிக்கு எழும்பினாய்?

நிமலன் :- இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை தானே! ஏழரை மணிக்கு எழும்பினன்?

ரமணன் :- சரி. காலமை எழும்பி ஏதாவது படிச்சனியா?

நிமலன் :- உனக்கென்ன விசரே! அதுவும் ஞாயிற்றுக்கிழமை. விடியவும் எழும்பி புத்தகத்தைத் தூக்க விருப்பம் வருகுதில்லை.

ரமணன் :- சரி. காலையில் படிக்கேல்லை. எழும்பி டியூசன் போயிருப்பாய். டியூசனால் வந்ததும் என்ன செய்தாய்?

நிலமன் :- ரி.வியில் நல்ல படம் ஒண்டு போனது. அதைப் பார்க்கத் தொடங்கினன். 2ஆம் உலகப் போர் தொடங்கி விட்டுது.

ரமணன் :- அப்ப முதலாம் உலகப் போர் படுக்கையால் எழும்பேக்கை நடந்ததோ.

நிமலன் :- ரமணா! பாத்தியா நீ பகிடி விடுகிறாய். பின்பு நடந்ததைக் கேள்.

ரமணன் :- உது தெரிந்தது தானே! நீயும் விட்டிருக்கமாட்டாயே?

நிமலன் :- பின்ன விடுவனே! அப்போது ரி.வியில் போன படத்தைப் பார்க்கத் தொடங்கினேன். அப்பா டிவி. சனலை நிற்பாட்டினார். நான் படிக்காதவன். சி.டியைஎடுத்து சி.டி.பிளேயரில் போட்டுப் பார்க்க ஆரம்பிச்சன். அப்பா திரும்பவும் ஓடி வந்து நீ உப்பிடியே படங்களைப் பார்த்து படிக்காமல் குட்டிச் சுவராய் போகப்போறாய்"என்று திட்டி சி.டி.பிளேயரை எடுத்து அலுமாரியில் வைச்சுப் பூட்டிப் போட்டார்.

ரமணன் :- நான் உனக்கொண்டு சொல்லட்டா அவையள் சொல்லுறதிலையும் செய்யிறதிலையும் பிழையில்லைத்தானே.

நீ.... கொஞ்சம் பொறு எனக்கும் ஆசைகள் இருக்கும் எண்டு ஏன் அவையள் நினைக்கினமில்லை. எந்த நேரமும் படிபடி எண்டு கரைச்சல். வீட்டை விட்டு ஒரு இடமும் வெளிக்கிடக்கூடாது. சிநேகிதரோட, கதைக்கக் கூடாது.

ரமணன் :- இங்கே பார் நிமலன் இதைத்தான் தலைமுறை இடைவெளி எண்டு சொல்லுறது. அவையள் வளர்ந்த முறை வேறு. தங்களைப் போலத்தான் நாங்களும் நடக்கவேணுமெண்டு தான் நினைப்பார்கள். நாங்கள் அவர்களுடன் கொஞ்சம் அனுசரித்துத்தான் போக வேண்டும்.

விமலன் :- உங்கள் வீட்டில் அது சரி வரும். எங்கள் வீட்டில் இது சரி வராது. பார் உனக்கு எவ்வளவு சுதந்திரம் கொடுத்திருக்கிறார்கள்.

ரமணன் - நீ நினைக்கிற மாதிரியில்லை. அனுசரித்து போவது என்பது இரண்டு பக்கமும் இருக்க வேண்டும். நான் அவர்கள் விருப்பத்துக்கு ஏற்ப ஓரளவு நடப்பதால் அவர்களும் என் விருப்பத்துக்கும் கொஞ்சம் இடம் தருகிறார்கள். எங்களை மற்றவை ஏமாற்றி விடுவினமோ என எமது பெற்றோர் அஞ்சுகிறார்கள் இவர்களும் எங்களில் அதிக அன்பு வைச்சிருக்கிறதால தான் எந்த நேரமும் தன் கண்ணுக்குள் எம்மை வைத்திருக்க விரும்புகிறார்கள். எமது பெற்றோருக்கு ஒன்றும் தெரியாது என்று நினைக்காமல் அவர்களுக்கு நாம் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுப்போம்.

நிமலன் :- நீ என்ன எனக்கு பாடம் எடுக்கிறாயா?

ரமணன் :- ஓ... பாடம் என்றுதான் நினைத்துக்கொள். நீ நான் சொல்லுகிறபடி நடந்துபார். பெற்றோரின் சின்னச் சின்ன ஆசைகளை நாங்கள் முதலில் பூர்த்தி செய்ய வேண்டும். பிறகு எமது விருப்பத்தை அவர்களிடம் விண்ணப்பிக்க வேண்டும். அதில பிழை இல்லை என்பதையும் விளக்கமாக அவர்களுக்குச்சொல்ல வேண்டும். டி.வி.பார்க்கிறது. விளையாடுகிறது எல்லாம் ஒரு அளவுக்கு மட்டும் என்கிற நிலையில் வீட்டில் கொஞ்ச நேரம் ஆறுதலாயிருந்து படிப்பதற்கும், அம்மா அப்பாவின் வேலைகளில் பங்குகெடுப்பதிலும் செலவளிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கும் எங்களுக்குமுள்ள இடைவெளி குறையும். அவர்கள் சொல்லுவதை நாம் கேட்போம். நாங்கள் சொல்லுவதையும் அவர்களைக் கேட்கவைப்போம். இதோ நேரமாகிவிட்டது. உடனே வீட்டுக்குப் போய் பழைய பழக்கம் என்று பகிடி பண்ணாமல் கை, கால், முகம் கழுவி சாமி கும்பிட்டு ஒரு மணி நேரமாவது ஓரிடத்தில் உட்காந்து படி. அம்மா அப்பாவிடம் அவர்களுக்குத் தெரிந்த விடயங்களைக் கேட்டுப் படி. அதுக்கு பிறகு நீ விரும்பின ஒரு சிடியை எடுத்துத் தாறீங்களா" என்று அவர்களிடம் கேட்டுப்பார். எல்லாம் புதுமாதிரி மாறியிருக்கும்.

நிமலன் : என்ன? எல்லாம் இன்றைகேயா? இது நடக்குமா?

ரமணன் : இப்படி தினமும் தொடர்ந்து செய் என்கிறேன்.

நிமலன் : நன்றி ரமணா. உன் அறிவுரைகளுக்கு.

ரமணனன் : சென்று வா! வென்று வா!






# இலைப்பூச்சியும், தடிப்பூச்சியும்

சூழலில் மறைந்து கொள்ளக்கூடிய தோற்றத்தைக் கொண்ட பூச்சிகள் பலவுள்ளன. இலைப்பூச்சி தடிப்பூச்சி என்பன அவற்றில் இரண்டாகும். இவை தாவரங்களில் பற்றி இருக்கும் போது இவற்றை இலகுவில் இனம் காணமுடியாது. இலைப்பூச்சி இலையில் அமர்ந்திருக்கும் போது அதனை இலையிலிருந்து வேறுபடுத்த முடியாது. அதன் பச்சை நிறமும் உடலிலுள்ள இலை நரம்பு வடிவமும் சூழலோடு அதனை அற்புதமாகப் பிணைத்திருக்கும்.

தடிப்பூச்சிகள் மரப்பட்டை நிறமானவையாகவும் (கபிலநிறம்)குச்சி குச்சியாக கால்களையும் கொண்டு காணப்படுவன. இவற்றின் தோற்றம் காய்ந்த குச்சி போன்றிருப்பதால் இவற்றையும் வேறுபடுத்தி இனம் காண்பது கடினமாகும். இவ்விரு வகைப் பூச்சிகளும் பகற்பொழுதுகளில் அசைவின்றி நீண்ட நேரம் தாவரத்தில் அமர்ந்திருப்பதால் அவற்றை அடையாளம் காண்பது சிரமம். இவை நகரும்போது பூச்சி தானா என அதிசயிக்க நேரிடும். அயன மண்டலக் காடுகளில் இவை அதிகம் காணப்படுகின்றன. இவை சூழலில் தம்மை இனம் காணாது மறைத்துக்கொள்வதால் எதிரிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதுடன் தமக்குரிய பூச்சிகளை இலகுவில் இரையாகக் கொள்ளவும் வாய்ப்பாகின்றது. இவற்றுக்கு ஆறு கால்களுள்ளன. முன்னாங்கால்களிரண்டும். இரையைப் பற்றத் தயார் நிலையில் இருப்பனவாகும்.

இந்த பூச்சிகளிலும் தடிப்பூச்சிகளிலும் ஏறத்தாழ 2ஆயிரம் வகைகள் உள்ளன. அயன மண்டல கீழைத்தேச பகுதிகளில் இவை அதிகம் காணப்படுகின்றன. சில வகைகளை வட ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் காணலாம்.

### உருக்கள் மூலம் கழிப்போம்



5 - 3 = ☐




6 - 5 = ☐



8 - 3 = ☐



7 - 4 = ☐



6 - 6 = ☐



# விந்தைப் பூக்கள்

நன்றே மலர்ந்த பூக்கள் வாடி
நாளை கீழே வீழ்ந்திடலாம்
அன்றேல் கனிகள் ஆகிக் கூட
அருமை விதைகளை ஈந்திடலாம்

அழகு மலரின் நிறமும் மணமும்
அயர்ச்சி கொண்ட மாந்தரை
தழுவத் தழுவ வாட்டம் நீங்கும்
தளர்ச்சி மறைந்து போய் விடும்

தேவை வணங்கி மாலை சூட்டி
'தலைவன்' என துதிகள் செய்தே
பாவை ஓதும் பக்தர் கூட்டம்
பூவைச் சூடுவர் பெண்களே

தேனைத் தேடும் தேனீ இனம்தான்
திகட்டா சுவையை அறியுமே
நானிலத்தே அருமைப் பூக்கள்
நலம் பெருக்கி வாழுமே



# வர்ணம் தீட்டுவோம்



357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472 esprintersjaffna@gmail.com
ES Printers

**நோர்வே பேர்கனில் அமைந்துள்ள சித்திவிநாயகர் ஆலயத்தில் ஆலயக் குருக்களாகப் பணிபுரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமையுடையவர்களாக இருத்தல் வேண்டும்**

- சிவாச்சாரியர் குருக்களாக இருத்தல் வேண்டும்
- ஆச்சார்ய அபிசேகம் பெற்றவரும் சிவாகமமுறைப்படி சகல அபிசேகங்கள், பூசைகள் மற்றும் அனைத்து கிரியைகள் தனித்து செய்யக்கூடியவராகவும் மடப்பள்ளி வேலைகள் செய்யக்கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
- 35 வயதுக்கு மேற்பட்டவராகவும், திருமணமானவராகவும் இருத்தல் வேண்டும்.
- சமய சொற்பொழிவுகள், பிரசங்கங்கள் செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- பதவிக்காலம் ஆகக்கூடியது இரண்டு வருடங்கள்.
- தகுந்த வேதனமும் தங்குமிட வசதியும் செய்துகொடுக்கப் படும்.
- ஆலயம் திருக்கணித பஞ்சாங்கத்தைப் பின்பற்றி நடை பெறுகின்றது.

தகுதியுடையவர்கள் ஆகமம் பயின்ற இடம், பணிபுரிந்த இடங்கள் மற்றும் ஏனைய நற்சான்றிதழ்கள், முழுப்படம், பாஸ்போட் பிரதிகளையும் இணைத்து கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 05.05.2018 இற்கு முதல் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்

Bergen Hindu Sabha
Storetveit veien 5
5067 Bergen, Norway.

மேலதிக தொடர்புகளுக்கு:- +47 941 46069, +47 922 23396

(CS/14527)(11,17)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இலட்சுமி சிவநாதன்



சரவணைகிழக்கு, 9ஆம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வேலணைமேற்கு 8ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும், புகையிரத நிலைய வீதி கோண்டாவில் மேற்கு கோண்டாவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமி சிவநாதன் நேற்று(05.04.2018)வியாழக்கிழமைகாலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு புதல்வியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இராசம்மா(ராசு)தம்பதிகளின் அன்பு மருமகளும், சிவநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பஞ்சாட்சரம் மற்றும் இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, தவராசா, ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற தியாகேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரியும், இரட்ணமணி, பாலசிங்கம், அன்னலிங்கம், கலாராணி, கதிர்காமநாதன் ஆகியோரின் மைத்துனியும், சுரேந்திரன், இரவீந்திரன், கஜேந்திரன், கஜேந்தினி, சர்மினி, நிராஷினி, நிஷாந்தன், நிஷங்கர், நிரோஷினி, இன்பராஜ், கார்த்திகா, சோபிகா, கௌசிகா ஆகியோரின் பெரிய தாயாரும், சாந்தி, மஞ்சுளா, அஜித், றஸிக்கா, கஜானி, கஜன் ஆகியோரின் பெரிய மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் புகையிரதநிலைய வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/15441)(11)

**தகவல்: குடும்பத்தினர்.**

**0771677363, 0212225839**

## நீங்காத நினைவுகளுடன்
## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மனம் மகிழ 15 . 07 . 1928

மனம் நெகிழ 06 . 04 . 2017

### அமரர் திருமதி அக்னஸ் யோசப் (டொக்கம்மா)

"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு
அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது"
(சங்.116:15)

அம்மா எம் அன்புத் தாயே!
ஆண்டு ஒன்று ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு - அம்மா
ஆறவில்லை எம் இதயம்
அன்பும், பாசமும், கருணையும்
நிறைந்த
பொக்கிசம் நீங்கள் அம்மா!
அவனியில் எம்மை வாழ வைத்த
ஆசானும் நீங்கள் அம்மா!
பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
பலருக்கும் இனியவளாய்
பரிவுடன் ஏழைகளை அணைத்து
பக்குவமாய் உதவிகள் பல புரிந்தீரே

அன்பு நிறை அன்னையாய்
வழிகாட்டும் தந்தையாய்
நல் ஆசானாய் எம் வாழ்வு உயர
உங்களை மெழுகாய் உருக்கி
எம் ஒளி விளக்காய் திகழ்ந்தீர்கள்
அம்மா நீங்கள் மறையவில்லை
எம் இதயக் கோவிலில் வாழ்கின்றீர்கள்
இறைவனில் நீங்கள் என்றும்
இன்புற்றிருக்க
அனுதினம் இறைவனை
இறைஞ்சுகின்றோம் அம்மா....

**அன்னை இல்லம்,**
**புலோப்பளை கிழக்கு, பளை.**

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**
**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**(அருட்சகோதரி, மரியமலர் யோசப்)**



மலர்வு 23 . 07 . 1924

உதிர்வு 05 . 04 . 2018

### திருமதி கமலாம்பிகை (அக்கம்மா) கோபாலபிள்ளை
(வேலணை வடக்கு)

வேலணை வடக்கு, 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இராசையா வீதியை வசிப்பிடமாகவும் தற்போது இல.41, கலட்டி லேன், கோண்டாவில் மேற்கில் வசிப்பிடமாகவும் கொண்ட கமலாம்பிகை (அக்கம்மா) கோபாலபிள்ளை நேற்று (05.04.2018) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - நகுலாம்பிகை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இராமலிங்கம் கோபாலபிள்ளையின் (முன்னாள் வர்த்தகர் காலி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நகுலேசபிள்ளை, சிவராசா, சாந்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரத்தினபூபதி (ஓய்வு நிலை பதவி நிலையாளர் பரந்தன், இரசாயன கூட்டுத்தாபனம்), சாட்சாயினி (ஓய்வு நிலை ஆசிரியர்), முருகதாஸ் (காசாளர், சாரங்கா நகைமாடம் - யாழ்ப்பாணம்), பரமானந்தன் (ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்), குமரதாஸ் (பிரான்ஸ்), மல்லிகா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சோதிலிங்கம் (கோண்டாவில்) மற்றும் சச்சிதானந்தபிள்ளை (மண்டைதீவு), சிவகுமார் (கோண்டாவில் - தொழிலதிபர் கொழும்பு), பத்மா ( ஆசிரியர்- கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாசாலை), ஹேமா (அதிபர் - வுல்வேன்டேல் பெண்கள் உயர்நிலை பாடசாலை), நிர்மலா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும், பாரதி - ஸ்ரீகரன், கோகுலன் - தனுஷியா, சாரங்கன் - பைரவி, சிந்து - சிவசயந், துளசி - கோகுலகுமரன், தனுஜா, மகிழன் பிரியங்கா, கோகுல், நிவேத் (பிரான்ஸ்), அக் ஷயா ஆகியோரின் பேர்த்தியும், அக் ஷரன், அபிராம் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2018) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் (கோண்டாவில் மேற்கில்) முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வேலணை சாட்டி மயானத்தில் ஒரு மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 41, கலட்டி லேன்,**
**கோண்டாவில் மேற்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

077 902 4268 / 021 221 5784

(cs15447)(13,17)

சுந்தர்சன் நிறுவனத்தின்
சித்திரைப் புத்தாண்டு
விசேட விலைக்கழிவும்
இலவச விநியோகமும்
வீட்டுக்கு தேவையான மின் உபகரணங்கள் அத்தனைக்கும்
உத்தரவாதத்துடன் கூடிய விசேட விலைக்கழிவு தரப்படும்
02.04.2018 - 21.04.2018 வரை


138, யாழ் வீதி, மானிப்பாய்

## மறுவாழ்வு...

டும். தகைமையுடையோர் விண்ணப்பிக்கவும்.

இவ்வாறு போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றில் மோட்டார் வாகன சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளின் விவாதத்தில் நேற்று உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதியம் வழங்கப்படாத அனைத்து நபர்களுக்கும் நிலுவையில் உள்ள அனைத்து நிதியும் மே மாதத்துக்கு முன்னர் கிடைக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சபையில் கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்.

" கிழக்கு மாகாணத்தில் சாரதி, நடத்துனர் போன்ற வெற்றிடங்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. வடக்கில் அதிக வெற்றிடங்கள் இல்லை. சாரதிக்குரிய வெற்றிடம் 40 , நடத்துநர் பதவிக்கு வெற்றிடம் 40, பேருந்து மெக்கானிக் பதவிக்கு 38 வெற்றிடங்களும் உள்ளன. இந்த வெற்றிடங்களுக்கு மறுவாழ்வு வழங்கப்பட்டுள்ளவர்களை நியமிக்க வேண்டும். அவர்களில் திறமையான சாரதிகள் உள்ளனர். அவர்களைக் கருத்திற்கொண்டு ஜனநாயக ரீதியில் இணைந்து வாழ விரும்பும் எமது இளைஞர்களுக்கு வாய்ப்புக்களை வழங்க வேண்டும்" என்று கோரினார். அதற்குப் பதிலளிக்கையிலேயே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

"வடக்கு மாகாணத்தில் மட்டுமல்ல 12 போக்குவரத்துப் பிராந்தியங்களில் 2011 நவம்பர் முதல் 2015 ஓகஸ்ட் மாதம் வரையில் ஊழியர் சேமலாப நிதியம் செலுத்தப்படவில்லை. குறிப்பிட்ட காலப்பகுதியில் போக்குவரத்து அமைச்சால் செலுத்த வேண்டிய உரிய நிதியம் செலுத்தப்படவில்லை. அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சார்ள்ஸ் கோரினார்.

அதற்குப் பிரதி அமைச்சர் அசோக மேலும் தெரிவிக்கையில்:

கடந்த காலத்தில் இந்த நிதியம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. தற்போது 10.5 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எமது ஆட்சியில் இதனை ஒதுக்கியுள்ளோம். இந்தவருட இறுதிக்குள் அனைத்து நபர்களுக்கும் நிதி கிடைக்கும். நிலுவையில் உள்ள அனைத்து நிதியும் மே மாதத்துக்கு முன்னர் கிடைக்கும்.

உரிய பிரதேசங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு உரிய பகுதி மக்களையே நியமிக்க முடியும்.

வடக்கு கிழக்கில் அரசு இலாபம் அடையும் பகுதிகள். குறிப்பாக இ.போ.ச டிப்போக்களில் 120 மில்லியன் ரூபா அளவில் நிரந்தர வைப்புகள் உள்ளன.

ஆகவே இவற்றைக் கருத்தில் கொண்டு நாம் எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கைகளை எடுப்போம்.

எனினும் மெக்கானிக் பதவிக்கு நாம் இணைத்துக்கொள்வதில்லை. மாறாக சாரதிகள், நடத்துநர்கள் வெற்றிடங்களுக்கு நபர்களை இணைத்துக்கொள்ள முடியும். நபர்கள் இருப்பார்கள் என்றால் உரிய காரியாலங்களுக்கு விண்ணப்பிக்க வலியுறுத்துங்கள். இலங்கைப் போக்குவரத்துச் சபை தலைமை காரியாலயத்துக்கு விண்ணபிக்கக் கூறுங்கள்.

தகமைக்கு அமைய நாம் அவர்களை இணைத்துக்கொள்கின்றோம். வாகன சாரதிகளாக 8 ஆம் தரம் சித்தி பெற்றிருந்தால் போதுமானது. 45 வயதுக்குக் குறைவானவர்கள், 5 ஆண்டுகள் கனரகவாகனம் சாரதி அனுமதிப்பத்திரம் இருக்க வேண்டும். நடத்துனருக்கு கணித பாடத்தில் சாதாரண சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருந்தால் போதுமானது. அவ்வாறான நபர்கள் இருப்பின் எம்மிடம் அறிவியுங்கள். நாங்கள் உரிய நபர்களுக்கு வேலை வாய்ப்புகளை பெற்றுத் தருகின்றோம். ஒரு நாளைக்கு 1000 ரூபா வழங்கப்படும். இதர சலுகைகளும் உள்ளன - என்றார். (4)

## வலி. வடக்கில்...

விக்கப்பட வுள்ளது. அந்த வீதியின் மேற்குப் பக்கம் உள்ள 650 ஏக்கர் காணிகளும் மக்கள் பாவனைக்கு ஒப்படைக்கப்படவுள்ளன. அந்த வீதியை மறித்து அமைக்கப்பட்டிருந்த இராணுவ முன்னரங்க வேலிகளை அகற்றும் பணியை பாதுகாப்புத் தரப்பினர் ஆரம்பித்துள்ளனர்.

தமிழ், சிங்களப் புத்தாண் டுப் பரிசாக காணிகளை விடுவிக்குமாறு இராணுவத் தளபதியிடம், மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கோரிக்கை விடுத்திருந்தார். அதற்கு அமைவாக, காணிகளை விடுவிப்பதற்கு இராணுவத் தளபதி இணங்கியிருந்தார்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் 28 ஆண்டுகளாக இருந்துவரும், கட்டுவனிலிருந்து மயிலிட்டிச் சந்தி வரையான பிரதான வீதி மக்கள் பாவனைக்கு விடுவிக்கப் படவுள்ளது. இந்த வீதியின் கிழக்குப் பக்கம் பலாலி வானூர்தி நிலையம் அமைந்துள்ளது. மேற்குப் பக்கம் மக்களின் குடியிருப்புக் காணிகள் அமைந்துள்ளன. சுமார் 650 ஏக்கர் காணிகள் இதன்போது விடுவிக்கப்படவுள்ளன.

மேலும், பருத்தித்துறை - பொன்னாலை வீதி எதிர்வரும் 16ஆம் திகதி தொடக்கம் மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்படவுள்ளது. தினமும் காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை அந்த வீதியைப் பொதுமக்கள் பயன்படுத்த முடியும். (5,114)

## 220...

ரைக் கோடி ரூபா என்று மதிப்பிடப்படும் அந்தக் கஞ்சாவை, கொண்டுசென்ற குற்றச்சாட் டில் யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபத்தில் - புத்தளம் வீதியில் பங்கதெனிய பகுதியில் கஞ்சா மீட்கப்பட்டு கைது இடம்பெற்றது.

வாகனம் ஒன்றில் பயணித்துக்கொண்டிருந்தவர்களைப் பொலிஸார் சந்தேகத்தில் மறித்துச் சோதனையிட்டபோது அதற்குள்ளிருந்து கஞ்சா பொதிகளாக மீட்கப்பட்டது. அவர்கள் கைது செய்யப்பட்டனர். வாகனம் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். கஞ்சா கடத்தலில் முதன்மை நபர் குறித்த வாகனத்துக்கு முன்னே பிறிதொரு வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தார் என்றும் அவர் தலைமறைவாகிவிட்டார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4)

## வீதி விதி...

இடத்திலேயே அறவிடத் தீர்மானித்த 25,000 ரூபா அதிகூடிய தண்டப்பணம் 3,000 ரூபாவாகக் குறைக்கப் பட்டுள்ளது.

இதன்படி 33 வீதி ஒழுங்கு மீறல்களுக்கு 500 ரூபா முதல் 3,000 ரூபா சம்பவஇட தண்டமாக அறவிட நாடாளுமன்று நேற்று அங்கீகாரம் வழங்கியது.

மன்றில் உரையாற்றிய போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதியமைச்சர் அசோக்க அபேசிங்க, அதிகரித்துள்ள வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விதிகளை மீறும் வாகன சாரதிகளிடம் அதிகூடிய சம்பவஇட தண்டப் பணமாக 25,000 ரூபா அறவிடப்படும் என்று நடப்பாண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. இதற்குத் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் உள்ளிட்ட பல சங்கங்கள் எதிர்த்திருந்தன.

இந்த நிலையில் குறித்த விடயம் அரச தலைவரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இது பற்றி ஆராய்வதற்கு அரச தலைவர் குழுவொன்றையும் நியமித்தார். இந்தக் குழுவின் பரிந்துரைக்கு அமைய ஆகக்கூடிய தண்டப்பணமாக 3,000 ரூபா தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய விதிகளை மீறிய சாரதிகளிடம் சம்பவ இடத்தில் ஆகக் கூடிய தண்டப் பணமாக 3,000 ரூபாவும், ஆகக் குறைந்த தண்டப் பணமாக 500 ரூபாவும் அறவிடப்படும்.

சட்டத்தை மதித்துச் செயற்படும் வாகனச் சாரதிகளை உருவாக்கும் நோக்கிலேயே தண்டப் பணத்தை அதிகரிப்பதற்கு அரசு தீர்மானித்தது. சட்டங்களை அதிகரிப்பதன் மூலம் மாத்திரம் விபத்துக்களைக் குறைக்க முடியாது. சாரதிகள் உரிய முறையில் நடந்து கொள்வதும் அவசியமானது. வீதி விபத்துக்களால் நாளொன்றுக்கு ஏழு அல்லது எட்டுப் பேர் உயிரிழக்கின்றனர். போரால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையைவிட வீதி விபத்துக்களால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையே அதிகமாகவுள்ளது.

இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க முன்னர் ஒரு நாள் செயலமர்வை நடத்தி அதில் தேர்ச்சி பெறுபவர்களக்கு சான்றிதழொன்றை வழங்க எதிர்பார்த்துள்ளோம். அதேபோல வீதி போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளுக்கு புள்ளிகளை வழங்கும் முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார்.

இதுமாத்திரமன்றி, தங்கக்கூடிய வசதிகளைக் கொண்ட 'கரவான்' மற்றும் முச்சக்கர வண்டியைப் போன்று ட்ரொடி சைக்கிள்கள் தொடர்பிலும் ஒழுங்கு விதிகள் கொண்டுவரப்பட்டுள்ளன. அதனையும் நாடாளுமன்றம் அங்கீகரிக்க வேண்டும் - என்றார். (4)

## புதிய...

ளித்தவர்களுடன் இணைந்து அரசின் பயணம் தொடரும். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை 46 மேலதிக வாக்குகளால் தோற்கடித்தமையைக் கொண்டாடும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுக் காலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நல்லாட்சி அரசு அமைக்கப்பட்டு மூன்று ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில் இவ்வாறான வெற்றியைப் பெற்றுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. 46 மேலதிக வாக்குகளால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வெற்றிகொண்டுள்ளோம்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் எனக்கும், அரசுக்கும் எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானமாகும். தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

புதிய பயணமொன்றை ஆரம்பிக்க வேண்டியுள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவு அதனை எமக்கு உணர்த்தியுள்ளது.

எமக்கு ஆதரவளித்த அனைவரையும் இணைத்துக்கொண்டு நாட்டில் முன்னெடுக்க வேண்டிய சிறந்த வேலைத்திட்டங்களோடு முன்னோக்கிப் பயணிப்போம். அண்மைய நாள்களாக எவ்வாறான வேலைத்திட்டங்களுடன் முன்னோக்கிப் பயணிக்க வேண்டும் எனக் கலந்துரையாடினோம்.

ஐக்கிய தேசியக் கட்சியில் புதிய முகங்களுக்கு வாய்ப்பளிக்கும் நோக்கில் முழுமையான மறுசீரமைப்புகள் முன்னெடுக்கப்படும். அதன் அடிப்படையில் 2020ஆம் ஆண்டு தேர்தலுக்குத் தயாராகுவோம். சக்திவாய்ந்த பயணத்தைத் தொடர எங்களுக்கு நம்பிக்கை பிறந்துள்ளது - என்றார். (5)

## மெடிக்ஸ்...

நேற்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களில் மருத்துவம் சார்ந்த உயர் கற்கை நெறிகளை மாணவர்களுக்குத் தெளிவூட்டும் நோக்கில் இது அறிமுகம் செய்யப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடமும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சும் இணைந்து இதனை அறிமுகம் செய்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மருத்துவ பீடத்தின் 40ஆவது ஆண்டுக் கொண்டாத்தின் ஒரு பகுதியாக மருத்துவக் கண்காட்சி மருத்துவ பீடத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியிருந்தது. மாணவர்களின் மருத்துவம் சார்ந்த உயர் கல்வியை வழிகாட்டும் நோக்கில் இலங்கையில் எந்தெந்தப் பல்கலைக்கழகங்களில் என்ன விதமான கற்கை நெறிகள் உள்ளன? அவற்றின் கற்கைக் காலம் எவ்வளவு? உள்ளிட்ட பல்வேறு தகவல்களையும் குறித்த செயலி ஊடாக அறிந்து கொள்ள முடியும். அதற்கேற்றதாகக் குறித்த செயலி (அப்ஸ்) வெளியிடப்பட்டுள்ளது.

இதனை தரவிறக்கம் செய்து மாணவர்கள் தமது கற்கை நெறிகள் பற்றித் தெரிந்து கொள்ள முடியும் என்று மேலும் தெரிவிக்கப் பட்டது. (4,7)

## சிங்களக் குடியேற்ற...

கொள்ளப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான வடக்கு மாகாண-சபையின் சிறப்பு அமர்வு நேற்று நடைபெற்றது. அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும்திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்க வலியுறுத்தி நாம் எதிர்வரும் 10ஆம் திகதி முல்லையில் போராட்டம் நடத்த தீர்மானித்துள்ளோம். அதற்கு மேலதிகமாக எமது நாடாளுமன்ற உறுப்பினர்களையும் எமது உறுப்பினர்களையும் ஒருங்கிணைத்து நாம் கலந்துரையாடுவோம்.

இந்தக் கலந்துரையாடலுக்கான திகதியை நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் உரையாடிய பின்னர் இரண்டு தரப்புக்களுக்கும் ஏதுவான திகதியில் நடத்துவோம். கலந்துரையாடலில் சிங்களக் குடியேற்றம் தொடர்பாகவும் அதன் அவசர நிலமை தொடர்பாகவும் எடுத்துக் கூறப்படும். கொழும்பு அரசுக்கு அழுத்தம் கொடுத்து அதைத் தடுக்க நாம் எமது நடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக நடவடிக்கை எடுப்போம்-என்றார். (ρ-8)


உத்தியோகபூர்வ முடிவுகள்

Development Fortune அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 132 |
| சீட்டிழுப்பு திகதி 05.04.2018 | நீலம் |

வெற்றி இலக்கங்கள் 11 22 23 62 — சுப்பர் இலக்கம் 04 — அதிர்ஷ்ட மாதம் மார்ச்

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| ரூ. 11, 448, 368/= | ரூ. 29, 47, 985/= | ரூ. 14, 90, 246/= |

2018.04.07 ஆம் திகதி சனிக் கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk


## காணவில்லை



தங்கராசா ரதீஸ், வயது 32. இவர் நேற்று 05.04.2018 வியாழக் கிழமையில் இருந்து காணாமல் போயுள்ளார். அன்றையதினம் இவர் கறுப்பு நிற T- சேட்டும் மண்ணிறமான சறமும் அணிந்திருந்தார். இவர் ஒரு மன நோயாளி என்பது குறிப்பிடத்தக்கது. இவரைப் பற்றிய விவரம் தெரிந் தவர்கள் தயவு செய்து எமக்கு அறியத்தந்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இவரை கண்டுபிடித்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு - 075 5217572, 077 306 4237

## போராட்ட...

லாமா? எனவும் மாகாண சபை உறுப்பினர்கள் ஆராய்ந்தார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடக்கும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான சிறப்பு அமர்வு நேற்று வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது. எதிர்வரும் 10ஆம் திகதி திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் முன்பாக கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்த அதில் முடிவெடுக்கப்பட்டது.

அப்போது எழுந்த மாகாண விவசாய அமைச்சர் சிவநேசன், "நாம் செல்லுகின்ற பிரதேசங்களின் பாதைகள் மிகவும் மோசமானவை. அந்த இடங்களுக்கு பிக்கப் வாகனத்தில் பயணிப்பதுதான் சிறந்தது. எம்மிடம் எத்தனை பிக்கப் வாகனம் உள்ளன?"என்றார். உறுப்பினர்கள் சிலர் காரிலும் பயணிக்கலாம் என முணுமுணுத்தனர். "எம்மிடம் உள்ள பிக்கப் வாகனங்களை ஒழுங்கு படுத்துவோம். ஒரு வாகனத்தில் பல உறுப்பினர்கள் என பயணிக்கலாம் எனவே அதற்கான ஒழுங்குகள் செய்யப்படும்." என்று அவைத் தலைவர் அவர்களுக்குப் பதிலளித்தார். (ற-8)

## தீவகத்திலிருந்து...

தொடங்கியுள்ளனர்.

புங்குடுதீவிலிருந்து 5 மாடுகளை பிளாஸ்ரிக் படகில் கடத்தி வந்த 3 பேர் காக்கைதீவில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 5 மாடுகளும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளது. படகும், அதனைச் செலுத்த பயன்படுத்தப்பட்ட இயந்திரம், நகரில் மாட்டைக் கடத்திச் செல்வதற்காகக் கொண்டு வரப்பட்டது என்று கூறப்படும் 'பட்டா' ரக வாகனம் என்பனவும் சிறப்பு புலனாய்வுப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மூவரில், இருவர் புத்தளத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (5)

---

**அத கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 218
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2018.04.05

இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 55,251,615/-

வெற்றி இலக்கங்கள்
20 35 36 57 I

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலய மாணவன்

**யோகராசா கோமகன்**

**7A,B,C**

அவர்கள் சாதாரண தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்றமையையிட்டு கண்ணகை அம்மன் அருளோடு மனப்பூர்வமாக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: வ.தர்மலிங்கம் குடும்பம், க.சின்னராசா குடும்பம், (ராஜா ஸ்ரோர்ஸ்)

அம்மன் கோயிலடி, மட்டுவில் வடக்கு.

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 19 . 11 . 1947

இறப்பு 06 . 04 . 2017

**சந்தியோ எட்வேட் (காந்தி)**

" என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார் " (யோவான் 11:25)

**அன்புடன் நினைவுகூரும்**

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

நம்.7, 3ஆம் குறுக்குத்தெரு, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

எ.ஜெயராஜ் றிறோன்
மகன் - 077 965 5890

---

# பணியாளர்கள் தேவை

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் பிரபல்யமான வர்த்தக நிறுவனத்திற்கு கீழ்க்குறிப்பிடும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள். இவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஆண்களாக இருத்தல் வேண்டும். **சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

01. காசாளர்
02. கணக்காளர்
03. கணக்காய்வாளர்

} இவர்கள் கணினி கையாள்வதிலும் கணக்காய்விலும் போதிய அனுபம் உடையவராக இருத்தல் விரும்பத்தக்கது.

(AKN 426) (4.17)

**077 772 2305**

---

**ஜயோதா**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1456
சீட்டிழுப்பு திகதி 05.04.2018

வெற்றி இலக்கங்கள்
04 16 46 49 B

திங்கட்கிழமை ஜக்பொட்
ரூ. 19, 371, 452/=

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது செல்வம்

**இரத்தினம் அபர்ணன்**

**(J.H.C.)**

**9A**

2017 ஆம் ஆண்டு க.பொ.த. சா/த பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் திறைமைச்சித்தி (9A) பெற்றுள்ளார்.

*பல கலைகற்று பாரினில் உயர்ந்து*
*நிலமைகள் போற்றும் நேரிய மனிதனாய்*
*கலைமகள் திருமகள் அருளுடன்கூடி*
*நிலைபெறு புகழுடன் நீடூழி வாழ்க!*

அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, அப்பா, அம்மா, சித்தப்பா, சித்திமார், மாமாமார், அத்தைமார்.

வல்வெட்டித்துறை.

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes



2017ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் **9A** பெறுபேற்றினைப் பெற்று எமக்கும் எமது அரியாலை ஊருக்கும் பெருமை சேர்த்த யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவியான

**செல்வி டிலக்ஷிகா ரஞ்சித்குமார்**

அவர்கள் மென்மேலும் கல்வியில் பட்டங்களைப் பெற்று சிறந்து விளங்க மனதார வாழ்த்துவதோடு இன்று பிறந்த நாளைக் காணும் இவர் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

Happy Birthday

**வாழ்த்துவோர் - அண்ணன்மார்**
**சுரேன், யது, தேவா, துஷி**

---

# கண்ணீர் காணிக்கை



எமது ஸ்தாபனத்தின் கணக்காளர் **கோ. முருகதாஸ்** அவர்களின் அன்புத்தாயார்

**கமலாம்பிகை கோபாலபிள்ளை**

**(அக்கம்மா)**

அவர்களின் அன்புத்தாயார் காலமான செய்தி கேட்டு துயர்அடைந்தோம் அன்னாரின் பிரிவால் துயரிருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


**உரிமையாளரும், ஊழியர்களும் சாரங்கா நகைமாடம்**
**இல. 157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

---

# நன்றியைத் தெரியப்படுத்துதல்

உடையார்கட்டு குளத்தில் இராணுவம் தனது பண்ணைச் செய்கைக்கு நீரை குளத்தில் இருந்து முறையற்றவிதத்தில் பெற்று வந்தது. இதனை தெரியப்படுத்தி நாம் நடத்திய அறவழிப் போராட்டத்தின் பயனாக இராணுவம் 04.04.2018 குளத்தில் இருந்து இயந்திரங்களை அப்புறப்படுத்தி உள்ளது எனவே இலங்கை இராணுவத்தின் 683 படைப்பிரிவு இராணுவப் பொறுப்பதிகாரி அவர்களுக்கும் ஏனைய பண்ணைப் பொறுப்பதிகாரி அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் எமக்கு ஆலோசனைகள் வழங்கி ஊக்கமும் ஆக்கமும் தந்துதவிய அரசியல் பிரமுகர்களான திரு. சிவமோகன், திரு. சிவனேசன் (பவான்), திரு. கமலேஸ்வரன், திரு. புவனேஸ்வரன் ஆகியோருக்கும் மற்றும் எமது அபிலாசைகளுக்கு இடமளித்து நீர்ப்பாசன கூட்டங்களை நடத்தாது ஒரே தீர்மானமாக பம்புகளை அகற்றியதன் பின்னர் சிறுபோகம் செய்வது என தீர்மானித்து கூட்டம் நடத்தாமல் சென்ற அரச அதிகாரியான மாவட்ட செயலாளர் பிரதேச செயலாளர் நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் மற்றும் திட்டமிடல் உத்தியோகத்தர் அனைவருக்கும் எமது ஊர்வலம், போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு நல்கிய எமது மக்களுக்கும் இதன்போது ஏற்பட்ட செலவுகளை ஏற்றுக்கொண்ட விவசாயிகளுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**உடையார்கட்டு குளத்தின் கீழ் உள்ள கமக்காரர் அமைப்புக்கள், விவசாயிகள், பொதுமக்கள்.**



# வந்திட்டோம்னு சொல்லு.... திரும்பி வந்திட்டோம்னு....

■ ஏ.வினோதவன்

உலகிலுள்ள கிரிக்கெட் ரசிகர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு வருடமும் விருந்தாக அமைகிறது ஐ.பி.எல். என்னும் இந்தியன் பிறீமியர் லீக். ஒவ்வொரு வருடமும் வெகுவிமர்சையாகவும், விறுவிறுப்பாகவும் நடந்துவரும் இந்தத் தொடர் ஏனோ தெரியவில்லை கடந்த இரு ஆண்டுகளாக பல ரசிகர்களை ஏமாற்றிவிட்டது அல்லது தவறவிட்டது எனலாம். ஆம், ஐ.பி.எல். தொடரின் நட்சத்திர அணியான சென்னை மற்றும் ராஜஸ்தான் ஆகிய அணிகளுக்கு இரண்டு வருடங்கள் தடை விதிக்கப்பட்டமையே இதற்கான காரணம்.

2015ஆம் ஆண்டு ஜூலை மாதம் சென்னை அணிக்கு 2 வருடத்தடை என அறிவித்ததும், சென்னையின் ரசிகர்கள் தமது அணி மீண்டும் வரவேண்டும், தடையை நீக்க வேண்டும் என அதற்கான கையெழுத்துவேட்டை என அந்த முடிவுக்கு எதிராகப் போர்கொடி தூக்கினர். இருந்தபோதும், அவை தோல்வியிலேயே முடிந்தன. பலர் சென்னை அணியின் தலைவர் டோனியை வேறோர் அணியில் பார்க்க முடியாது எனவும் சென்னை அணியின் வீரர்கள் பிரிந்து விளையாடுவது நடக்கக்கூடாது எனவும் தமது உணர்வை வெளிப்படுத்தினர். இருந்தும் அவை அனைத்தும் நடந்தேறின.

### தடை முடிந்ததும் கொண்டாட்டங்கள்

2017 ஜூலை தடை நீக்கியதுமே சமூக வலைத்தளங்களில் ரசிகர்கள் சென்னையின் வருகையைக் கொண்டாடத் தொடங்கி விட்டனர். நடப்பு வருடத்தில் ஐ.பி.எல். ஏலம் நிறைவடைந்து சென்னை அணியின் முன்னைய வீரர்கள் ஓரளவு திரும்பக் கட்டமைக்கப்பட்டதும் கொண்டாட்டங்கள் மேலும் வலுப்பெற்றன. ஒவ்வொரு அணியும் மூன்று வீரர்களை மட்டுமே தக்க வைக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டதும் டோனி முதலாவது வீரராகத் தக்க வைக்கப்பட்டார். ரெய்னாவை இரண்டாவது வீரராகத் தக்கவைத்தது சென்னை. பிராவோ மூன்றாவது வீரராகத் தக்கவைக்கப்பட்டார்.

### அனுபவ வீரர்கள் நிறைந்த அணி

தக்கவைத்த வீரர்களைத் தொடர்ந்து நடைபெற்ற ஏலத்தில் பல அனுபவம் வாய்ந்த வீரர்களைத் தனதாக்கியது சென்னை சுப்பர் கிங்ஸ். அந்த அணிக்காக முதல் வருடங்களில் விளையாடிய வீரர்களை மீண்டும் சேர்ப்பதில் அதிக கவனம் எடுத்தது. அவ்வாறே பிளாசிஸ், முரளிவிஜய், வற்சன், யாதவ், ஹர்பஜன் சிங், தாகிர் உள்ளிட்ட சிறந்த வீரர்களைக் கொண்டு அணி கட்டமைக்கப்பட்டது.

### மிகவும் பலம்மிக்க துடுப்பாட்ட வரிசை

சென்னை அணியின் துடுப்பாட்ட வரிசையைப் பொறுத்த வரையில் மிகவும் பலமான அனுபவம் வாய்ந்த துடுப்பாட்ட வரிசையாகக் காணப்படுகிறது அது. முரளிவிஜய், வற்சன், பிளாசிஸ், ரெய்னா என அனுபவம் வாய்ந்த ஆரம்பத் துடுப்பாட்ட வரிசையையும், ராயுடு, கேதர், பில்லிங்ஸ், ஜெகதீசன் போன்ற திறமையான மத்தியவரிசையும் டோனி, ஜடேயா, பிராவோ, என அதிரடி வீரர்களையும் கொண்டு காணப்படுகின்றது.

### வேகப்பந்துவீச்சு வரிசை அனுபவம் இல்லாதது



சென்னை சுப்பர் கிங்ஸின் பந்துவீச்சு வரிசை ஒட்டுமொத்தமாக நோக்கினால் சிறப்பு மிக்கதாகத் தோன்றினாலும் வேகப்பந்து வீச்சு என்று வருகின்ற போது அது, அனுபவம் அற்றதாகவே காணப்படுகிறது. வூட், நெக்டி ஆகிய இரு வீரர்களைத் தவிர ஏனைய வீரர்கள் பன்னாட்டு அறிமுகத்தை மிகையாகப் பெற்ற வேகப்பந்து வீச்சாளர்களாக இல்லை. சென்னை மைதானம் சுழலுக்குச் சாதகமானது என்பதனால் மிகப் பலமான சுழல் பந்து வீச்சாளர்களைக் கொண்டு அணி கட்டமைக்கப்பட்டுள்ளமை ஏற்கக்கூடியதாக அமைகின்ற போதிலும், பிற அணிகளின் ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமாக அமைந்தால் சென்னையின்பாடு திண்டாட்டம்தான். அவ்வாறு வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமாக ஆடுகளம் அமைந்துவிட்டால் சுமார் 8 பந்துப் பரிமாற்றங்களை வீச சென்னை பெரிதும் சிரமப்படலாம்.

### களத்தில் 'கப்டன்கூல்'

எது எவ்வாறாயினும், சென்னை அணி மீண்டும் வருகின்றது என்பதுடன் டோனி மீண்டும் தலைவராகின்றார் என்பது இரசிகர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியே. ரசிகர்களால் அன்பாக "தல டோனி" என அழைக்கப்படும் டோனி மீண்டும் தலைவராகச் சென்னை அணியை வழிநடத்தத் தயாராகி விட்டார். சென்னை சுப்பர் கிங்ஸின் ரசிகர்களும் அந்த அணிக்காக விசில் போடத் தயாராகிவிட்டனர்.

*ஆக, வந்திட்டோம்னு சொல்லு...*
*திரும்ப வந்திட்டோம்னு சொல்லு...*
*இரண்டு வருசத்துக்கு முன்னர்*
*எப்பிடிப்போனமோ அப்பிடியே திரும்ப*
*வந்திட்டோம்னு சொல்லு...*

# பெங்களூர் அணிக்கே இம்முறை கிண்ணம்

கோக்லியின் கண்டுபிடிப்பு இது



நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் அணியே கிண்ணம் வெல்லும் என்று தெரிவித்தார் அந்த அணியின் தலைவர் விராட் கோக்லி.

பெங்களூரின் பயிற்சி முகாமையடுத்து நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

"பெங்களூர் அணியில் 10 ஆண்டுகளாக விளையாடி வருகிறேன். 3 முறை இறுதியாட்டத்துக்குள் நுழைந்தும் கிண்ணம் வெல்லவில்லை. இம்முறை கிண்ணம் வெல்ல வேண்டும் என்ற வேட்கையுடன் இருக்கிறேன். 100 சதவீதம் எனது பங்களிப்பை அளிப்பேன். கடந்த காலங்களில் பெங்களூர் அணியின் துடுப்பாட்ட வரிசை வலுவாக இருப்பதைப் பார்த்து வருகிறோம். இந்த முறை ஏலத்தில் பந்துவீச்சிலும் பலம் வாய்ந்த வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இதனால் எமக்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன" என்று கோக்லி மேலும் தெரிவித்தார்.

(ம)

# சென்னை வெல்லும்

*என்கிறார் ஹர்பஜன்*

நடப்புவருட ஐ.பி.எல். தொடரின் முதலாவது ஆட்டத்தில் சென்னை, மும்பை அணிகள் நாளை மோதவுள்ள நிலையில், இந்த ஆட்டத்தில் சென்னை வெற்றி பெறும் என்று தெரிவித்தார் மும்பை இந்தியன்ஸ் அணியின் முன்னாள் வீரரும் நடப்பு வருட ஐ.பி.எல்லில் சென்னையின் சார்பாகக் களமிறங்கப் போகிறவருமான ஹர்பஜன்.

10 சீசனில் மும்பை அணிக்காக விளையாடியுள்ளேன். மும்பை அணியின் திட்டமிடுதல் குழுவில் நான் இருந்திருப்பதால் மும்பை இந்தியன்ஸ் எப்படி அணுகும் என்பது பற்றி எனக்குக் கொஞ்சம் கூடுதலாகவே தெரியும். அதை வைத்துத்தான் சென்னை வெற்றி பெறும் என்று உறுதியாகச் சொல்கிறேன் என ஹர்பஜன் மேலும் தெரிவித்தார். (ம)

# சென். அன்ரனிஸ் வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், ஏப். 6

குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணி முன்னேற்றம் கண்டது.

கொலின்ஸின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் உடுப்பிட்டி யூத் அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் மோதியது. ஆட்டத்தின் 10ஆவது மற்றும் 16ஆவதுநிமிடங்களில் சென். அன்ரனிஸின் வீரர்களான கலிஸ்ரன், கிறோசாந் இருவரும் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் பதிவு செய்தனர். முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது சென். அன்ரனிஸ்.



இரண்டாவது பாதியின் 25ஆவது நிமிடத்தில், சென். அன்ரனிஸ் அணியின் டிவின்சன் தனது அணியின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார். 28ஆவது நிமிடத்தில் யூத் அணியின் சார்பாக கோலொன்று பதிவாக முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் சென். அன்ரனிஸ் அணி வெற்றி பெற்று முன்னேற்றம் கண்டது. ஆட்டநாயகனாக டிவின்சன் தெரிவானார். (ம-422)



நடப்பு வருட ஐ.பி.எல். தொடரின் முதலாவது ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிகள் நாளை மோதவுள்ள நிலையில், இந்த ஆட்டத்துக்காக மும்பைக்குச் சென்றுள்ள சென்னை அணி நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டது. (ம)

# கலாநிதி அணி சம்பியனானது

யாழ்ப்பாணம், ஏப். 6

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு காரைநகர் களபூமி விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் காரைநகர் கலாநிதி விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.

காரைநகர் களபூமி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் காரைநகர் கலாநிதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து காரை சலஞ்சேர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய காரை சலஞ்சேர்ஸ் அணி 9.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரகுலன் 11 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் காரைநகர் கலாநிதி விளையாட்டுக் கழக அணியின் சார்பில் கோகுலன் 4 இலக்குகளையும், பிரகாஸ் 3 இலக்குகளையும், மேனன், தர்சன் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

40 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய காரைநகர் கலாநிதி விளையாட்டுக் கழக அணி ஓர் இலக்கை இழந்து வெற்றிபெற்றது. சந்திரகுமார் 16 ஓட்டங்களையும், கோகுலன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

(ம-23)



# கரணவாய் மத்திய அணி மகாத்மாவை வீழ்த்தியது



யாழ்ப்பாணம், ஏப். 6

கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் கரணவாய் மத்திய அணி அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.

கொலின்ஸின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கரணவாய் மத்திய அணியை எதிர்த்து சாவற்கட்டு மகாத்மா அணி மோதியது. ஆட்டத்தின் 19ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தி கரணவாய் மத்தியின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் நிமல். வேறெந்த மாற்றங்களும் நிகழவில்லை. முதல் பாதியின் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது கரணவாய் மத்திய அணி.

இரண்டாவது பாதியில், ஆட்டத்தின் 27ஆவது நிமிடத்தில் மகாத்மா அணியின் தனுசன் ஒரு கோலைப் பதிவுசெய்து கோல்களின் எண்ணிக்கையை சமநிலைப்படுத்தினார். அதன் பின்னர் ஆதிக்கம் செலுத்திய கரணவாய் மத்தி அணிக்கு 39ஆவது நிமிடத்தில் நிசாளன், 40ஆவது நிமிடத்தில் தர்சன் ஆகியோர் அடுத்தடுத்து கோலைப் பதிவுசெய்ய ஆட்ட நேர முடிவில் கரணவாய் மத்தி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்ட நாயகனாக கரணவாய் மத்திய அணியின் நிசாளன் தெரிவு செய்யப்பட்டார்.

(ம-422)

# வலைப்பந்தாட்டக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப். 6

இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தால் ஏப்ரல் மாத இறுதிப்பகுதியில் வலைப்பந்தாட்ட ஏ, பி, சி தர நடுவர்களுக்கான பரீட்சை நடத்தப்படவுள்ளது. இந்தப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்திகளுக்கான ஆயத்த வகுப்புகளும் வலைப்பந்தாட்டம் தொடர்பான கருத்தரங்கும், யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

(ம-23)



# கோப்பாய் பிரதேச செயலகம் கரப்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ்ப்பாண மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவால்நடத்தப்பட்ட பிரதேசசெயலகஅணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில்கோப்பாய்பிரதேசசெயலகஅணிசம்பியனானது. ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய கோப்பாய் பிரதேச செயலக அணி 25:19, 25:10, 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று செற்களையும் கைப்பற்றி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது. (ம-422)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 6

**கால்பந்தாட்டச் சம்மேளன கால்பந்தாட்டத் தொடர்**

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டமொன்று அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில், ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி மோதவுள்ளது. யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில், குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கொலின்ஸின் கால்பந்தாட்டம்**

கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன். இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து சிறி அம்பாள் அணி மோதவுள்ளது.

**அரியாலையின் கரப்பந்தாட்டம்**

அரியாலையின் 99ஆவது சுதேசிய விழாவை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் 'ஏ' பிரிவினருக்கான ஆட்டங்கள் அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி யுத் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணி மோதவுள்ளது.

**செந்தமிழ் வி.க. கால்பந்தாட்டம்**

வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சுப்பர் றாங் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். யூட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சந்திரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)




# றோமாவை துவைத்தது பார்சிலோனா வி.கழகம்





ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அபார வெற்றிபெற்றது பார்சிலோனா.

பார்சிலோனாவை எதிர்த்து றோமா மோதியது. ஆட்டத்தின் முதல் 30 நிமிடங்கள் வரையில் இரண்டு அணிகளும் கோல் எதையும் பதிவுசெய்யவில்லை. ஆட்டத்தின் 38ஆவது நிமிடத்தில் றோசி முதலாவது கோலைப் பதிவுசெய்தார். வேறெந்த மாற்றமும் இல்லாமல் 1:0 என்று பார்சிலோனாவின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதலாவது பாதி.

55ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார் கொஸ்டாஸ். பக்கியூ 59ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார். 80ஆவது நிமிடத்தில் றோமாவின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் எடின். தற்போதுகோல்கணக்கு 3:1. 88ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் நான்காவது கோலைப் பதிவுசெய்தார் சுவாரஸ். முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா அணி வெற்றிபெற்றது.

(ம)

## தரப்படுத்தலில் நடால் மீண்டும் முதலிடம்



பன்னாட்டு ரென்னிஸ் சம்மேளனத்தின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு தரப்படுத்தலில் முதலிடம் பிடித்தார் ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால்.

அமெரிக்கப் பகிரங்கத் தொடருக்கான முன்னாயத்தத் தொடராகக் கருதப்படும் இன்டியன் வேல்ஸ், மியாமி தொடர்களில் பெடரர் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தவில்லை. தொடரின் ஆரம்பத்திலேயே அவர் தரப்படுத்தலில் மிகவும் பின்தங்கிய வீரர்களிடம் தோற்று வெளியேறினார். இதையடுத்தே பெடரர் சரிவைச் சந்திக்க நடால் முதலிடம் பிடித்தார். கடந்த சில வாரங்களுக்கு முன்னரேயே நடாலிடம் இருந்து முதலிட அந்தஸ்தை பெடரர் தட்டிப் பறித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம)

A/L வரலாறு - 2020
M. பத்மன் M.A.(History)
▼ புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன
▼ ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்.
கற்பிக்கும் இடங்கள்
D.M.I
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்
உயர்கலைக்கல்லூரி குளப்பிட்டி.

## ஆஸியின் நடத்தையில் வித்தியாசம் உண்டாகும்

### பெய்ன் உருக்கம்

ஆஸ்திரேலிய அணியின் நடத்தையில் எதிர்காலத்தில், மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்படும் என்று தெரிவித்தார் அந்த அணியின் தலைவர்ரிம்பெய்ன். ஆஸ்திரேலிய அணியின் வீரர் களான சிமித், வோர்ணர், பான்குரொப்ட் ஆகி யோர் பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய குற்றத்தில் சிக்கி தடைபெற்றுள்ள நிலை யில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே பெய்ன் இவ்வாறு தெரிவித்தார்.

"நாங்கள் மாறிவிட்டோம். எமது நடத்தையில் நிச்சயம் பெரிய மாற்றம் ஏற்படும். இனிஎன்ன நடக்கப்போகிறது என்பதைச் சிந்திப்போம். அனைவரும் நடந்தவற்றுக்காக வருந்துகிறோம். மக்கள் வெறுப்படைந்துள்ளனர். ஆனால் அவர்கள் எதிர்காலத்தில் மிகப்பெரும் மாற்றத்தைக் கண்டுகொள்வார்கள். திறமைஉள்ளது, அதைமுறையானவழியில் வளர்த்தெடுத்தால் போதும்" என்று பெய்ன் மேலும் தெரிவித்தார். (ம)



## ஸ்ரீவ் சிமித் முதலிடம் நெருங்குகிறார் கோக்லி

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் டெஸ்ட் ஆட்டங்களுக்கான துடுப்பாட்ட வீரர்கள் தரப்படுத்தல் நேற்று வெளியிடப்பட்டது. ஆஸ்திரேலிய அணியின் சிமித் முதலிடத்தில் உள்ளார். இந்திய அணியின் தலைவர் கோக்லி சிமித்தை மிகவும் நெருங்கி வருகிறார். 929 புள்ளிகளுடன் சிமித் முதலிடத்தில் உள்ளார். கோக்லி 912 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். இங்கிலாந்து அணித் தலைவர் ரூட் 867 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், நியூசிலாந்து அணித் தலைவர் வில்லியம்சன் 847 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், ஆஸ்திரேலிய வீரர் வோர்ணர் 820 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே, வில்லியர்ஸ், புஜாரா, எல்கர், மார்க்ரம், அசார் அலி ஆகியோர் உள்ளனர். தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் ஓர் ஆண்டு தடை பெற்றுள்ளார் சிமித். அவர் தனது தடையை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்போவதில்லை என்றும் அறிவித்துள்ளார். இதனால் அடுத்த ஒரு வருடத்துக்குள் அவரால் பன்னாட்டு அரங்கில் களமிறங்க முடியாது. எனவே கோக்லி விரைவில் முதலிடம் பிடிக்க வாய்ப்புக்கள் மிக அதிகம் என்றே கருதப்படுகிறது.

(ம)

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம். கே.கே. எஸ் வீதி, சுன்னாகம்.
(இரு இடங்களிலும்)
A/L 2020
கலை, வர்த்தகப்பிரிவு
யாழ்.மாவட்டத்தின் முன்னணி ஆசிரியர் குழுவினால்
புதிய பிரிவு ஆரம்பம் 07.04.2018 சனிக்கிழமை
யாழ். நகரில் கலை, வர்த்தகப்பிரிவு காலை 8.00 a.m
சுன்னாகத்தில்
கலைப்பிரிவு - 7.00 a.m
வர்த்தகம் - 2.00 p.m
சகல பாடங்களும் ஆரம்ப அலகில் இருந்து ஆரம்பமாகின்றன.
பொருளியல் - Mr.S.மகேந்திரன், Mr.R.தர்ஷன்
கணக்கீடு - Mr.B.முகுந்தன்
வணிகக்கல்வி - Mr.S.பிரதீபன்
தமிழ் - Mr.N.சத்தியவேந்தன்
இந்துநாகரீகம் - Mr.P.ஜோதீஸ்வரன், Mr.A.A. மேனன்
அளவையியல் - Mr.N. ஜெயசுரேஸ், Mr.S.சயந்தன்
புவியியல் - Mr.P.S.குமரன்
வரலாறு - Mr.K.சுதன்
அரசியல் - Mr.S.கோகுலன்
ஊடகவியல் - Mr.N. சுஜிதரன்
நாடக அரங்கியல் - Mr.S.ஜெயசுதன்
இந்துசமயம் - Mr.S.மனோஜ்
விவசாயம் - Mr.S.சிவசஜீவன்
கிறிஸ்தவநாகரீகம் - Mr.A.J யுபின்சன்
மனைபொருளியல் - Mrs.S.றஜிதா
சங்கீதம் - Mrs.A.குமுதினி
ஆங்கிலம் - Mr.N. நிசாந்தன்
I.C.T - Mr.T.சுதர்சன்
Note : எமது கிளை நிறுவனமான BARATHY சித்தன்கேணியிலும் இதே திகதியில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

CHEMISTRY WORLD
(A/L கணித, விஞ்ஞானப்பிரிவு)
இரசாயனவியல் ஆசிரியர்
Mr. S. Sureshkumar
B.Sc(Hons) PGDE MBA (Lon)
ஆரம்பம் :- 09/04/2018 - 03.30pm
2018, Day Batch PaperClasses with Revision (30 model + Final Paper)
2019 - Physical Chemistry & Paper Classes
2020 - Chemical calculation & Paper Classes
No. 198, Navalar Road, Jaffna.
077 555 9028 (புகையிரதக்கடவை அருகில்)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
வடமாகாண முகாமைத்துவ உதவியாளர்
திறந்த பரீட்சைக்கு
(பிரிவு I) ஞாயிறு 1.00 - 4.30
(பிரிவு II) செவ்வாய், வியாழன் 2.30 - 5.30
மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு
ஞாயிறு 10.00-2.00
வடமாகாண சாரதி முன்பள்ளி ஆசிரியர்
ஞாயிறு 1.00 - 5.00
076 688 3394
D.M.I
(வெலிங்ரன் சந்தியில SDB வங்கி எதிரில் டானியல் கட்ட 3ஆம் மாடி)

விஸ்டம் தொழிநுட்பக் கல்லூரி
அனுபவம் மிக்க அதே ஆசிரியர்களின் வழிகாட்டலில்
A/L தொழிநுட்ப பிரிவு
2020, 2019 } புதிய பிரிவு
2018 - வினாத்தாள் மீட்டல், செய்முறை பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம் 0772487774

Techno World
(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)
A/L தொழில்நுட்பப் பிரிவு
A/L 2019 மாணவர்களின் வட, கிழக்கு மாகாணங்களில் பாடசாலையில் நடைபெற்ற பரீட்சையில் முதலிடம் வகிக்கும் எமது மாணவர்களின்
(இதுவரை கிடைக்கப்பெற்ற பெறுபேறுகள்)

| பாடம் | பெயர் | புள்ளிகள் |
|---|---|---|
| SFT | S.லாவண்யா | 97 |
| | J.ஜெனுசன் | 91 |
| | N.கௌதமன் | 86 |
| | பவதாரணி | 82 |
| | ஜெனார்த்தனி | 77 |
| | தனஞ்செயன் | 70 |
| Bio-Tec | சந்துஜா | 91 |

(C-2107)
A/L 2020
புதிய பிரிவு - 07.04.2018
தொடர்பு: 077 017 5346
கிளைகள்: புத்தூர் (புத்தூர் சோமஸ்கந்தா)

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம். கே.கே. எஸ் வீதி, சுன்னாகம்.
(இரு இடங்களிலும்)
A/L 2020
தொழில்நுட்பபிரிவு
தொழில்நுட்ப கல்லூரி பிரபல விரிவுரையாளர்களும் யாழ். பிரபல கல்லூரி ஆசிரியர்களும் இணைந்து கற்பிக்கின்றனர்.
பொறியியல் - Mr.ஜெயக்குமார், Mr.காந்தரூபன்
விஞ்ஞான முறைமைகள் - Mr.ரவீந்திரன், Mr.செந்தூரன்
உயிர்முறைமைகள் - Mr.நிறோஜன், Mr.அருள்நேசன்
ஊடகவியல் - Mr.N. சுஜிதரன்
விவசாயம் - Mr.S.சிவசஜீவன்
I.C.T - Mr.T.சுதர்சன்
ஏனைய பாடங்கள் பொருளியற் கல்லூரி விரிவுரையாளர்களினால் கற்பிக்கப்படுகிறது.
புதிய பிரிவு ஆரம்ப அலகில் இருந்து ஆரம்பமாகின்றது.
யாழ்.நகரில் - 07.04.2018 சனி 8.00 a.m
சுன்னாகத்தில் - 09.04.2018 திங்கள் 4.00 p.m
உங்கள் அனுமதிகளை இருஇடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.